காரவான் கீதங்கள்

அல்லாமா இக்பால் கவிதைகள்

தமிழில்

பண்ணாமத்துக் கவிராயர்

பதிப்பும் அறிமுகமும்

எம்.எஸ்.எம். அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரவான் கீதங்கள்: அல்லாமா இக்பால் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரவான் கீதங்கள்

அல்லாமா இக்பால் கவிதைகள்

விக்டர் கியர்னனின்
ஆங்கிலம் வழியாகத்

தமிழில்
பண்ணாமத்துக்கவிராயர்

பதிப்பும் அறிமுகமும்
எம்.எஸ்.எம். அனஸ்

அல்லாமா இக்பால் கலாசார ஆய்வு நிறுவனம்
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரவான் கீதங்கள்: அல்லாமா இக்பால் கவிதைகள்
எழுதியது விக்டர் கியர்னனின் ஆங்கிலம் வழியாகத் தமிழில் பண்ணாமத்துக்கவிராயர்

பதிப்பும் அறிமுகமும் எம்.எஸ்.எம். அனஸ்

முதற்பதிப்பு: 2016

வெளியீடு
அல்லாமா இக்பால் கலாசார ஆய்வு நிறுவனம்
இல. 32 A, கணல் வீதி, புத்தளம்

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

Poems of Caravan
by Allama Iqbal
Translated by Pannamattuk Kavirayar
Edited by M.S.M. Anes

First edition : 2016

Published by Iqbal Cultural and Research Organization
No. 32A, Canal Road, Puttalam

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

நன்றியுரை 7
முன்னுரை 10
மொழிபெயர்ப்பாளர் உரை 14
இக்பால் சிந்தனை - ஓர் அறிமுகம் 16
கஸல்கள் 41-73

கவிதைகள்

1. ஆறு ருபய்யாத்கள் 74
2. குர்துபா பள்ளிவாசல் 80
3. இறைவன் சந்நிதானத்தில் லெனின் 93
4. தேவதூதர்களுக்கு இறைவன் கட்டளை 97
5. அடிமைப்புத்தி 99
6. ஸாகி! 100
7. விடிவெள்ளி 108
8. மூன்று ருபய்யாத்கள் 111
9. முடிவுரை 112
10. சந்திரன் 113
11. சபிக்கப்பட்டோரின் பிரார்த்தனை 116
12. சாத்தானின் பாராளுமன்றம் 118

ஐம்பதாண்டு நினைவுக் கட்டுரை
மகாகவி இக்பாலும் இஸ்லாமும் 131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுரை

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் அல்லாமா இக்பாலின் சிந்தனைகளும், கவிதைகளும் இன்றும் அழியாத இலக்கியங்களாக மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளன. தமிழ்நாட்டில் ஆர்.பீ.எம். கனி, செய்யது இப்றாஹீம், அப்துல் வஹாப், இலங்கையில் கவிஞர் அப்துல் காதர் லெப்பை, அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்ற முன்னோடி ஆய்வாளர்களும், கவிஞர்களும் இக்பாலின் சிந்தனைகளையும், கவிதைகளையும் தமிழ் பேசும் உலகிற்கு தந்தனர். ஒரு தொடர் பிரவாகம் போல் இன்றும் இக்பால் சிந்தனைகள் தமிழை அலங்கரித்து வருகின்றன. இருந்தபோதும் காத்திரமான செயற்பாடு கள் குறைவடைந்திருப்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

இலங்கையில் கொழும்பு ஸஹிரா கல்லூரியில் 1960களில் ஏ.எம்.ஏ. அஸீஸின் வழிகாட்டலில் நிகழ்ந்து வந்த இக்பால் நினைவு விழாக்களும், இக்பால் நினைவுச் சொற்பொழிவுகளும், இக்பால் குறித்த நூல் வெளியீடு களும் ஒரு பொற்கால நினைவுகள் போன்றவை. இலங்கை முஸ்லிம் சிந்தனை வளர்ச்சியில் ஒரு முக்கிய தாக்கத்தைச் செலுத்தியதில் இக்காலப் பகுதிக்கும் ஒரு பங்குண்டு.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அந்த முயற்சிகளும் கைவிடப்பட்டிருந்தமை கவலைக்குரியதாகும். எனினும், சில வருடங்களாக ஸஹிராவின் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் புதிய தலைமைத்துவமும், அதற்கு ஆதரவளிக்கும் அமைப்புக்களும் கொழும்பு ஸஹிராவில் மீளவும் இக்பால் நினைவு தின மரபினை உயிரூட்டி நிகழ்ச்சிகளை நடத்தி வருவது மகிழ்ச்சிக்குரியது. இக்பாலின் கருத்துக்கள் இளைய சமுதாயத்தினைச் சென்றடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

இந்தப் பின்னணியில் பண்ணாமத்துக் கவிராயரின் இக்பால் கவிதைகளின் தமிழ் வடிவம் தமிழ் பேசும் உலகிற்கு மீண்டும் இக்பாலைக் கவிதை வடிவில் அறிமுகப்படுத்துகின்றது. புதிய கருத்துக்களைத்தேடும் நோக்கில் இக்பாலின் சிந்தனைகளும், அவரது கவிதைகளும் மேலும் மேலும் படிக்கப்பட வேண்டியவை.

பிற்போக்கு வாதத்தையும், பழைமை வாதத்தையும் இக்பால் கண்டித்தார். புது யுகத்திற்கான மறுமலர்ச்சி சிந்தனைகள் அவரது கவிதைகளின் வேர்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும், குர்ஆன் கருத்துக் களுக்கான நவீன விளக்கங்களையும் இக்பாலின் சிந்தனைகள் எமக்குத் தருகின்றன.

ஏற்கனவே சில மொழிபெயர்ப்புக்கள் தமிழில் வெளிவந்துள்ள போதும் புதிய மொழிபெயர்ப்புக்கள் இக்பாலை மேலும் புரிந்து கொள்ளப் பேருதவியாய் அமையும். இந்த வெளியீட்டு முயற்சி 2010 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. பண்ணாமத்துக் கவிராயரின் மொழிபெயர்ப்பின் ஊடாக இக்பால் கவிதைகள் தமிழில் கவிதை வடிவம் பெறவேண்டும் என்பதே எனது எண்ணமாக இருந்தது.

வசன வடிவான மொழிபெயர்ப்புக்களில் இருந்து இக்பாலை கவிதை மொழிபெயர்ப்பாக பண்ணாமத்தார் வழங்கியுள்ளார். இக்பாலின் உணர்ச்சி களையும், ஆழமான தத்துவ எண்ணங்களையும் தமிழ் கவிதையில் தரவேண்டும் என்பது தான் எமது நோக்கம்.

பாரசீகம், உருது, பஞ்சாபி மொழிகளில் இக்பாலுக்கு இருந்த பாண்டித் தியமும், ஆழமான இஸ்லாமிய அறிவும், மேற்கத்தேய கீழைத்தேய சிந்தனைகள் மீதான அவரது பார்வைகளும், மனித வாழ்வின் நோக்கம், வெற்றி, மாண்பு, கிலேசம், சலனம் பற்றிய அவரது சிந்தனைகளும் மனித அகம் (குத்இ) பற்றி அவர் முன்வைக்கும் விளங்கங்களும் மற்றொரு மொழி வடிவத்தில் முழுமையான அனுபவத்தைக் கொண்டு வருமா என்று கேள்வி எழும்பலாம். அது இயல்பானது. ஆயினும், இக்பாலின் சிந்தனை மற்றும் கவித்துவச் செல்வாக்கிலிருந்து முஸ்லிம் சமூகம் எவ்வகையிலும் தன்னைத் தனிமைப்படுத்த முடியாது.

இக்பால் மீதும், அவரது சிந்தனைகள் மீதும் ஆழ்ந்த அபிமானம் கொண்ட எஸ்.எம். பாரூக் (பண்ணாமத்துக் கவிராயர்) இதை ஒரு சவா லாக எடுத்துக் கொண்டார். இக்பால் கவிதைகள் தமிழ்க் கவிதை மொழி பெயரப்புக்களாக மறு வடிவம் பெறுவதற்கு பாரூக்கின் இந்தக் கவிதைகள் ஒரு புது உந்துதலைத் தரும் என எதிர்பார்க்கலாம்.

பண்ணாமத்துக் கவிராயர் என்றால் மாத்தளைக் கவிராயர் என்பது பொருள். பண்ணாமம் (மாத்தளை) என்பதில் அவருக்கு ஆழமான பற்று இருந்தது. எஸ்.எம். பாரூக், கவிதை மொழிபெயர்ப்பில் அதிகம் கவனம் செலுத்திய கவிஞர். பலஸ்தீனக் கவிதைகளைத் தழிழுலகிற்கு அறிமுகப் படுத்திய முன்னோடிகளில் ஒருவர்.

1960களின் பிற்பகுதியில் சமூக விடுதலை உணர்வோடு எழுத்துப் பணியில் ஈடுபட்ட ''புதிய அலை'' முஸ்லிம் எழுத்தாளர் பரம்பரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.எம். பாரூக் ஒரு முக்கியமான பாத்திரத்தை ஏற்றிருந்தார். விடுதலை உணர்வும், சம உடமை வாதக் கருத்துக்களும் சமூக நோக்கும் அவரது கவிதைகளுக்கு ஒரு பிரத்தியேகமான சமூக அங்கீகாரத்தை வழங்கியிருந்தன. இந்தப் பின்னணியில் தான் இக்பால் கவிதைகள் சிலவற்றை யாவது பாரூக்கின் மொழிபெயர்ப்பாகப் பார்க்க வேண்டும் என்ற அவா எழுந்தது.

நூல் வெளியீடு என்ற முயற்சி ஆரம்பமான போது மாத்தளையில் வெளியிடுவதற்கு ஆதரவை நாடினேன். பின்னர் கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் ஆரம்பமாகின அதைத் தொடர்ந்து நண்பர்களான கவிஞர் மேமன்கவி, தினகரன் எம்.ஏ.எம். நிலா, கவிஞர் ஜின்னா ஷரிபுதீன், திக்வல்லை கமால், கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன் ஆகியோரும் இம்முயற்சி வெற்றி பெறுவதற்கு பல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

எனினும், முன்னேற்றங்கள் மிக மந்த கதியிலேயே நடைபெற்று வந்தன. கட்டாரில் இருந்து வந்த எழுத்தாளர் லரீனா ஹக்கின் ஆர்வம் இந்த முயற்சியில் ஒரு திருப்பமாக அமைந்தது. எமது நிதி தேடும் முயற்சியில் லரீனாவும் பங்கேற்றார். அவரது ஆலோசனைப்படி உதவி வழங்க முன்வந்த கவிஞர் இளவாலை தியாகராஜா, விஜயேந்திரன், முஹம்மது அன்பாஸ், ஸைபுல் இஸ்லாம், முஹம்மது ரிஹாம் ஆகியோருக்கு நன்றிகள் உரித்தாக வேண்டும்.

பின்னர் எம்.ஏ.எம். நிலாம் அடுத்தகட்ட நகர்வுகளுக்கு உயிர் ஊட்டினார். அனைவருக்கும் மிண்டும் எனது நன்றிகள். அல்லாமா இக்பால் மீதும் எஸ்.எம். பாருக் மீதும் அன்பு கொண்டவர்களும், இலக்கிய நண்பர்களும் இம்முயற்சி வெற்றி பெறப் பல வழிகளில் உதவியாக இருந்தனர்.

இந்த நூல் தொடர்பான தகவல்களையும், பிரதிகளையும் பாதுகாத்து இந்த நூல் முயற்சிக்கு இறுதிவரை உதவியாய் இருந்த மனைவி முப்லிஹா அனஸ் அவர்களுக்கும், இதன் பிரதிகளைக் கணினிப்படுத்துவதில் உதவிய எனது மாணவர்களான இயாஸ், பிர்னாஸ், ஜெப்ரான் ஆகியோருக்கும் நன்றிகள்.இதை அழகாக அச்சிட்டுத் தந்த குமரன் நிறுவனத்தினருக்கும் எனது நன்றிகள் உரித்தாக வேண்டும். இப்பணி சிறப்பாக நிறைவேற உதவிய எல்லா நண்பர்களுக்கும், இலக்கிய உள்ளங்களுக்கும் மீண்டும் எனது நன்றிகள்.

எம்.எஸ்.எம் அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

பண்ணாமத்துக் கவிராயர் (எஸ்.எம் பாரூக்) மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மாத்தளையின் பழைய பெயரான பண்ணாமம் என்பதை தனது புனைபெயராக அவர் பதிவுசெய்து கொண்டார். இவரின் இயற்பெயர் செய்யத் முகம்மது பாரூக். மாத்தளை ஸாஹிராவின் பழைய மாணவர்.

தொழில் ரீதியில் ஆங்கில ஆசிரியர். சுய கவிதை ஆக்கங்களிலும் கட்டுரை ஆக்கங்களிலும் ஈடுபட்டு வந்தபோதும் மொழிபெயர்ப்பு எஸ்.எம். பாரூக்கின் பிரதான பங்ளிப்பாக இன்று வரை நீடித்து வருகின்றது. எழுத் தாளரும், பத்திரிகையாளருமான ஏ.ஏ. லத்தீப் உருவாக்கிய ''இன்ஸான்'' பத்திரிகைப் பண்ணையின் பிரதான ஆளுமைகளில் பாரூக்கும் ஒருவர்.

சையத் முஹமத், சுல்தான் பீவி தம்பதியினருக்கு 1940 ஆண்டு ஐனவரி முதலாம் திகதி அன்று மாத்தளையில் எஸ்.எம். பாரூக் பிறந்தார். அவரது கல்வி 1950 ஆம் ஆண்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தொடங்குகின்றது. பின்னர் மாத்தளை ஸாஹிராக் கல்லூரியில் தனது அடுத்தக் கட்ட கல்வியை அவர் தொடர்ந்தார்.

ஆங்கில ஆசிரியராக உல்பத்தப்பிட்டிய, பல்குன்புற மற்றும் கெக்கிராவ பாடசாலைகளிலும், 1960-1969 களில் மாத்தளை ஸாஹிராக் கல்லூரியிலும் பணிபுரிந்தார். இதற்கு இடையில் 'இன்ஸான்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர்களில் ஒருவராக அப் பத்திரிகை வளர்ச்சியில் இரவு பகலாகப் பணியாற்றினார். இன்ஸானில் பணியாற்றி வந்த காலத்தில் 1976 இல் ஆமினா உம்மாவை திருமணம் செய்தார்.

இலங்கையின் எல்லாப் பிரபல தினசரிகளிலும் கலை இலக்கிய இதழ் களிலும் அவரது மொழி பெயர்ப்புக் கவிதைகளும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. தாரகை, தேசாபிமானி, மல்லிகை, இன்ஸான், செய்தி, அஷ்ஷுரா, அக்னி, அலை, திசை, தினகரன், வீரகேசரி, தினக்குரல் போன்றவற்றில் அவரது எழுத்ததாக்கங்கள் பிரசுரமாகி உள்ளன. அண்மைக்கால மொழிபெயர்ப்புக்களும், மொழிபெயர்ப்புக் கவிதைகளும் ''யாத்திரா'' இதழில் வெளிவந்தன.

பலஸ்தீனக் கவிதைகள் உட்பட ஏராளமான கவிதைகளை பாரூக் மொழிபெயர்த்துள்ளார். அல்லாமா இக்பால், நஸ்ருல் இஸ்லாம், பைஸ் அகமட் பைஸ், தர்வேஸ் போன்ற புகழ்பெற்ற முஸ்லிம் கவிஞர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்கள் பலவற்றை அவர் தமிழுக்குத் தந்துள்ளார். அவரைப் பற்றிய நேர் முகம் ஒன்றில் எழுத்தாளர் மலரன்பன் கூறியிருப்பது போல் புதுக் கவிதைகுச் செந்தக்காரரான அவரது கவிதைகள் உணர்ச்சியாழமும், உள்ளடக்க வீறும் கொண்டவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பண்ணாமத்துக் கவிராயரின் கவிதைப் பிரவேசமும், அவரது சாதனைகளும் பெரும்பாலும் இதைச் சார்ந்துதான் அமைந்துள்ளன.

1968 அளவில் உருவான முஸ்லிம் இலக்கிய ''புதிய அலை'' எழுச்சியோடு பண்ணாமத்துக் கவிராயரின் இலக்கியப் பயணம் ஆரம்பிக்கின்றது. 70களில் பலஸ்தீனக் கவிதைகளை அனல் பறக்கத் தமிழில் தந்தார். உணர்ச்சி வழியிலான சொல் வேகமும், தார்மீக ஆவேசமும் அவரது கவிதைகளில் இன்றும் பிரதிபலிப்பதைக் காண முடியும்.

பொது வுடமைத் தாகமும், இஸ்லாமிய சமத்துவ நெறியும், விடுதலை உணர்வும் அவருள் வேர் விட்டிருப்பது வெளிப்படையான விடயம். அவர் தெரிவு செய்யும் மொழிபெயர்ப்புக்கான கவிதைகள் கூட அந்த உணர்வுகளைச் சார்ந்தனவாகவே அமைந்துள்ளன. அவர் மொழிபெயர்த்து 1976 ஆம் ஆண்டு, 'தேசாபிமானிப்' பத்திரிகையில் வெளிவந்த மஹ்மூத் தர்வேசின் கவிதை ஒன்று இவ்வாறு அமைந்துள்ளது.

வரித்தென்னைக் கட்டி
விலங்கிட்டு வைத்தாலும்
திணித்து மண் போட்டு
என்வாயை அடைத்தாலும்
துடிக்கும் - என்
இதயத்தின்
குருதியடா - என்கவிதை
உண்ணும் - என்
உப்பு
உவர் விழி நீர் கவிதையடா
விரல் நகத்தால் - இன்னும்
விழியின் கிடங்குகளால்
கட்டாரிகளால் - என்
கவிதை எழுதப்படும்

இவ்வாறு 1970களில் மஹ்மூத் தர்வேசின் அனல் தெறிக்கும் கவிதைகள் பலவற்றை எஸ்.எம். பாரூக் தமிழில் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீன சமாதான முயற்சிக்கு உலக ஒத்துழைப்பை வேண்டி அன்றோயின் ஜிபாரா எழுதிய ''சமாதானமும் துப்பாக்கிகளும்'' கவிதைகள் பாரூக்கின் மொழிபெயர்ப்பில் இவ்வாறு அமைந்துள்ளது.

உள்ளங் கைகளில் புறாக்களை யேந்தி
உங்களிடத்து நாம் வந் துளோ மின்று
பள்ளி எழுச்சி கொள் ளெங்கள் பூமி
பாலஸ்தீனமும் உடன் வந்துள்ளது

இருபது வருடங்கள் காத்துக் கிடந்து
வழங்கப் பெற்றோம் வெற்று வாய் மொழிகள்
தருகுது வேதனை தாங்கிய புண்கள்
தகர்த் தொடித்தனர் எங்கள் எலும்புகள்

சிவந்த ரோஜா ஈராகி லிருந்து
சீரிய மலர்கள் டமாஸ்கஸிலிருந்து
உவந்த வானம் பாடியின் பாடல்,
சிறிய புட்களின் பிரார்த்தனைகள்

இனிது காதல் மலர்ந்திடும் இரவுகள்
- இவைகள் யாவும் உங்களுக்காக
நனிதெடுத்துக் கொணர்ந்தோ மிங்கு
நல்லியல் வீர மக்கள் நாங்கள்

(மல்லிகை, பெப்ரவரி - 1977)

பண்ணாமத்துக் கவிராயரின் ''காற்றின் மௌனம்'' (1996) அவர் படைத்த மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. செம்மைசார் சொல் வழக்கும், அவற்றினூடே இதயத்தைத் தொடும் உணர்ச்சி வேகமும் அவர் கவிதைகளில் ஒன்று கலந்துள்ளன.

பலஸ்தீனப் பேரவலங்களின் கொடுமைகளை தமிழ் கூறும் நல்லுலகிற்கு தமிழ்க் கவிதைகளாய்த் தந்த முக்கிய முன்னோடிகளில் அவரும் ஒருவர். மஹ்மூத் தர்வேஸ், பௌசி அல் அஸ்மார், சமி அல் காசிம் போன்ற பல பலஸ்தீனக் கவிஞர்களின் கவிதைகளை அவர் தமிழ் பேசும் உலகிற்கு வழங்கியுள்ளார்.

1970களில் இன்ஸான், தேசாபிமானி இதழ்களில் அவர் எழுதிய கவிதைகளை ரசித்து படித்தவர்களில் நானும் ஒருவன். கவிஞரின் நடையும், உணர்ச்சியும் சொல் வேகமும் மறக்க முடியாதவை. அவை நெஞ்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாகி இருந்தன. 1990களின் பின்னர்தான் நான் அவரை மாத்தளையிலும், கண்டியிலும் இலக்கியக் கூட்டங்களில் சந்தித்தேன். அவரது நட்பும் இலக்கிய தாகமும், தீவிர வாசிப்பும், சமவுடமைக் கருத்துக்களும் அவருடனான தொடர்புகளை வளரச் செய்தன. பாரூக் நற்குணங்களால் நிறைவான மனிதர்.

அல்லாமா இக்பாலின் சிந்தனைகளின் மீது அவருக்குத் தீராத ஆவல் இருந்தது. 1960களிலிருந்து அல்லாமா இக்பாலின் கவிதைகளை அவர் மொழிபெயர்த்து வருகின்றார். இக்பாலின் கவிதைகள் பற்றியும், தமிழ் மொழியாக்கத்தில் இக்பால் கவிதைகள் பற்றியும் அடிக்கடி நாம் கலந்துரை யாடினோம். இக்பாலின் கவிதைகளை தமிழ்க் கவிதை மரபில் கவிதைகளாக வெற்றி பெறச் செய்வதற்கு முயற்சிகள் தேவையாக இருந்ததை நான் அடிக்கடி அவரிடம் கூறி வந்தேன்.

ஆர்.பி.எம். கனியின் வசனநடை மொழிபெயர்ப்பு வாசகர்களின் உள்ளத்தை வெற்றி கொண்டது உண்மை. ஆனால், இக்பாலின் மொழிபெயர்ப்புக்கள் தமிழ்க் கவிதைகளாக வந்த போது இக்பாலை அக்கவிதைகள் எவ்வளவு தூரம் மக்களிடம் கொண்டு சென்றன என்பது கேள்விக்குரியது.

ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்ப்புக்கள் ஊடாக இக்பாலின் கவிதைகளை பாரூக் அனுபவித்து வந்தார். இதனால், இக்பால் கவிதைகளை தமிழ் கவிதைகளாக ஆக்குவதற்கு பண்ணாமத்துக் கவிராயரை மேலும் ஈடுபடத் தூண்டினேன். ஒரு பரிசோதனையாக அமைந்த இந்த முயற்சி இன்று ஒரு நூலாக வாசகர்களை வந்தடைகின்றது.

செம்மொழி மரபும் உணர்ச்சி வேகமும் பண்ணாமத்துக் கவிராயரின் கவிதைகளுக்கு சிறப்புச் சேர்க்கும் இரு பிரதான அம்சங்கள். இந்நூல் முழுக்க இதனை அவதானிக்க முடியும். இக்பாலின் கவிதைகளை மொழி பெயர்ப்பதில் இக்பாலில் கற்பிக்கும் உருவகங்களும் கருத்துச் செறிவும் ஒரு மொழிபெயர்ப்பாளரை இலகுவில் மயக்கத்திற்குள்ளாக்கக்கலாம்.

ஒரு சில இடங்களில் இருந்த கருத்து மயக்கங்களையும் இறுக்கமான புணர்ச்சியையும் ஆங்காங்கே ஓரளவு சீர் செய்துள்ளேன். பண்ணாமத்துக் கவிராயரோடு சிலவருடங்களாகத் தொடர்புகள் இல்லாமல், போனதால் கலந்துரையாடலுக்குச் சந்தார்ப்பம் இருக்கவில்லை.

எம்.எஸ்.எம். அனஸ்

25.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பாளர் உரை

இம்மொழியாக்கத் தொகுதி, அல்லாமா இக்பாலின் கவிதைகளை இன்றைய இளந்தலைமுறையினர்க்கு அறிமுகப்படுத்தும் ஓர் முயற்சியாகும்.

அறுபதுகளிலிருந்து இக்பால் கவிதைகளை அவ்வப்போது மொழி பெயர்த்து வந்துள்ளேன்.

தேசாபிமானி, இஸ்லாமியதாரகை, இன்ஸான், வீரகேசரி, தினகரன், முதலிவற்றில் பிரசுரமான அவற்றுட் சில ஒரு சில திருத்தங்களுடன் இத் தொகுதியில் இடம்பிடித்துள்ளன.

ஏனைய கஸல்கள், ருபய்யாத்கள், கவிதைகள் யாவும் இத் தொகு திக்கெனத் தமிழாக்கப்பட்டவை.

சென்ற நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளராய், தத்துவ ஞானியாய், சிரேஷ்ட கவிஞராய்த் திகழ்ந்த இக்பாலின் கவிதைகள் கருத்துக்களின் காம்பிரியத்தால் நிலைத்து நிற்பவை. தத்துவமும் கவித்துவமும் பின்னிப் பிணைந்தவை. மனிதனைத் தட்டியெழுப்பத் தரானா முழங்குபவை.

மனிதன் -
புழுதியால் ஆன அப்பிறவி
உன்னுலகில் ஒளியேற்றும் நட்சத்திரம்
நலிவுற்று மெலிந்தால்
நட்டம் யாருக்கு -
உனக்கா? எனக்கா?

- எனப் படைத்த இறைவனிடம் கேள்வியெழுப்புகிறார் இக்பால்.

ஆகச் சிறந்த மனிதனை, மனிதனது சக்தி, வல்லமை, சாத்தியக் கூறுகள் யாவையும் ஒருங்கிணைத்த மனிதனைக் காணும் வேட்கை- இதுவே இக்பாலுடைய தத்துவத்தின் திரட்சி எனக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

தான் கனவு கண்ட, சமூகநீதியை அடிப்படையாகக் கொண்ட இலட்சிய சமுதாயமொன்றின் சகல அம்சங் களையும், விழுமியங்களையும் உள்ளடக்கிய கலாசார நிறுவனமாக இக்பாலைப் பெரிதும் ஈர்த்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம், என பெர்லின் பல்கலைக்கழகப் பேராசிரியர் டியெத்லெம் வெல்ட்மான், கலாநிதி ஹில்ரத் ரஸ்டோ இருவரும் இணைந்து எழுதிய ஆய்வுக்கட்டுரையொன்றில் குறிப்பிடுகின்றனர்.

இக்பால், தாம் பின்னோக்கிப் பார்த்த இஸ்லாத்தின் உதயப் பொழுதின் மாசற்ற பொற்காலத்தில், நவீன சீர்திருத்தப் போக்குடன் இனங் காணக் கூடிய ஏராளமான விடயங்கள் மலிந்து கிடப்பதைக் கண்டார். அதன் அம்சங்களான சகோதரத்துவத்தையும், சமுதாய அறத்தையும் அழுத்தமாக வலியுறுத்தினார். உழைப்பாளியின் துயரை உருது இலக்கியத்தில் முதன் முறையாக வெளியிட்டவர் அவரே

- இது இக்பால், பைஸ் அஹமத் பைஸ் இருவரதும் கவிதாப் பிரவாகத்தில் மூழ்கித் திளைத்து அவர்களின் ஆக்கங்களை ஆங்கில வாசகர்க்கு அறிமுகஞ் செய்த விக்டர் கியெர்னனின் கூற்று.

பஞ்சாபியைத் தாய்மொழியாகக் கொண்ட இக்பால் பாரசீக உருது மொழிகளில் பாடியவர். ஒரு சில கவிதைகள் பஞ்சாபி மொழியிலும் பாடியுள்ளார்.

மொழிபெயர்ப்புத் துறையில் நாட்டம் கொண்ட நான், விக்டர் கியர்னனின் ஆங்கிலம் வழியாக உள்வாங்கிய கவிதைகளே இம்மொழியாக்கத் தொகுதியில் பெரிதும் காணப்படுபவை.

இக்பாலின் பாலே ஜிப்றீல் தொகுதியில் காணப்படும் உருதுக் கவிதைகள் தமிழில் நூலுருவம் பெற வேண்டுமெனப் பெரிதும் அவாவுற்று, எனது இம் முயற்சிக்குத் தூண்டுதலாகவிருந்து ஊக்கமளித்த எனது மதிப்பிற்குரிய நண்பர், பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி எம்.எம்.எம்.அனஸ் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

பண்ணா மத்துக் கவிராயர்
26A, போகஹகெட்டுவ ரோட்
மாத்தளை
15.04.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பால் சிந்தனை - ஓர் அறிமுகம்

அல் – அஸ்ஹறில்

1967 ஆம் ஆண்டு கெய்ரோ நகரில், அல் அஸ்ஹர் பல்கலைக்கழக ஷெய்க் முகம்மது அப்தூஹ் மண்டபத்தில் அல்லமா இக்பால் நினைவு தின வைபவம் நடைபெற்றது. அன்று பிரதம அதிதியாகப் பங்கேற்ற எகிப்திற்கான பாகிஸ்தான் தூதுவர் ஸஜாத் ஹைதர் தமது பிரதம உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> நாங்கள் அமர்ந்திருக்கும் இந்த மண்டபம் யாரின் பெயரால் அழைக்கப் படுகின்றதோ அந்தப் பெயருக்கும் இக்பாலுக்கும் ஒரு உறவுண்டு. ஜமாலுத்தீன் ஆப்கானி, அப்துர்ரஹ்மான் கவாகிபி போன்ற மகத்தான சிந்தனையாளர்கள் வாழ்ந்த காலப்பகுதி அது. ஷேய்க் அப்தூவும் அல்லாமா இக்பாலும் கடந்த சில நூற்றாண்டுளாக முஸ்லிம் உலகினை துயரத்திற்குள்ளாக்கியுள்ள பல தீமைகளுக்கு விடிவு காண முற்பட்ட இருபெரும் இஸ்லாமிய சிந்தனையாளர்களாகும்.

இக்பாலின் சிந்தனைகளின் நவீன சீர்திருத்த நோக்கினையும் அவரது போராட்ட நெறியினையும் ஆழமாகப் பிரதிபலிக்கும் கூற்று இது. அதே வேளை இக்பாலை ஒரு சீர்திருத்த வாதியாகவும் இஸ்லாமிய சிந்தனை யாளராகவும் அவருக்குரித்தான இடம் எது என்பதையும் ஸஜாத்தின் இந்தக் கூற்று திட்டவட்டமாக வரையறுத்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டில் எதிரொலித்த இஸ்லாமிய நவீன மறுமலர்ச்சி, சமய சீர்திருத்த மீள் எழுச்சி என்பவற்றின் மற்றொரு புதிய வாரிசாக தனது சிந்தனைப் பணிகளை அல்லாமா இக்பால் ஆரம்பித்தார். இது இக்பால் பற்றிய மகத்தான செய்தியாகும்.

இக்பால் முஸ்லிம் சமூகத்திற்கான கவி மட்டுமல்ல. முழு மனித குலத்திற்குமாக அவர் பாடல் இசைத்தார். மனித முன்னேற்றத்திற்குத் தடையான காரணிகள் அனைத்தையும் அவர் கடுமையாக விமர்சித்தார். மனித இருப்பு, அகத்தின் இரகசியம், மனித விடுதலை, உலகியல் முன்னேற்றம், நாகரிகங்களின் எழுச்சி என்பன இக்பாலின் கவிதைகளின் அடிநாதச் சிந்தனைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப் பண்பாடு

பல்வேறு பண்பாட்டு கூறுகளினதும் செந்நெறி அறிவுத் துறைகளினதும் தாக்கமும் செல்வாக்கும் இக்பாலின் சிந்தனைகளைச் செழுமைப்படுத்தி உள்ளன. அவர் கீழைத்தேசத்தின் கவி என்று வர்ணிக்கப்பட்டாலும் அவரது மூச்சுக் காற்றில் மேற்கின் சுவாசமும் ஒன்று கலந்திருந்தது. மனிதன் தன்னை ஒரு பூரண மனிதனாக உணர்வதற்கும் காலத்தை வெல்பவனாய் மனிதனை முன்னிறுத்துவதற்கும் இக்பாலைத் தூண்டிய சிந்தனைகளின் ஊற்றுக்கள் இஸ்லாத்தில் இருந்தும் மனித நாகரிகங்கள் முழுமையில் இருந்தும் அவர் கற்றுத் தேர்ந்தவற்றின் சாரமாக இருந்தன.

"அஸ்ராரே குத்இ" (The Secrets of the Self)யின் ஆங்கில மொழிபெயர்ப் பாளர் ரெய்னோல்ட். ஏ. நிக்கல்ஸன் இவ்வாறு கூறுவார்:

'இக்பால் ஐரோப்பாவின் ஆழமான இலக்கியங்களை கற்றுத் தேர்ந்தவர். நீட்ஷே, பேர்க்ஸன் போன்றோரின் மெய்யியல்களை அவரது சிந்தனை பெருமளவில் உள் வாங்கி இருந்தது. அவரது கவிதை எம்மை ஷெல்லியின் கவிதைகளை அடிக்கடி நினைவுபடுத்தின. இருந்தபோதும் இக்பால் தன்னை ஒரு முஸ்லிமாகவே சிந்தித்தார், முஸ்லிமாகவே தன்னை உணர்ந்தார். இந்தக் காரணத்திற்காகவே அவரது செல்வாக்கு மிகப் பெரியதாகும். சமயத்தினால் புத்துணர்ச்சி பெற்றவர் இக்பால்'

விஞ்ஞான நோக்கிலும் அறிவு ரீதியான முன்னேற்றங்களிலும் முஸ்லிம்கள் மேற்கத்தேய உணர்வுகளோடு ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதை இக்பால் மறுக்கவில்லை. ஐரோப்பாவின் அறிவுக் கலாசாரத்திற்கான பிரதான அடிப்படைகள் பலவற்றிற்கு ஐரோப்பா இஸ்லாத்திற்கு கடன்பட்டிருப்பதால் ஐரோப்பிய அறிவு இயக்கத்தின் மீதான இணக்க உணர்வு வரவேற்கப்பட வேண்டும் என்று இக்பால் கருதினார்.

நவீன இஸ்லாத்தில் தாராளக் கோட்பாடு வரவேற்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தினார். நவீன வாழ்வின் மாறும் சூழ்நிலை அவற்றின் விளைவான சுய அனுபவங்கள் என்பவற்றின் பின்னணியில் சமய - சட்ட கோட்பாடுகளின் அடிப்படைகளை மீள வரையறுப்பது அவசியம் என இக்பால் கருதினார். மத மறுசீராக்கப் போராட்டத்தில் ஒரு நியாயம் இருப்பதாக இக்பால் நம்பினார்.

இக்பால் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதற்கு ஏற்ப (சவுத்ரி முஸப்பர் ஹூசைன், Iqbal Review – January - march 1997) "குர்ஆனின் நவீனத்துவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் ஒருபோதும் உணர்ந்து கொள்ளவில்லை என்பது எனக்குக் கவலை தருகின்றது.'' இத்தகைய சிந்தனைகளும் இஸ்லாத்தில் நவீனத் துவம் தொடர்பான எண்ணங்களும் தான் இக்பாலின் சிந்தனைகளையும், கவிதைகளையும் மறுமலர்ச்சிச் சிந்தனைகளின் களங்களாக்கியுள்ளன.

நவீன யுகத்திற்கு இசைவான சமயப் புனருத்தாரணமும், இஸ்லாமிய நாகரிகத்தின் இயக்கவிசையின் தொடர்ச்சியும், நவீன இஸ்லாமியத்தின் இலக்காக இருக்க வேண்டும் என்று இக்பால் விரும்பினார். இதற்காக அவர் வாழ்நாள் முழுக்கப் போராடினார். சரியாகக் கூறுவதாயின் அது அவரது வாழ்நாள் இலட்சியமாகவும் மாறியிருந்தது.

வாழ்வையும் உலகையும் சூழலையும் அனுபவிப்பதற்கான உறுதியும், தெளிவும் மனிதருக்கு இருப்பது அவசியம் என்றார். இஸ்லாமியப் பார்வை மனிதருக்கு இவ்வுணர்வை வழங்குவதாக இக்பால் நம்பினார். இக்பாலின் சமய, மறுபரிசீலனைக் கருத்தாக இதைக் கொள்ள வேண்டும். மேற்கின் நவநாகரீக மோசடிகளுக்கு அடிமையாகாது முஸ்லிம்களைத் தடுப்பதற்கும் மேற்கத்திய நவ நாகரீகத்தின் மோசமான பண்புகளை விமர்சிப்பதற்கும் இக்பால் ஒருபோதும் தங்கியதில்லை. ஆயினும் இக்பாலின் கவனம் அதை மட்டும் நோக்கியதாக இருக்கவில்லை.

முன்னேற்றத்திற்கான அறிவுக் கலாசாரம், விஞ்ஞான யுகத்திற்கான சிந்தனை விருத்தி என்பவற்றையே இக்பாலின் கருத்துக்கள் எப்போதும் வலியுறுத்தின. மனித அறிவைப் பொறுத்த வரை பகுத்தறிவு, விமர்சனப் பாங்கான கண்ணோட்டம், நுண்ணாய்வுத் திறன் என்பவற்றிற்கு இட மில்லாத நிலையில் அறிவுக் கலாசாரம் விருத்தியடைய முடியாது என்றார். குர்ஆனைப் பிரதான அடிப்படையாக முன்வைத்து மாற்றங்களை நோக்கிய சிந்தனைக்கு சமய ரீதியில் தீர்வுகாணும் சிந்தனைப் புரட்சி அவரது எண்ணங்களில் பிரதிபலித்தது. வளர்ச்சி, மாற்றம், முன்னேற்றம் என்ப வற்றை நோக்கியதாக அவரது சிந்தனை திசை முகப்படுத்தப்பட்டிருந்ததில் இந்த உண்மைகள் புலப்படுகின்றன.

யதார்த்தத்தை ஆராய்வதற்கு எல்லா சாத்தியமான வழிகளும் பயன் படுத்தப்பட வேண்டும். பகுத்தறிவுவாதம் (Rationalism), அனுபவமுதல் வாதம் (Empricism) என்பவற்றோடு யதார்த்தத்தை விளங்குவதற்கும் அறிவுத் தெளிவிற்கும் வழி வகுக்கக்கூடிய எல்லா ஆற்றல்களையும் பரிசீலிக்க வேண்டும் என்று இக்பால் கருத்தினார். யதார்த்தத்தை விளங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது எவ்வாறு என்பதில் இருந்து அவரது இந்தத் தேடல் தொடங்குகின்றது.

தனிநபரின் உள்ளுணர்வு ரீதியான அனுபவங்களுக்கு இடமளிப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். யதார்த்தத்தை விளங்கிக் கொள்வதில் அனுபவத்திற்குரிய பங்கையும் அவர் கருத்தில் எடுத்துக் கொண்டார். அதாவது யதார்த்தத்தை அறிவதற்கான மனிதரின் தேடல் தொழிற்பாட்டில் பகுத்தறிவு, புலன்கள், புலக்காட்சிகள், அகக்காட்சிகள், அகத் தூண்டல்கள், உள்மன அனுபவங்கள் ஆகிய அனைத்திற்கும் பங்கிருப்பதாக இக்பால் நம்பினார். சிந்தனை, பகுத்தறிவு வளர்ச்சி, தர்க்க அடிப்படை, மெய்யியல் மற்றும் அனுபவ உணர்வுகள் என்பவற்றை இஸ்லாத்தின் அறிவு நிலைப்பாடுகளின் ஊடாகவும் ஒரு முஸ்லிம் பெற்றிருக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

இஸ்லாமிய வரலாற்றை ஆராய்ந்து இஸ்லாமியக் கருத்தியலையும் அரசியல் கோட்பாடுகளையும் ஒப்பீட்டு ஆய்வுகளுக்குள்ளாக்குவதும் அவற்றில் இருந்து நவீன யுகத்திற்கான புதிய விபரிப்புக்களைக் கண்ட றிவதும் அவரது நோக்கமாக இருந்தது. சமகாலத்தின் பிரதான சிந்தனை களையும் மெய்யியல், சமயக் கருத்துக்களையும் விமர்சன ரீதியாகவும் ஒப்பீட்டு ரீதியாகவும் அவர் ஆய்வுக்கு உட்படுத்தினார்.

இவ்வாறு நோக்கும் போது இஸ்லாமிய அறிவுத் தெளிவிற்கு ஒப்பீட்டாய்வு முறையும் விமர்சன ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை இக்பால் வலியுறுத்தியதாகக் கருதலாம். ''இஸ்லாமியச் சமயக் கட்டமைப்பின் மீளாய்வு'' என்ற அவரது ஆய்வு இந்த பரிசோதனைக் கான முன்னோடிப் படைப்பாகும். இதை அறிவிக்கும் முக்கிய கருத்துக்கள் இத்தொகுப்பிலுள்ள கவிதைகளிலும் இழையோடியிருப்பதைக் காண முடியும்.

செந்நெறி இசை வடிவங்கள்

''இக்பாலின் கவிதைகளில் அழகியல்'' என்ற கட்டுரையில் பேராசிரியர் ஜெகன் நாத் இவ்வாறு குறிப்பிடுகின்றார். இக்பால் பெரிய கவிஞர் மட்டுமல்ல. அவர் ஒரு பெரிய கவிஞராக இருந்ததால் அவர் ஒரு பெரிய கலைஞரும் ஆவார். அத்தோடு அவர் ஒரு தத்துவவாதியாக இருந்ததால் அவர் ஒரு விமர்சகரும் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், விவரணப் பாடல்கள், இயற்கை வர்ணனைப் பாடல்கள், உவமானப் பாடல்கள், அங்கதப் பாடல்கள், துயரப் பாடல்கள், ஆன்மீகப் பாடல்கள், காதல் பாடல்கள் என்று அவரது பாடல்கள் பல்வகையினவாகும். அவற்றுள் பல கவிதைகள் செவ்வியல் மற்றும் நாட்டாரிசை மரபுகளைத் தழுவி யவையாகும்.

இக்பாலின் கவிதைகள் செவ்வியல் பாடல் மரபையும் புனைவியல் அல்லது புத்தார்வ கற்பனையையும் கலந்ததாக அமைந்துள்ளன. செவ்வியல் மரபு என்பது இங்கு உருது மொழிக் கவிதைகளின் மரபைக் கூறுகின்றது. செவ்வியல் மரபு எப்போதும் ஒரு வடிவத்தையும், அதற்கே ஆன சிறப்புத் தொழில்நுட்பங்களையும் பெற்றிருக்கும்.

ஆரம்ப காலத்தில் கவிதைகளின் வடிவ அமைப்பில் இக்பால் அதிக கவனம் செலுத்தியுள்ளார். அக்காலப் பகுதியில் அவரது பாடல்களில் பெரும்பாலானவை கஸல் வடிவத்தில் அமைந்திருந்தன. தொடக்கத்தில் செவ்வியல் மரபிலான கஸல் வடிவங்களை அவர் கையாண்டார். பின்னர் தனது சுய மனோபாவ நெறியினை கஸல் வடிவத்தில் அவர் அறிமுகம் செய்தார். மஸ்னவி, ருபைய்யா, முஸத்தாஸ், கிட்டா ஆகிய இசைப் பாடல் வடிவங்களையும் அவர் அதிக அளவில் பயன்படுத்தி உள்ளார்.

உருது பாரசீக இலக்கிய மரபில் கஸல் ஆழமான இடத்தைப் பெற்றுள்ளது. கஸல் மிகப் பழமையான இசைப் பாடல் வடிவம். அதன் தோற்றம் அறபுலகிற்குரியது. (விரி.பார்க்க, எம்.எஸ்.எம். அனஸ், அறபு இசை: கஸீதா முதல் கஸல் வரை, திருச்சி, 2014) மேலும் வட இந்தியாவில் அது வெகுசன கவர்ச்சிக்குரிய வடிவமாகவும் வளர்ச்சி பெற்றிருந்தது. இக்பால் கஸல் பாடலைச் சிறப்பாகப் பயன்படுத்தினார். கஸல் இசைப் பாடல் மரபைச் செம்மைப்படுத்திய முக்கிய கலைஞராகவும் இக்பால் போற்றப்படுகின்றார்.

இக்பாலின் நீண்ட கவிதைகள் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளன. காவிய ரசனைக்குரிய கம்பீரங்களை அவை வெளிப்படுத்துகின்றன. மில்டனின் ''சுவர்க்க நீக்கம்'' (Paradise Lost) போல காவியங்கள் படைக்கும் ஆவல் இக்பாலுக்கு இருந்தது. 1932 ஆம் ஆண்டில் அவர் தனது ''ஜாவித்நாமா'' காவியத்தை வெளியிட்டார். ஜாவித்நாமா பாரசீக மொழியில் மஸ்னவி இசைப்பா வடிவில் படைக்கப்பட்ட பெரிய காவியமாகும். கவிஞர் அப்துல் காதர் லெப்பை இதனைத் தமிழ்படுத்தி வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியச் செல்வாக்கு

இக்பால் ஐரோப்பியச் சிந்தனைகளையும், இலக்கியங்களையும் ஆழமாகக் கற்றிருந்தார். நீட்ஷே, பேர்க்ஸன், பிரேட்லி, மெக்டகார்ட், ஹெகல், மார்க்ஸ் போன்ற மெய்யியலாளர்களால் அவர் பெரிதும் கவரப்பட்டிருந்தார். கீழைத்தேய அனுபூதி நெறிகளிலும், இஸ்லாமிய மறைஞானங்களிலும் தான் கண்ட உண்மைகளைக் கருத்து முதல்வாத நோக்கில் இக்பால் ஆராய்ந்தார். மற்றும் பிரித்தானிய ஜெர்மனியக் கருத்து முதல் வாத மெய்யியல் சிந்தனைகளையும் அவர் ஆர்வத்தோடு கற்றார். மாறும் உலகில் தனிநபர் சுதந்திரம், தனிநபர் அனுபவம், அகம்/ ஆன்மா என்பவற்றின் இருப்பும் உண்மையும் பற்றிய பரிசீலனைகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன.

தனது பெரிய படைப்பான 'அஸ்ராரே குத்இயில்' ஒரு (முஸ்லிம்) தனிநபரின் சுயத்தை அல்லது அகத்தைப் பாடு பொருளாக்கியுள்ளார். 'குத்இ' என்பது 'சுயத்துவம்' 'தனிநபர்த் தன்மை', 'ஆளுமை அகம்' என்ற அர்த்தங்களைக் கொண்டது. அது உண்மையானது. வாழ்வின் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பது.

சுயத்தை இக்பால் வெறும் மாயையாக விபரிக்கவில்லை. வாழ்வின் வெற்றியில் அதற்கு நெருங்கிய தொடர்பிருப்பதை அவர் மக்களுக்கு உணர்த்தினார். ஆனால், ''வெற்றுக் கருத்துவாதிகளையும், போலி சூஃபிக் களையும் அவர் கண்டித்தார். இஸ்லாத்தின் வீழ்ச்சிக்கு இவர்களும் பங்குதாரர்கள் என்று விமர்சித்தார்'' (ஆர்.ஏ நிக்கல்ஸன் 1983). தன்னை மறுப்பதன் மூலமாக அல்ல தன்னை உறுதிப் படுத்துவதன் மூலமும் சுய - வெளிப்பாட்டின் மூலமும் சுய - வளர்ச்சியின் மூலமும் மீண்டும் முஸ்லிம்கள் சுதந்திரத்தையும் வெற்றியையும் பெற முடியும் என்ற கருத்துக்களைத்தமது கவிதைகளில் அவர் ஆழமாகப் பிரதிபலித்தார்.

ஜமாலுத்தீன் ரூமி, ஹாபிஸ் உள்ளிட்ட பல பாரசீகக் சூஃபிக் கவிஞர் களினது கவிதைகளால் அவர் ஆட்கொள்ளப்பட்டிருந்த போதும் தன் மறுப்புக் கோட்பாட்டையோ, பல்லிறை வாதத்தையோ அவர் உயர்ந்த தெனக் கொள்ளவில்லை.

அவரது முதலாவது உருதுப் பாடலுக்கு ''பாங்கேதாரா'' (காரவன் மணியின் ஓசை) என்று பெயரிட்டுள்ளார். பாங்கேதாரா முஸ்லிம்களை எழுச்சியூட்டுவதற்காகப் பாடப்பட்டவை. மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்குக் கட்டுப்படாத சுதந்திர எண்ணங்களுக்கும் உண்மையான ஆன்மீகப் பெறுமானங்களுக்கும் முன்னுரிமை தரும் பாடல்கள் அவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய உணர்வு, சுய கௌரவம், சமூக விடுதலை என்பவற்றை சொந்த நாட்டு மக்களுக்காகவும் மனித குலத்திற்காகவும் இக்பால் பாடினார். சுதந்திர உணர்வும் சுய உணர்வின் ஆக்க பூர்வமான வெளிப்பாடும் அவரது கவிதைகளின் உந்துசக்திகளாக இருந்தன. அவரது ''அஸ்ராரே குத்இ'' இந்த எண்ணங்களைச் சிறப்பாகப் பிரதிபலித்தது.

மனம்

''அகம்'' (குத்இ) அல்லது ''நான் எனும் எண்ணக்கரு'' இக்பாலின் மெய்யியலின் மைய இடத்தைப் பெற்றுள்ளது. இக்பாலின் மெய்யியல் அகம் என்பது என்ன? மனித உடலுடன் அதன் தொடர்பு என்ன? அனைத்துலகப் பொதுமையுடன் அதன் உறவு என்ன? அதிஉயர் (தெய்வீக) உண்மையுடன் அதன் தொடர்பு என்ன? என்பவை பிரதான பிரச்சினைகளாகும். இப் பிரச்சினையானது மீமெய்யியல் (பௌதீகவதீதம்) கோட்பாடு சார்ந்த தென்பது தெளிவு. அத்தோடு இதற்குரிய நடைமுறை பிரச்சினைகளையும் இக்பால் தனது கொள்கைளின் மூலம் விளக்கினார்.

இக்பாலை நவீன யுகத்திற்குரிய புதிய தத்துவக் கவிஞனாக அறிமுகப் படுத்தியதில் அவரது அக விசாரணையின் பங்கு முக்கியமானது.

இக்பாலின் கருத்தில் ''அகம்'' (Self) என்பது உள நடவடிக்கைகளின் ஒரு ஒழுங்கு முறைமை அல்லது ஒருங்கிணைப்பாகும். எந்த நிலையிலும் நாம் எமது வாழ்வு பற்றிய உள நிலைகளையும் இந்த அனுபவங்களையும் பகுப்பாய்வு செய்யலாம். அக, அனுபவங்கள் சூன்யத்தில் நிகழ்பவை அல்ல. அவற்றிற்கென்று உறுதியான நிலைப்பாடு இருக்கின்றது. அது உளச்செயற்பாடுளினதும் அனுபவங்களினதும் தொகுதி. இந்த உளச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து அதைப் பொருத்தமான இடத்தில் எவ்வாறு கையாள்வது என்பதைத்தான் இக்பால் ஆராய்கின்றார்.

சில செவ்வியல் மெய்யிலளர்களும் மத்திய கால மெய்யியலாளர்களும் ஆன்மா - பருப்பொருள் என்ற ஒரு கொள்கையை முன்வைக்கின்றனர். மெய்யியலின் தொடக்க காலத்தில் பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் அகம் அல்லது நான் என்பதை விளக்கும் போது ஆன்மா என்ற பதார்த்தத்தை அனுபவங்களையும் நடவடிக்கைகளையும் கடந்த ஒன் றாகக் கருதினர். ஆன்மா மனச் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டதா என்ற விவாதம் இன்றும் நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், தீவிர பிரித்தானிய அனுபவவாதியான டேவிட் ஹியூம் இந்தக் கோட்பாடுகளின் மீது பாரிய கருத்துத் தாக்குதல்களை முன்வைத்தார். அவரது புகழ் பெற்ற ஒரு உரைப்பகுதி இவ்வாறு அமைந்திருக்கின்றது. 'நான் மிக நெருக்கமாக எனது' என்று சொல்லப்படும் (எனக்குள்) எவ்வளவு தூரம் உள் நுழைந்தாலும் வெப்பம் அல்லது குளிர், ஒளி அல்லது நிழல், அன்பு அல்லது வெறுப்பு, வலி அல்லது இன்பம் போன்ற வற்றையே நான் உணர்கின்றேன்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ''எனது'' (நான்) என்பதை நான் கண்டு கொள்ளவில்லை. புலக் காட்சிகள் இல்லாத நிலையில் மரணத்தின் மூலம் புலக்காட்சிகள் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் ''நான்'' என்பது வெறும் சூன்யப் பொருளாகிவிடும்' இது ஹியூமியவாதம்.

அதிகாரபூர்வமாக இருந்த தொன்மை ஆன்மாக் கோட்பாட்டிற்கு எதிராக ஹியூம் இந்தக் கருத்தை முன்வைத்தார். ஹியூமைப் பொறுத்தவரை ஒவ்வொரு கணத்திலும் நமக்குள் நெருக்கமாக இயங்கிக் கொண்டிருக்கும் நனவைத்தான் நான் அல்லது அகம் என்று நாம் கூறுகின்றோம். அந்த அகம் அல்லது நான் சுய இருப்புடையது என்றும் கருதுகின்றோம்.

இதற்குச் சமமான கருத்தை வில்லியம் ஜேம்ஸ் நனவோடைக் கோட்பாட்டாக அறிமுகப்படுத்தினார். இது வில்லியம் ஜேம்ஸின் நன வோடை எண்ணக்கரு என்று கூறப்படுகின்றது. சிந்தனைத் தாரையானது தொடர்ச்சியாக மாறிக்கொண்டிருக்கின்றது என்ற கருத்தை இக்கோட்பாடு முன்வைக்கின்றது. அது எதிலும் தங்கியிருக்கவில்லை. அது மாற்றங்களின் தொடர்ச்சி. தொடர்ச்சிதான் உணரப்படுகின்றது.

அஷ்ஷாரியத் பள்ளியைச் சேர்ந்த முத்தகல்லிமூன்கள் இந்த உலகம் முடிவற்ற நுண்ணிய அணுக்களில் (ஜவாஹிர்) தங்கியிருக்கின்றது. அது மீண்டும் பிரிக்கப்பட முடியாத நுண்ணிய பொருள். புதிய அணுக்களை தொடர்ச்சியாக இறைவன் படைக்கின்றான் என்றனர். அஷ்ஷாரியத்களைப் பொறுத்த வரை ஆன்மா என்பது ஒன்றில் மிக மிக நுண்ணிய சடம் அல்லது அது ஒரு தற்செயல் அம்சம். எனினும் அஷ்ஷாரியத் முத்தகல்லிமூன்களின் இக்கோட்பாட்டை மரபு சார் சமயவாதிகள் ஏற்க மறுத்துவிட்டனர்.

சூஃபி ஞானி மன்சூர் ஹல்லாஜ் (ஹி. ஆ 244 - 309) ஆன்மா எண்ணக்கருவை இன்னொரு முறையில் அணுகினார். பல்வேறு கிரேக்க மெய்யியல் சிந்தனைப் பிரிவுகளை அவர் நன்கறிந்திருந்ததோடு சீரியக் இலக்கியங்களையும், கிறிஸ்த்தவ சமய மறுப்புப் பிரிவினரின் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளையும் அவர் அறிந்திருந்தார். எனினும் ஆன்மா பற்றி குர்ஆனில் பேசப்படும் ஒரு சிறிய கருத்தை ஹல்லாஜ் தனது சிந்தனையில் ஆழமாக எடுத்துக் கொண்டார். இதை அடிப்படையாக வைத்து மிக விரிவான கோட்பாடு ஒன்றிற்கு அவர் வழிவகுத்தார். அது படைப்பையும் மனிதனின் இயற்கையையும் பற்றிய ஆன்மீக வாதமாக முன்வைக்கப் பட்டது.

இறைவன் தன்னைப் போலவே எல்லா பண்புகளையும் பெயர்களையும் படைத்தான் என்று அவர் கூறுகின்றார். இந்தப் படைப்புச் செயலில் முக்கியமானது ஆதம் ஆகும். இறைவனின் பிரகாசமான ஒளி அதில் இணைக்கப்படுகின்றது. தெய்வீகத் தனிமக் கூறினையும் மனிதத் தனிமக் கூறினையும் ஒன்றிணைத்த படைப்பே மனிதன் என்பது ஹல்லாஜின் கருத்து.

குர்ஆனில் 15 : 29 வசனம் நாம் மனிதனை உருவாக்கி பின் நாம் அவனில் ஆவியைப் புகுத்தினோம் என்று கூறுகின்றது. ஹல்லாஜினுடைய கருத்தின்படி இந்த இரண்டு தனிமக்கூறுகளும் சில மறைஞான நிபந்தனைகளின் பின்னணியில் ஐக்கியம் அடைகின்றன. எவ்வாறாயினும் ஹல்லாஜின் முக்கியமான பிரகடனம் "நானே உண்மை" (அனல்ஹக்) என்பதாகும். மன்சூர் ஹல்லாஜின் பிரகடனத்தைப் பல்லிறைவாதமாகப் பலர் பொருள் கொண்டனர். ஆனால், நவீன ஆய்வுகள் அவர் ஒரு பல்லிறைவாதி அல்ல என்பதை நிரூபித்துள்ளன. (பார்க்க: B.A Dar, A Study In Iqbal Philosophy, Lahore, 1964)

சுய ஆன்மீக அனுபவத்தின் உண்மை மனிதனின் நான் எனும் ஆளுமையில் மிக ஆழமாக ஊடுருவி நிற்பதையே ஹல்லாஜின் தத்துவம் துணிகரமாகப் பிரகடனம் செய்கிறது.

எல்லாப் பெரிய சூஃபி சிந்தனையாளர்களும் மன்சூர் ஹல்லாஜின் இந்தக் கருத்துக்களின் செல்வாக்கை அனுபவித்தனர். மேற்கோளாகப் பயன்படுத்தினர். மன்சூர் ஹல்லாஜ் வகைப்படுத்திய லாஹூத் நாசூத் என்ற உரையாடலை இமாம் கஸ்ஸாலி பயன்படுத்தினார். ரூஹ்ஹின் (உயிரின்) ஆன்மீக இருப்பானது இருதயம் (கல்ப்) ஆகும். இது ஒரு அகமியக் கருத்து. இதன் அடிப்படை என்ன? உண்மையில் இமாம் கஸ்ஸாலி இதயம் (மனம்) என்பதை எமது உடம்பின் வட பாகத்தில் இருக்கின்ற ஒரு சதைத் துண்டமாக அர்த்தப்படுத்தியதாக கருத்து உண்டு. மாறாக அது பார்க்க முடியாத உலகத்தைச் சார்ந்தது என்றார். கஸ்ஸாலியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தில் மனம் என்பது உலக ஆணைகளுக்குக் கட்டுப்பட்ட 'தனிநபர் சாரமாகும்'. (பார்க்க: B.A Dar, A Study In Iqbal Philosophy, Lahore, 1964).

இக்பால் கூறும் இக்கருத்திற்கும் மேற்கத்திய நவீனமரபு முன் வைக்கும் 'அகம்' பற்றிய கருத்திற்கும் இடையிலான தொடர்புகள் அணுகிப் பரிசீலிக்கப்பட வேண்டியவை.

குத்இ எண்ணக்கரு

இக்பாலின் மெய்யியல் சிந்தனைகளை "அஸ்ராரே குத்இ" (அகத்தின் இரகசியம்) "ரமூஸி பே குத்இ" (அகம் கடந்த மெய்யியல்) ஆகிய இரு நூல்களும் சிறப்பாகப் பேசுகின்றன. இரண்டு படைப்புக்களும் பாரசீக மஸ்னவி பாமரபில் எழுதப்பட்டவையாகும். மஸ்னவி மரபிற்குரிய கதைகளையும், உவமானங்களையும் கடந்து தமது தத்துவ விளக்கங்களை இக்பால் அதில் தந்துள்ளார். அகத்தை வளர்ப்பது எப்படி, சமுதாய வளர்ச்சிக்காக அகத்தை விட்டுக் கொடுப்பது எப்படி என்பதை இக்கவிதை களில் இக்பால் இனங்காட்டியுள்ளார்.

"அஸ்ராரே குத்இ"யில் இக்பால் கூறும் அகமானது அகத்தத்துவம் பற்றிய சிந்தனை வளர்ச்சியின் தொடர்ச்சியினை பிரதிபலிக்கின்றது. மெய்யியலுடன் இணைத்து கூறுவதானால் இது அடிப்படையில் உடல் - உளப் பிரச்சினை (Body - mind Problem) சார்ந்தது. மனத்தை சிந்தனை அல்லது நனவு (வெற்று நிலையானது) என்றும் இக்பால் கூறுகின்றார். நவீன மெய்யியலாளர்களிடம் இவ்வாதம் பின்னர் மேலும் கூர்மை யடைகின்றது.

அக எண்ணக்கரு விளக்கத்தோடு இக்பாலின் கவித்துவ அழகைப் பருக விரும்வோருக்கு அஸ்ராரே குத்இ உன்னத கவிதைப் பொக்கிஷமாகும்.

இக்பாலின் சமய மெய்யியல் எண்ணக்கருவை ஆழ்ந்து அறிய விரும்புபவர்களுக்கும் அஸ்ராரே குத்இ சிறந்த பயிற்சிக் களமாகும். ராவீந்ரநாத் தாகூரின் கீதாஞ்சலியோடு போட்டி போடும் அஸ்ராரே குத்இ மிக உயர்ந்த இலக்கியப் படைப்பாகும்.

அகத்தின் தத்துவத்தை மட்டுமல்ல மனிதர் கண்டறியத் தவறிய அகத்தின் வல்லபத்தையும் மனித மனத்தின் வரையறுக்க முடியாத அதன் ஆற்றலையும் இக்பால் இந்நூலில் பாடியுள்ளார். அகம் பற்றி அவர் கூறும் உண்மையும், கவித்துவ அழகும் எம்மை பிரமிக்கச் செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம் வாழ்க்கைக்குப் பலமளிக்குமாயின்
வாழ்க்கை எனும் நதி கடலாக விரியும்
நான் நாளைய கவிஞனின் குரலாவேன்
எனது மன ஆழத்தின் அர்த்தங்களை
சமகாலத்தவர்களால் விளங்குதல் சாத்தியமல்ல
அவர்களின் கடல் வெறும் பனித்துளி
ஆனால் எனது பனித்துளி பெரும்புயல் வீசும் கடல் போன்றது.
உன் இருப்பின் வடிவத்திலிருந்து தான்
அகம் அதன் திறனைக் காட்டுகிறது.
நீ காண்பது எதுவாயினும்
அது உன் அகத்தின் இரகசியமே.
எப்போது அகம் நனவாக எழுகிறதோ - அப்போது
உனக்கான சிந்தனையாக அது விரிகிறது.
ஆயிரம் சொற்கள் அதன் சாரத்திற்குள் மறைந்துள்ளன
வாழ்க்கை தேடுதலில் தான் உள்ளது.
வாழ்வின் அடிப்படை ஒளிந்துள்ள இடம் ஆசையாகும்.
ஆசை நீரூற்றாய் சுரக்கட்டும் உன் மனதில்.
அகத்தின் ஒளிக் கீற்றுக்கள் தான்
நம் புழுதியின் அடியிலுள்ள ஜீவனாகும்.
அகம் அன்பினால் பலப்படுத்தப்படும் போது
அதன் ஆற்றல் உலகையே ஆட்கொண்டு விடும்.

விருப்பம்

இக்பாலைப் பொறுத்த வரை மனிதன் உலகின் உயர்ந்த படைப்பு. அந்த உயர் உயிர் வடிவத்தின் உன்னதம் அதன் சுய - உறுதி நிலையாகும். ''குத்இ'' சிந்தனையில் ''சுய உறுதி நிலை''யை இக்பால் ஒரு அடிப்படைக் கருத்தாக முன்வைத்துள்ளார். ஒரு முஸ்லிமின் அடிப்படை ஒழுக்க மாண்பு இதில்தான் இருக்கின்றது. தனிநபராக மனிதன் தன்னை செழுமைப் படுத்த வேண்டும். தடைகளைக் கடந்து வாழ்வில் முன்னேற்றத்தைச் சாதிக்க வேண்டும். இவ்வாறு ''குத்இ'' சிந்தனை மனிதத் தனிநபர் ஆற்றலை உயிர்ப்புள்ள செயல்படும் கருத்தாக முன்னிலைப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இக்பால் ''குத்இ'' கருத்தை ஒரு சக்தியாக கையாளுகின்றார்.

அகம் என்ற எண்ணக்கருவூடாக மனித மனத்தின் ஆழமான பகுதி களை அவர் பகுப்பாய்வு செய்தார். இதுவரை மனம் பற்றி அதிகம் பேசப் படாத கருத்துக்களையும் அஸ்ராரே குத்இ துணிச்சலோடு உரையாடியது. அகத்தையும் விருப்பத்தையும் இக்பால் ஒன்றிணைத்துப் பேசினார். பொதுவாக வெறுத்தொதுக்கப்படும் மனித அவாவிற்கு அவர் கௌரவத்தை வழங்கினார். இவ்வகையில் அகத்தின் பல்வேறு தொடர்புகளையும், பண்புகளையும் கண்டறிவதற்கும் ''குத்இ'' கோட்பாட்டை அவர் பயன் படுத்தினார். மெய்யியலும், உளவியலும் நவீன யுகத்தில் கண்டறிந்த உண்மைகளுக்கு மிக நெருக்கமாக இக்பாலின் ''நான்'' கருத்து அமைந்துள்ளது.

விருப்பின் நெருப்பில் இருந்தே
இதயம் உயிர்பெறுகிறது
விருப்பின் தோற்றத்தோடு
உண்மையற்ற அனைத்தும்
உயிர் துறக்கின்றன.
செயலைப் பிறப்பிப்பது விருப்பமாகும்.

தண்குளிர் அனற் பொறியை
அணைத்தழிப்பதைப் போல்
விருப்பமற்றிருப்பது
வாழ்வுக்கு அழிவாகும்.
விருப்பே வாழ்வை வளப்படுத்துகின்றது.
விருப்பின் கருவில் இருந்துதான்
அறிவும் துளிர்க்கிறது.

விருப்பத்தை (அல்லது ஆசையை) மறுத்து மந்தகதியிலான வாழ்வுக்கு சமயம் பயன்படுத்தப்பட்டது. இதனை இக்பால் எதிர்த்தார். விருப்பம் வாழ்வின் ஊற்று என்பதை நிரூபித்தார். அனைத்தினது இயல்பும் விருப்பத்தின் உறைவிடமாகும் என்றார். நிறமும் நறுமணமும் வாய்ந்த இப்பூவுலகின் ஆன்மாவே விருப்பம்தான் என்று ''அஸ்ராரே குத்இ'' பிரகடனம் செய்கிறது. அது ஒரு விருப்பத்தின் காவியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரசீக மஸ்னவி மரபுக்குரிய கம்பீரமும் உணர்ச்சித் தூண்டலும் இக்பாலின் ''அஸ்ராரே குத்இ'' யினைத் தனித்துவமான தத்துவ கவிச் சரமாக மாற்றுகின்றது.

கற்பனையும் கவித்துவச் செறிவும் கொண்ட கருத்துக்களால் அகத்தின் அசைவியக்கச் சக்தியையும் மனத்தின் யதார்த்தத்தையும் அஸ்ராரே குத்இ வெளிப்படுத்துகின்றது.

தத்துவ அல்லது உளவியல் கலந்துரையாடலுக்கு இப்பிரச்சினையை எடுத்துக் கொண்டால் இக்பாலின் ''குத்இ'' எண்ணக்கரு குர்ஆனின் ''ரூஹ்'' பற்றிப் பேசுகின்றது என்பது ஒரு சிலரின் வாதம். ஆனால், அதைவிட ''நான்'' எனும் தன் முனைப்பு (Ego), அல்லது அகநிலைக்கூறு (Self) என்ற இரண்டு தனிமக்கூறுகள் இங்கு ஒன்றிணைக்கப்படுகின்றன. இக்கருத்துக்கள் கீக்ககார்ட் சிந்தனையிலும் இக்பால் சிந்தனையிலும் இணைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

இக்பாலின் அகக் கோட்பாட்டை சோரொன் கீக்ககார்ட்டின் இன் அகச் சிந்தனைக் கருத்துக்களுடன் எஸ்.எஸ். ஹாவி ஒப்பிடுகின்றார். தனிநபர்த் தன்மையின் இன்றியமையாத உயிர் நிலையான முடிவுப் பொருளாக அகம் விளங்கு வதாக ஸோரோன் கீக்ககார்ட் கூறுகிறார். அது துடிப்பு மிக்கது. ஆக்க பூர்வமானது. ஜீவாதார உயிர்ப்புடையது, சிந்தனையிலும் உணர்சியிலும் அகத்தின் உள்ளார்ந்த செயல் விளைவை அகம் சாத்தியமாக்குகின்றது.

ஜீவாதார முடிவுப் பொருளாக எவ்வாறு அகம் விளங்குகின்றது என்பதையே ''குத்இ'' கருத்து உணர்த்துகின்றது. வாழ்க்கையின் எல்லா நலன்களினதும் உண்மையும், சக்தியும் மனிதன் தான் என்பதை அல்லாமா இக்பாலின் கவிதைகள் வலியுறுத்துகின்றன. இருப்பின் இயக்கவிசைப் பண்பானது அகநிலை தனிநபர் தத்துவத்தில் தங்கி உள்ளது என்பது கீர்க்ககாட்டின் கருத்து. இதனையே மனித அக வாழ்வின் ரகசியம் என்று இக்பால் கூறுகின்றார்.

அகம் என்பது மனிதனுக்குள் இருக்கும் இயந்திரமோ /பிசாசோ அல்ல. அது தான் மனித உயிர்ப்பின் யதார்த்தம். மனிதனின் இருப்பும், ஜீவித உணர்வும் அகம் தான் என்று இக்பாலின் அகத் தத்துவம் கூறுகிறது. ஆனால், மனிதன் இந்த அகமியத்தை அறிந்து கொள்ள மறுத்து விடுகின்றான். ''அஸ்ராரே குத்இ''யின் மொழியில் சொல்வதானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் பற்றிய உனது ஆராய்வானது உனது ''அகத்தை'' நீ ஆராய்ந்து அறிவதாகும். இல்லை எனில் வீழ்ச்சி உறுதியானது.

அரசியல் கவிஞர்

விக்டர் கியர்னனின் கருத்தின்படி பரந்த பொருளில் நோக்கினால் இக்பால் ஒரு அரசியல் கவிஞர். அவர் சமய சீர்திருத்தத்தை விரும்பினார். மனித சமூகத்தை ஆற்றல் பெறச் செய்வதுதான் கலையின் கடமை என்றும் இக்பால் கருதினார்.

நிலப்புரபுத்துவ, நிலமானிய ஒழுங்கமைப்பில் இருந்தும் விவசாயக் குடிமக்களில் இருந்தும் விலகிய நிலையில் இந்திய முஸ்லிம் மத்திய தர வகுப்பினர் தோற்றம் பெற்றுக் கொண்டிருந்த காலம் அது. அவர்களின் செல்வாக்கு வளர்ச்சியடைந்து கொண்டிருந்ததை இக்பால் அவதானித்தார். இந்தியாவில் முஸ்லிம் சமூகம் நவீன யுகத்திற்குத் தயாராவதையும் அதற்கான ஏற்ற புனர் நிர்மாண சிந்தனைகளையும் இக்பால் வரவேற்றார்.

முகலாயரின் 800 ஆண்டு கால அட்சியின் வீழ்ச்சியும் 1857 இல் சிப்பாய்க் கலகத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தோல்விகளும் பாரிய கலாசார நெருக்கடிகளும் முஸ்லிம்களைப் பெரும் துயரத்தில் ஆழத்தி இருந்தன. நடந்து முடிந்த சிப்பாய்க் கலக அதிர்ச்சிகள் இந்திய முஸ்லிம் களை செயலற்ற நிலைக்கு ஆளாக்கி இருந்தது. எனினும் சமூக மாற்றங்கள் நடந்த வண்ணம் இருந்தன.

வர்த்தகம், கல்வி, அரசியல் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புதிய சூழலுக்குத் தம்மை இணக்கப்படுத்துவதில் இந்துக்கள் ஆர்வம் காட்டினர். அதே வேளை பிரித்தானிய அரசுக்கு எதிரான ஜிஹாத் போர் முனைப்போடும், பழைமை வாதக் கொள்கைகளோடும் முஸ்லிம் சமூகம் பல நெருக்கடிகளுக்கு ஆளாகிக் கொண்டிருந்தது.

செர். செய்யித் அஹமத்கான் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வந்தார். முன்னேறும் ஹிந்து சமூகமும் வீழ்ச்சியை நோக்கிச் செல்லும் முஸ்லிம் சமூகமும் என்ற இரு கோணங்களிலிருந்து இப்பிரச்சினையை அவர் அணுகினார். நவீன சிந்தனைகள் நவீன கல்வி என்பவற்றின் துணையுடன் செய்யத் அகமத்கான் தனது போராட்டத்தை ஆரம்பித்தார். பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

இம்மாற்றங்கள் முஸ்லிம் சமூகத்தில் மத்தியதர வகுப்பின் எழுச்சிக்கு வழி வகுத்தன. முஸ்லிம்கள் குறிப்பாக மத்திய தர வகுப்பினர் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிலான தேசிய எழுச்சியில் பங்கேற்றனர். இந்து முஸ்லிம் ஒருமைப்பாட்டு உணர்வுகள் நாட்டில் வலிமை அடையத் தொடங்கின. ஹிந்துவும் முஸ்லிமும் நெருங்கி வாழும் சகோதரர் என்ற உணர்வு நாட்டில் பரவியது.

தனது கவிதைகள் மூலம் இன ஐக்கிய உணர்வுக்கு இக்பால் மேலும் வலிமை சேர்த்தார். அதாவது இக்பால் ஐக்கிய இந்தியாவையும் சுதந்திர இந்தியாவையும் ஆவேசத்துடன் ஆதரித்தார்.

இந்தியாவையே உலுக்கிய தேச பக்திப் பாடல்களை இக்பால் இக்காலத்தில் படைத்தார். இந்திய தேசத்தினர் பேருவகையுடன் அவரது தேசிய கீதங்களைப் பண்ணிசைத்தனர். அவற்றுள் தரான - யே - மில்லி புகழ்பெற்ற தேச பக்திப் பாடலாகும்.

அரபும், சீனமும் எங்களதே
இந்தியாவும் எம்முடையது
நாங்கள் முஸ்லிம்கள்
உலகம் முழுவதும் எம்முடையது

இந்தியக் குழந்தைகளுக்காக அவர் பாடிய ஹிந்துஸ்தானி - பச்சோன் கா - கல்மி - கீத் அவர் பாடிய மற்றொரு தேச பக்திப் பாடலாகும்.

ஹாஜா மொயினுத்தீன் ஷிஸ்தி
சத்தியத்தின் செய்தியை எந்தப் பூமியில் பரப்பினாரோ,
குரு நாநக் எந்தப் பூங்காவில்
ஏகத்துவ கீதத்தைப் பொழிந்தாரோ,
தாத்தாரி முகலாயர்கள் எதைத்
தமது சுய நாடாக ஆக்கிக் கொண்டனரோ
எது ஹிஜாஸ் வாசிகளை
அரபுப் பாலையை விட்டு வந்து
தன்னகத்தே குடியேறச் செய்ததோ
அதுவே என் தாய்த் திருநாடு
அதுவே என் தாய்த் திருநாடு
... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானளாவ வளர்ந்து மாளிகை போல்
அழகு தந்து நிற்கும் இமய மலை எங்குளதோ
எதன் சாரலில் வாழ்வது சொர்க்க வாழ்வோ
அதுவே என் தாய்த் திருநாடு
அதுவே என் தாய்த் திருநாடு

வர்க்க எழுச்சி

பிரித்தானியக் காலனித்துவ நுகத்தடியை அகற்றும் தேசிய எழுச்சியில் முஸ்லிம்களும் பங்கேற்றனர். எனினும் ஹிந்து மேலாண்மை வாத உணர்வுகள் நாடு முழுக்கப் பரவியது. ஹிந்து செல்வந்த உயர் வகுப்பினர் பலர் இதற்கு ஆதரவளித்தனர். அதிக்கமும் செல்வாக்கும் பெற்ற ஒரு அரசியல் குழுவாக அவர்கள் பலம் பெறத் தொடங்கினர். முக்கியமாக மத்தியதர வகுப்பு முஸ்லிம்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களையும் ஹிந்து முஸ்லிம் ஒருமைப்பாட்டிற்கான சிறந்த தருணங்களையும் இந்தப் புதிய இனவாதத் தேசிய அலை சிதைத்தது. அநேக முஸ்ஸிம்கள் இந்திய காங்கிரஸில் இருந்து முஸ்லிம் லீக்கை நோக்கித் திரும்பினர்.

முஸ்லிம் மத்திய தர வகுப்பினர் நம்பிக்கையிழந்த நிலைக்கு ஆளாகினர். மனோ திடமும், ஆன்ம பலமும் வளர்க்கப்பட வேண்டிய தேவை முஸ்லிம் சமுதாயத்தில் உருவாகி இருந்தது. இக்பால் கவிதைகளின் சமூக வகிபாகம் இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்வதைச் சார்ந்திருந்தன. அன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் துயரத்தையும் நம்பிக்கை வரட்சியை யும் இக்பால் பாடினார். தனி மனித ஆளுமையின் முழு வளர்ச்சி பற்றிய கருத்தை கவிதையாக்கி அதனை மன வலிமைக்கு மருந்தாக்க இக்பால் முயன்றார்.

அதேவேளை, சமத்துவமான சமூக அமைப்பையும், நல்லாட்சி யையும் வரவேற்கும் மன உணர்வை முஸ்லிம் சமூகத்திற்கு அவர் அறிமுகம் செய்தார்.

இந்திய மக்களின் ஒருமைப்பாட்டு உணர்விற்கு ஆன்மீகத் தூதாக இக்பாலின் சிந்தனைகள் விளங்கின. சமூக சீரமைப்பு முயற்சிகளில் ஆரோக்கியமான மாற்றத்தை முழு இந்திய சமூகத்திடம் இருந்தும் இக்பால் எதிர்பார்த்தார். ஒரு முஸ்லிமின் ஆன்மா அந்நியப்படுவதையும், அதன் எதிர்கால நம்பிக்கைகள் சிதைக்கப்படுவதையும் இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைக்க விரும்பினார். இவை இந்திய மண்ணுக்கான அவரது இலட்சியங்கள் மட்டுமல்ல. உலகளவில் மானிட மேம்பாட்டையும், விடுதலையும் அவர் இவ்வாறு தான் எடுத்துக் கொண்டிருந்தார்.

செர். செய்யித் அஹமத்கான், கவிஞர் ஹாலி போன்றோர் உருவாக்கிய நவீன சீர்திருத்த மாற்றுத் திட்டங்களைக் உள்வாங்கித் தமது கொள்கையை இக்பால் உருவாக்கினார். முன்னோடி முஸ்லிம் சிந்தனையாளர்களின் சிறந்த சேவைகளை அவர் கருத்தில் கொண்டிருந்த போதும் புதிய இலட்சியங்களை நோக்கி இக்பால் சமூகத்தை வழிநடத்த விரும்பினார். இதற்கான தேடலை இஸ்லாத்திலிருந்தும் உலக நாகரிகங்களிலிருந்தும் அவர் அரவணைத்துக் கொண்டார்.

மேலும், இக்பாலைப் பொறுத்தவரை சமயம் என்பது மனித மேம்பாட்டிற்கான பரந்த நெறியும், நாகரிக வளமுமாகும். முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடுவதற்கு இஸ்லாம் ஒரு இயங்கு சக்தியாக திகழக்கூடியது என்ற நம்பிக்கையை அவர் இளைய தலைமுறையினருக்கு வழங்கினார்.

இஸ்லாம் மனிதப் பிரச்சினைகளின் தீர்வுகளுக்கான ஆழமான கருவூலம் என்பது இக்பாலின் உறுதியான நம்பிக்கை. ஆயினும், புது யுகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இஸ்லாத்தின் பங்களிப்பு என்ன என்பதை இக்பால் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டார். தற்காலத்திற்கான இக்பாலின் வழிகாட்டுதல் இங்கிருந்து தான் ஆரம்பமாகின்றது. இதன் மூலம் தனிமனிதன், சமூகம், பாரம்பரியம், சமூக முன்னேற்றம், அரசியல் மாற்றம், பகுத்தறிவுச் சிந்தனை, விஞ்ஞானம், நவீன கல்வி என்பவற்றை நோக்கி முஸ்லிம்களின் கவனத்தை அவர் திருப்ப முயன்றார். சமயத்தையும் அரசையும் முரண்படும் முகாம்கள் என்பதை அவர் நிராகரித்தார். மனித முன்னேற்றத்திற்குப் பங்காற்றும் நல்லிணக்க சக்தியாக அரசியல் மாற வேண்டும் என்றார்.

கவிதை நயம்

இக்பாலின் கவிதைகள் கற்பனை வளத்தினால் மட்டுமன்றி அவை கூறும் கருப்பொருள்களினாலும் தனிச் சிறப்பு மிக்கவையாக விளங்குகின்றன. பாலேஜிப்ரீல், பாங்கேதாரா போன்ற படைப்புக்களில் இதன் ஆழத்தை அனுபவிக்க முடியும். 'குர்துபா பள்ளிவாசல்' கவிதை இதற்கான மற்றொரு சான்றாகும். உலக நாகரிகத்தின் விசாலமான பரப்பினைப் பேசுவதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கவிதைகள் வெற்றி பெற்றுள்ளன. சமயம், அரசியல், பகுத்தறிவு, உள்ளுணர்வு, வாழ்க்கை, சுதந்திரம், மன உறுதி, மரணம், தனிநபர், சமத்துவம், கலை, கற்பனை, கல்வி, இயற்கை எனப் பரந்த எல்லைகளை அவை தொடுகின்றன.

பெயர் பெற்ற உலக ஆளுமைகளான ஜமாலுத்தீன் ஆப்கானி, ஜலாலுத்தீன்ரூமி, குருநானக், வில்லியம் சேக்ஷ்பியர், பிளேட்டோ, அரிஸ்டோட்டில், ஷாஹ் வலியுல்லா, ஜேர்மன் கவி கதே, அகஸ்ட் கொம்ட், கார்ல் மார்க்ஸ், நீட்ஷே, விலாடிமிர் லெனின், முஸ்தபா கமால், ஹென்றி பேர்க்ஸன், என்று ஒரு விரிவான சிந்தனையாளர் பரப்பு அவரது கவிதைகளில் உள்ளடங்கியுள்ளன.

மனித சிந்தனைகளின் உயர்வான உணர்வுகளை வெளிப்படுத்துவதில் கீழ் நாட்டுக் கவிதைகள் எப்போதும் முன்னணியில் இருந்துள்ளன. மறுபுறத்தில் அரபு, உருது, பாரசீகம், துருக்கி போன்ற மொழிகளின் உயர்ந்த கவித்துவ வெளிப்பாடுகள் உலகப் பிரசித்தமானவை. இக்பாலின் கவித்துவ நுட்பங்களும், இலக்கிய சாதனைகளும் இந்த இரண்டையும் இணைத்ததன் வெற்றி எனக் கூறலாம். ''நடைமுறையில் இக்பாலின் கவிதைகளை நாம் ஏதாவது ஒரு தராதரத்தில் ஒன்றிணைத்து நோக்கும்போது அங்கு ஒரு வகையான மெய்யியல் கண்ணோக்கு பிரகாசிப்பதை தெளிவாக உணர முடிகின்றது. இக்பாலுடைய கவிதைகளின் தத்துவம் மனித உணர்வுக்கு நெருங்கிய விவாதங்களை உருவாக்குகின்றது. இக்பால் ஒரு கவியா அல்லது தத்துவ ஞானியா போன்ற கேள்விகள் எப்போதும் மனித மனங்கள் தொடுக்கின்ற வினாவாக அமைந்துள்ளன." (Mustansir Mir, 2006)

கிழக்கும் மேற்கும்

ஐரோப்பாவையும் அதன் நவீன நாகரிகத்தையும் இக்பால் பொதுவாக ''மேற்கத்திய'' என்ற சொல்லால் குறிப்பிட்டார். சில சந்தர்ப்பங்களில் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளை கலானித்துவ ஐரோப்பா என்ற பொருளில் அவரது ''மேற்கத்திய'' என்ற சொல் உள்ளடக்கி இருந்தது. ஆசியாவையும் அதன் நாகரிங்களையும் அவர் கிழக்கு என்று குறிப்பிட்டார். அதில் இந்தியாவிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் முக்கிய இடம் தரப்பட்டிருந்தது. மேற்கும், கிழக்கும் முரண் பட்டவை என்று அவர் சில சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். அது போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை ஒன்றில் ஒன்று தங்கியிருந்தன என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தினர். மேற்கை விமர்சித்தது போல் அவர் கிழக்கையும் விமர்சித்தார்.

மேற்கத்திய நாடுகளில் காணப்பட்ட புத்துணர்ச்சியையும் உத்வேகத்தையும் அவர் வரவேற்றார். சடப் பொருள் ரீதியான மாற்றங்களுக்கும் வாழ்க்கையின் புதிய தேவைகளுக்கும் இயைந்து செல்லும் மேற்கிலும் அவரது கவனம் திரும்பி இருந்தது. அதேவேளை மேற்கத் தேயத்திலும், கீழைதேயங்களிலும் மானிட மற்றும் உலகம் சார்ந்த இலட்சியங்கள் தோல்வி கண்டிருப்பதையும் அவர் தமது கவிதைகளில் பதிவு செய்யத் தவறவில்லை.

மேற்கிற்கு எதிராக அவர் முன்வைத்த கடுமையான விமர்சனங்கள் அவர் மேற்கை கண்மூடித்தனமாக ஆதரிக்கவில்லை என்பதற்குரிய ஆதாரங்களாகும். சமய மற்றும் மானதப் பெறுமானங்களை மேற்கு தவிர்த்து வருவதாகவும் குறுகிய தேசிய வாதத்திற்கும் இனத்துவக் கோட்பாடுகளுக்கும் அது அளவு மீறிய முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் மேற்கை விமர்சித்தார்.

மேலும், மேற்கத்திய ஜனநாயகத்தின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியதோடு அது முதலாளித்துவத்திற்கு சேவகம் புரிவதாகவும் குறிப்பிட்டார். முஸ்லிம்களின் ஐக்கியத்தை மேற்குலகம் குலைத்து வருவதாகவும், முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் மேற்குலகம் ஆர்வமற்றிருப்பதாகவும் அவர் மேற்குலகை குற்றம் சுமத்தினார்.

மொழிப் பாண்டித்தியம்

அல்லாமா இக்பால் பன்மொழி வல்லுனராக விளங்கினார். அவரது பேச்சு மொழி பஞ்சாபி மொழி. அது அவர் வாழ்ந்த மாகாணம் முழுக்க பரவி இருந்த பொது மொழி. கல்விப் பயிற்சியுடாக அவர் அறிந்து கொண்ட மொழி ஆங்கிலம். அதற்கு மேலதிகமாக ஜேர்மன் மொழியியையும் அவர் கற்றுக் கொண்டார். பஞ்சாபி மொழிக்கு அடுத்ததாக அவர் வாழ்ந்த மாகாணத்திலும் மாகாணத்திற்கு வெளியிலும் முஸ்லிம்களின் முக்கிய மொழியாக உருது விளங்கியது. இக்பால் உருது மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

இக்பால் அறிந்திருந்த செம்மொழி பாரசீகம். அது இன்றும் ஈரானின் பிரதான மொழி. அடுத்ததாக அவர் தேர்ச்சிபெற்றிருந்த மொழி அறபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருது மொழியில் இக்பால் குறுகிய கவிதைகளையும் ஓரளவு நீண்ட கவிதைகளையும் பாடியுள்ளார்.

1908 இல் இக்பால் பாடிய உருதுக் கவிதைகளின் தொகுதி ''பாங்கே தாரா'' (பாலைவன மணியோசை) என்ற தொகுப்பாக 1924 இல் வெளிவந்தது. ''பாங்கே தாரா'' அவரது இளமைக் கால கவிதைப் படைப்புக்களாகும். ''கிசாரி ராஹ்'' என்ற நூல் 1922 இல் வெளிவந்தது. ''பாலே ஜிப்ரில் - ஜிப்ரீலின் சிறகுகள்'' 1932 இல் வெளிவந்தது. ''சர்பே காலிம் - மூசோவின் கைத்தடி'' 1936 இல் வெளிவந்தது.

உருது மொழி இலக்கிய உலகில் இக்பால் தன்னிகரற்ற கவிஞராகப் போற்றப்படுகின்றார். தமது தத்துவ சிந்தனைகளைப் பேசுவதற்குப் பாரசீக மொழியை இக்பால் அதிகம் பயன்படுத்தினார். அதிக வாசகர் வட்டாரத்திற்கு அது சென்றடையும் என்ற நம்பிக்கை இக்பாலுக்கு இருந்தது.

கவித்துவம்

''கலை கலைக்காகவே'' என்ற கோட்பாட்டை இக்பால் ஏற்றுக் கொள்ளவில்லை. மனித முன்னேற்றத்திற்காவே கலை என்பது இக்பாலின் எண்ணமாகும். கவிதை வாழ்க்கையின் விமர்சனம் என்று மெத்தியு ஆர்னால்ட் கூறியதை. வாழ்க்கையானது கவிதையின் விமர்சனம் என்ற மற்றொரு உண்மை பற்றி இக்பால் சிந்தித்தார். அதாவது வாழ்க்கையின் விமர்சனம் கவிதை. அதுபோல் கவிதையின் விமர்சனம் வாழ்க்கை என்பது இக்பால் முன்வைத்த கருத்தாகும். (Mustansir Mir, 2006.)

தனது கவிதைகள் ஊடாக இக்பால் உலகப் பார்வை ஒன்றை உருவாக்க முயன்றுள்ளார். இக்பாலின் கவிதைகள் ஒரு தூதினை அல்லது செய்தியைக் கொண்டிருப்பது உண்மையாக இருந்தாலும் அவை மார்க்க உபதேசங்களோ ஒழுக்கப் பரப்புரைகளோ அல்ல. கலையும் சிந்தனையும், மானிடமும் அதன் மகத்துவமும் மண்ணுலகும் மனித சாதனையும் ஆழமான உலகப் பார்வையும் இக்பால் கவிதைகளின் சிகரங்களாகும்.

கவித்துவ செழுமையும், கலை நுட்பமும், அவர் பயன்படுத்திய பாரசீக, உருது மொழிகளின் மொழி வளத்தோடும் ஒன்று கலந்திருந்தன. அந்த மொழிகள் பெற்றுள்ள லயமும் சொல்லியல் வெளிப்பாடுகளும், ஓசை நயங்களும், இன்னிசைப் பண்பும் அவரது கவிதைப் படைப்பின் வெற்றிக்குப் பங்காற்றி உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூமி, ஹாபிஸ் போன்ற கவிஞர்கள் எவ்வாறு அரபுத் தொடர்களையும் சொற்களையும் தமது பாரசீகக் கவிதைகளில் பயன்படுத்தினார்களோ அதே போல் இக்பால் தனது கவிதைகளிலும் அரபு சொற்களை அழுத்த மாகப் பயன்படுத்தி உள்ளார். அதனால் இக்பாலுடைய உருது அல்லது பாரசீகக் கவிதை மொழியை ஒரு சராசரி வாசகனால் புரிந்து கொள்வது இலகுவானது அல்ல என்றும் கூறப்படுகிறது. (பார்க்க: Mustansir Mir, 2006)

மொழிபெயர்ப்பு

சொல்லுக்குச் சொல் என்ற வகையில் அமையும் இலக்கிய மொழிபெயர்ப் பானது முழுமையானதாக அமைவதில்லை. கவிஞனின் நோக்கம் அவனது அகத் தூண்டல் என்பவற்றை மொழிபெயர்ப்பாளன் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேவேளை சமமான கவிதையை மொழி பெயர்ப்பாளர் உருவாக்க முயற்சிக்க வேண்டும் என்பது ஸ்டெபன் ஸ்பென்டர் இன் கருத்தாகும். எமது இந்நூல் இந்த இலக்குகளை வெளிப்படுத்துவதாகக் கருத முடியும்.

இக்பாலின் கவிதைகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு எழுத்தாளர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். எழுத்தாளர்கள் ஆர்.பி.எம். கனி, அப்துல் வஹ்ஹாப், அப்துல்காதர் லெப்பை போன்றோர் பிரதான மொழி பெயர்ப்பாளர்கள் எனலாம். ஆர்.ஏ நிக்கல்ஸன், ஏ.ஜே ஆர்பரி போன்றவர்கள் பிரதான ஆங்கில மொழிபெயர்பாளர்களாகும். பஷீர் அகமத் தார், வி.ஜி. கியர்னன், அல்தாப் ஹூசைன் போன்றோரும் சிறந்த மொழிபெயர்ப்பாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

ஆர்.ஏ. நிக்கல்ஸன், ஜலாலுத்தீன் ரூமியை மொழிபெயர்த்த புகழ்பெற்ற மொழிபெயர்ப்பாளர். இக்பாலின் ''அஸ்ராரே குத்இ'' அவரது மொழி பெயர்ப்பாகும். ரூமியின் கஸல் பாடல்களை நிக்கல்ஸன் அழகாக மொழி மாற்றம் செய்துள்ளார். அதற்காக இலக்கிய உலகம் அவரைப் பாராட்டு கின்றது. இக்பாலின் அஸ்ராரே குத்இ மொழிபெயர்ப்பில் இந்த அழகும் கம்பீரமும் வெளிப்படவில்லை என்ற ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. மொழிபெயர்ப்பு சரியாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்த போதிலும் ''அஸ்ராரே குத்இ''யின் மூலத்தில் இருந்த அனற் பொறியையும் கிளர்ச்சி யூட்டும் அவாவைவும் மொழிபெயர்ப்பு வெளிப்படுத்தவில்லை என்பது விமர்சகர்களின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் வி.ஜி. கியர்னனின் மொழிபெயர்ப்பு சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. இக்பாலின் பாடல் களின் இயல்பான எதுகை மோனை உட்பட இசை லய வடிவங்களை யும் கொண்டதாக கியர்னனின் மொழி பெயர்ப்பு அமைந்துள்ளதாகவும் உருதுக் கவிதையின் சீர்களும் ஒழுங்கமைப்பும் கியர்னனினால் சிறப்பாகத் தரப்பட்டுள்ளதாகவும், விமர்சகர்கள் பாராட்டியுள்ளனர்.

குர்துபா பள்ளிவாசல் என்ற அழகான நீள் கவிதையில் கியர்னனின் மொழிபெயர்ப்புத் திறன் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. பண்ணாமத்துக் கவிராயரின் குர்துபா பள்ளிவாசல் மொழிபெயர்ப்பிலும் கியர்னனின் கவிதைக் கம்பீரத்தையும் அழகையும் தெளிவாக அவதானிக்க முடியும்.

ஆங்கில வாசகர்களால் அனுபவிக்கக்கூடிய விதத்தில் இக்பாலின் உருவகங்களையும் படிமங்களையும் அவற்றின் கருத்துச் சுவை குன்றாது கியர்னன் மொழியாக்கம் செய்துள்ளார். சில தவறுகள் இருந்தாலும் கியர்னனின் மொழி பெயர்ப்பு அவரது பாரிய உழைப்பையும் கவிதை அழகின் பூர்த்தியையும் நிறைவு செய்துள்ளது என்பது விமர்சகர்களின் ஏகமானதான கருத்தாகும்.

கியர்னன் தனது மொழி பெயர்ப்பைப் பற்றிக் கூறும்போது என்னால் முடிந்த வரை பாடலின் பொருளை மூல வடிவத்தில் உள்ளவாறு கூட்டல் குறைத்தல்கள் அற்ற விதத்தில் தர முயன்றுள்ளேன் என்று கூறுகின்றார். கவிதை வரிகளை அமைப்பதில் இக்பால் நுணுக்கமான ஒரு செவ்வியல் முறையை அனுசரித்து வந்திருப்பதை தான் அவதானித்துள்ளதாகவும் கியர்னான் குறிப்பட்டுள்ளார். தமது மொழிபெயர்ப்பைச் செம்மைப்படுத்து வதற்காக பல அறிஞர்களின் உதவியைத் தான் நாடியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் நாதிர் அகமத்ஷா இந்த விடயத்தில் அவருக்கு பிரதான ஆலோசகராக விளங்கியுள்ளார்.

இக்பாலின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் ஆர்வம் காட்டி வந்த எம்.டி தாஸிர் ஒரு முறை அல்லாமா இக்பாலிடம் உங்களது கவிதைகளை மொழி பெயர்ப்பதற்கு நீங்கள்தான் பொருத்தமானவர் என்று கூறினார். அதற்கு இக்பால், ''எனது ஏதாவது ஒரு கவிதையை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பேனாயின் அது மற்றொரு புதிய கவிதை ஆகிவிடும். இது மொழி பெயர்ப்பாளர் ஒருவர் தவிர்த்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.'' என்று இக்பால் பதில் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாமத்துக் கவிராயர் அவர்களின் ஆங்கில வழி மொழி பெயர்ப்பு முழுமையாக கியர்னனின் ஆங்கில மொழிபெயர்ப்பை தழுவியதாகும். கியர்னன் புரிந்து கொண்ட இக்பாலின் கவிதைச் செய்திகளும், அவர் வடிவமைத்த எதுகை மோனைகளும், கற்பனை நுட்பங்களும் பண்ணாமத்துக் கவிராயரினால் உணர்ச்சி பூர்வமான தமிழ்க் கவிதை களாக்கபட்டுள்ளன. உதாரணத்திற்கு பின்வரும் கஸல் பாடலை மட்டும் இங்கு பார்க்கலாம்.

இறைவா, என் எஜமானே!
வனப்பு மிக்கதுதான்
வேகமாய்ச் சுழலுமிப் பூமி
எனினும் -
வஞ்சமில்லாமனமும்
நுண்மதி படைத்த மூளையும்
துவளுவதும்,
பெருமூச் செறிவதும் ஏன்?
வெள்ளையன் தான்
இப்பூமியின் பெருங்கடவுள் -
ரோசா வனங்களையும்
கசகசா வெளிகளையும்
மேய்கின்றன அவன் கழுதைகள்,
வாட்டிய இறைச்சியும்
சிவந்த மதுவும்
அவன் ஆலயங்களில்
பயான்களும், பகட்டும்தான் - உங்கள்
மஸ்ஜிதில்
நீதமானவை உங்கள் சட்டங்கள் -
வியாக்கியானிகளோ
திரித்துக்
கொச்சைப்படுத்துகின்றார்
குர்ஆனை
....
எனது வீடு
கிழக்கும் அல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கும் அல்ல
எனது சொந்த இடம்
சமர்க்கந்து அல்ல
இஸ்பஹான், டெல்லியல்ல
தெய்வ வெறிகொண்டுத்
திரியு மோர் ஃபக்கீர் நான் -
உண்மை யென்று பட்டதைத்
தீர்க்கமுடன் உரைப்பவன்.
மதகுருக்களால் நான்
ஏமாற்றப்பட்டதில்லை
நாகரீக வெளிப்பகட்டில்
மயங்கியதுமில்லை.

கஸல்களுக்கு உரித்தான இரக்கத் தன்மைக்கும் பரிந்துணர்வுக்கும் அப்பால் இக்பாலின் கஸல்கள் அனலாகக் கொதிக்கின்றன. அவர் தொடுக்கும் கேள்விக் கவிதைகள் விண்ணை மோதிப் பூமியை அதிரவைக்கின்றன. கஸல்கள் பகுதியில் முதல் பாடலைப் பாருங்கள்.

காலத்தின் அம் முதல்விடியலின்போது
தேவதூதனொருவன் கலகஞ் செய்யத்
துணிவு பெற்றது எப்படி -
நான் தெரிந்து கொள்ளலாமா?
ஷைத்தான் யாரின் விசுவாசி
எனதா? உனதா?
ஜிப்றீல் உன்னுடையவர்
முஹம்மத் உன்னுடையவர்
குர்ஆன் உன்னுடையது - ஆயினும்
அவற்றின் அருள்மொழிகளில் எழுதப்பட்டுள்ள
ஆன்மா யாருடையது -
எனதா? உனதா?

பாருக்கின் இயல்பான உணர்ச்சி வேகத்திற்கு ஏற்ப மூலக் கவிதைகள் சமமாகவே சஞ்சரிப்பதால் தமிழ் மொழிபெயர்ப்பிலும் அனல் தெறிப்பதை உணரமுடிகிறது. தமிழில் பாடப்பாட்டவை போல் கஸல்களும் ருபய்யாத் களும் பளிச்சென நமது மனக் குகைக்குள் கும்மாளமிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலக் கவித்து வத்தின் உண்மைச் சோதியில் மொழிபெயர்ப்புக்கள் ஆசீர்வதிக்கப் பட்டது போல் மனதில் பெருமிதம் பரவுகிறது. இது தான் இந்த மொழிபெயர்ப்பின் வெற்றி என்று நான் நினைக்கின்றேன்.

இக்பாலின் கஸல் மற்றும் இசை மரபுக் கவிதைகள் பாமரர்களின் உள்ளங்களையும் கவர்வனவாக இருந்ததன. அவரது தேச பக்திப் பாடல்களை ஒரு காலத்தில் தேசிய கீதங்களைப் போல் இந்தியமக்கள் பாடி மகிழ்ந்தனர்.

இஸ்லாத்தின் உண்மையான அர்த்தத்தை இக்பாலின் படைப்புக்கள் மூலமாகத் தான் தாம் விளங்கிக் கொண்டதாக அலி ஜவுஹர் குறிப் பிட்டுள்ளார். இந்தியாவில் முஸ்லிம் அடையாளத்திற்கும், பாகிஸ்தான் உருவாக்கத்திற்கான வழிகாட்டலுக்கும் இக்பாலின் சிந்தனைகள் தம்மை எவ்வாறு தூண்டி வந்தன என்பது பற்றி முஹம்மதலி ஜின்னா பல முறை பாராட்டியிருக்கின்றார்.

இஸ்லாமிய உலக அரசியல் நெருக்கடி, மேற்கத்திய இஸ்லாமிய கருத்து மோதல்கள், நவீன இஸ்லாமிய அரசு, மனிதத்துவத்தின் மீதான நம்பிக்கை, மனித வாழ்க்கை, மனித மனம், மனித இருப்பு பற்றி இக்பால் பேசியவை இன்றும் அவற்றின் பங்களிப்பை வழங்கத் தகுதியான சிந்தனைகளாக எதிரொலித்து வருகின்றன.

இருந்தபோதும் இக்பால் மீதான ஆர்வம், மதிப்பு என்பவற்றிற்கு அப்பால் அவரது படைப்புக்கள் அந்தப் படைப்புக்களின் தகுதிக்கு ஏற்றவாறு நயக்கப்பட்டதா, அதன் மீது விமர்சனப் பார்வைகள் எவ்வளவு தூரம் முன்வைக்கப்பட்டுள்ளன என்பன கேள்விக்குரியதாகும். தனது பாடல்களிலும், தமது மெய்யியல் சிந்தனைகளிலும் இக்பால் முன்வைத்த கருத்துக்கள் எவ்வளவு தூரம் சரியான முறையில் சமுதாயத்தை வந்து சேர்ந்தன? இது போன்ற கேள்விகளை நாமும் எழுப்பலாம்.

எம்.எஸ்.எம். அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 1

விண்மீன்கள் அவற்றின் பாதையிலிருந்து
விலகிச் சென்றால்
வானம் எனதா? உனதா?

உலகின் போக்குபற்றி நான்
கவலைப் பட வேண்டுமென்றால்
இவ்வுலகம் எனதா? உனதா?

நித்தியத்துவம் வேட்கைப்புயலற்ற
பாழ்வெளியானால்
தவறு எனதா? உனதா?

காலத்தின் அம் முதல்விடியலின்போது
தேவதூதனொருவன் கலகஞ் செய்யத்
துணிவு பெற்றது எப்படி -
நான் தெரிந்து கொள்ளலாமா?
ஷைத்தான் யாரின் விசுவாசி
எனதா? உனதா?

ஜிப்றீல் உன்னுடையவர்
முஹம்மத் உன்னுடையவர்
குர்ஆன் உன்னுடையது - ஆயினும்
அவற்றின் அருள்மொழிகளில் எழுதப்பட்டுள்ள
ஆன்மா யாருடையது -
எனதா? உனதா?

மனிதன்- புழுதியால் ஆன அப்பொருள்
- உன்னுலகில் ஒளியேற்றும் அந்நட்சத்திரம்
- அவன் மெலிவுற்று நலிந்தால்,
நஷ்டம் யாருமையது -
எனதா? உனதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 2

எனது முறையீட்டைக் கேட்டு
என்மீது
அனுதாபப்படு - அல்லது
வேண்டாம் விடு

சுதந்திரமாய்த் திரியும்
ஆன்மாவுடையவன்
சகாயம் கேட்டு
யாசித்து வர மாட்டான்

விரிந்த வான்வெளி
உறைந்த இக்காற்று
மனிதனின் சிட்டிகை உப்பு
யாவையும் சிருஷ்டிப்பதற்கு
உந்துதலாய் உனக்கமைந்தது
கருணையா - அல்லது
குரூர சிந்தையா?

ரோஜாவின் இதழ்க் கூடாரத்தைச்
சிதைத்து விட்டது தோட்டத்தென்றல் -
இதுவா வுன்
தயாள வசந்தம்?
இதுவா வுன்
நியாயக் காற்றின் நிர்வாகம்?

பாபம் புரிந்தேன் - சுவனத்திலிருந்து
தனித்துப் புறமானேன் - ஆயினும்
உன்னுலகின் வெற்றிடத்தை நிரப்ப
அந்த அமரர்களால் முடியவில்லை
எதற்கும் துணிந்த என்இயல்பின் மீது
அருள் சொரிகின்றது - நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாணமாய்விட்ட
அடர்வனம்

ஆபத்தை யெதிர்கொள்ளத்
துடிக்கும் என் உணர்வு,
பதுங்கும் எதிரியில்லாப் பூஞ்செடியால்
ஈர்க்கப்படுவதில்லை யிவன் ஒருபோதும்

உனது -
அமரர்களின் இறக்கைகளுக்கப்பால்
அமைந்துள்ள தென் காதலின் இருப்பிடம்
ஆவலும் துணிவும் கொண்டோர் மட்டுமே
அங்கடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 3

எதிர்த்திசை விரையுது எங்கள் பூமி
வேகமாய்ச் சுழலும் தாராகணங்கள்
ஒவ்வோ ரணுவின் இதயத் துடிப்பிலும்
இறுதிநாள் எக்காளம் கேட்குது சகியே !
இறைவன் சபைதனிலிருந்து, இழிந்தன
விசுவாசம், அறிவெனும் விழுமிய செல்வங்கள்
ஆபத்தாய் மயக்கூட்டும், அணிமணி புனைந்து,
ஆடல் புரியுது நாத்திகம் சகியே !

தீராத நோய்க்கு - தளம்பும் மனதுக்கு
ஆனந்த அமுதே அன்றுபோல் ஔடதம்
இஸ்லாத்தின் விரைத்த வணக்கஸ் தலத்தினுள்
ஆசைத்தீ கிளர்ந்தெழக் காணோம் சகியே !
முக்காட்டுத் திரையுள் அறியப் படாதின்னும்
மறைந்தே யுள்ளதுன் இன்முகம் சகியே !

மாற்றமில்லாமல் பாரசீகத்தின்
மலர்வனம், மண், சிற்றோடை தப்றீஸ்
மாறில எதுவும் மாறில வெனினும்
அந்த மண்ணில் புதியதோர் ரூமியை
ஏனோ இன்னும் காண்கிலேன் சகியே !

தரிசு நிலங்களைப் பார்த்து இக்பால்
நிராசை யடையப் போவதில்லை
சிறுமழை - தான்யங்கள் மண்ணில் செழிக்கும்
சாம்ராஜ்யத்தின் இரகசி யங்கள்
அருளப்பட் டுள்ளன இந்த ஏழைக்கு
பர்வேஷ் குவித்த செல்வங்களை விடப்
பெறுமதி வாய்ந்த தென் பாடல்கள் சகியே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 4

கொணர்ந்து வை மீண்டும் கிண்ணமும் மதுவும்
இருக்கட்டும் இருக்கை எனதாய் -
　　முன்னூ றாண்டுகள் மூடப்பட்டுள்ளன
　　இந்திய மதுசா லைகள்
　　ஏங்கிக் கிடக்கிறோம் நாமிப் பொழுது
　　உனதரும் கொடைக் காய் சகியே !

கவிதை யெனுமென் பாண்டத்தி லின்னும்
எஞ்சின கடைசித் துளிகள் -
　　விலக்கப் பட்டதாய்க் கடுகடுத் தென்னைக்
　　கடிகின்றா ரடி முல்லா !
சத்திய வனத்தில் பதுங்கிய சிம்ம
இதயங்க ளிப்போ தில்லை
　　மதகுரு முன்னால் கல்லறை முன்னால்
　　மண்டியிடுகிறான் மனிதன்

காதலின் வீர வாளினைச் கவர்ந்துச்
சென்றவர் யாரடி சகியே !
வாளற்ற உறையை முறுக்குகின்றன
மதிநுட்பக் கரங்கள் வீணே !

உள்ளம் கனன்று எரிந்திடும் பொழுதில்
உயிருக்கு ஒளியேற்றும் கவிதை
அதன் கிரணங்கள் மறைந்திடும் போது
மக்கி மறைகின்ற தெல்லாம் -
　　மறுத்துவி டாதே எனது நீ ளிரவின்
　　சந்திரனை நீ யெனக்கு
　　உனது பாண் டத்தில் முழு நிலா பிர பை
　　ஒளிரக் காண்கிறேன் சகியே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 5

மெதுவாய் எரியும் ஆசைத்தீ
போற்றுதற் கரிய பெருஞ் செல்வம்
தொழுகைப் பாயைச் சுவனத்தின்
இருக்கைக் காக இழந்து விடேன்
உனது சுதந்திர மனிதர்கள்
ஈருலகுக்கும் பொருத்தமிலார் -
சாவின் நுகத்தடிப் பயமிங்கு
வாழ்வின் நுகத்தடி பயமங்கு

காதல் ஒழுங்கையில் அலைபவனைக்
கடுந்திரை கனன்றெழச் செய்யுதடி
நீண்டவுன் தயக்கமென் வேட்கையெனும்
தழல் தீ முண்டெழச் செய்யுதடி -
பாலையில் குன்றில் வாழ்நாளைக்
கழித்திடும் ராஜாளிப் பறவை யதன்
பெருமை கொண்ட கூர்நகங்கள்
கூட்டின் சுள்ளிகள் சுமப்பதுண்டோ?

தனயன் தாங்க வேண்டியதை
இப்றா ஹீமின் புதல்வருக்குக்
கற்றுக் கொடுத்தது மறைநூலா?
தந்தையின் கடாட்ச அருள்விழியா?

துணிவு கொண்ட இதயங்களே
உறுதி கொண்ட ஆன்மாக்களே
வாருங்க ளெந்தன் கல்லறைக்கு -
காற்றில் குன்றென உயர்வதற்குக்
கற்பித்தவன் நான் புழுதிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - களைப்புறும் பணிப்பெண்ணுக் கென்
உதவி யென்பது தேவையில்லை
பூவரசம் பூ சிவக்கச் செய்தல்
இயற்கைக்குரிய விசனமன்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 6

அவ்வாறானால் -
மறந்து விட்டனையோ
காதல் கல்லூரியை ?
அச்சுடர்விழியின் சாட்டையை?

இச் சகாப்தத்தில்
கலாசாலையில் உருவான
அப் பாதிதேவதை
பழைய அவிஷ்வாசம் வார்த்த
அவ் வனப்பை யிழந்து விட்டாள்.

விசித்திரமான திவ் வுலகம்
விரிந்த இதன் பரப்பினுள்
அமைதியான ஒதுங்கிடமில்லை.

உன்
கருணை மழைக்காகக் காத்திருக்கின்றது
திராட்சைக் கொடி
பாரசீகத்தின் மதுசாலைகளிலிப்போ
ஞானமது விற்பனையாவதில்லை.

வசந்தத்தின் தூண்டலே
என் பாடல்களென
நினைத்தன ரென் நண்பர்கள்
இவை -
காதலின் ஸ்வரங்கள் இசைப்பதென
அவரறியார்?

இவனின்
சதையாலும் ரத்தத்தாலும்
இப்பூமியை யமைத்தவன் நீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் தீராத ஜூரம்
தியாகத்தின் தங்கக் கிரீடம்

உன்
கொடைகளால் கழிகின்றன
எனது நாட்கள்,
என்
நண்பர்கள் பற்றியோ
குளிர்காலம் பற்றியோ
கவலைப்பட்டு
முறையிடேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 7

இறைவா, என் எஜமானே,
வனப்பு மிக்கதுதான்
வேகமாய்ச் சுழலுமிப் பூமி
எனினும் -
வஞ்சமில்லா மனமும்
நுண்மதி படைத்த மூளையும்
துவளுவதும்,
பெருமூச் செறிவதும் ஏன்?

வெள்ளையன் தான்
இப்பூமியின் பெருங்கடவுள் -
ரோசா வனங்களையும்
கசகசா வெளிகளையும்
மேய்கின்றன அவன் கழுதைகள்,
அவன் ஆலயங்களில்
வாட்டிய இறைச்சியும்
சிவந்த மதுவும்

பயான்களும், பகட்டும்தான்
மஸ்ஜிதில் கிடைப்பது
நீதமானவை உன் சட்டங்கள் -
வியாக்கியானிகளோ
திரித்துக்
கொச்சைப் படுத்துகின்றார்
குர்ஆனை.

உனது கவனத்தைப்
பார்த்தவர் எவருமிலர்
ஆனாலும்
ஐரோப்பாவின் ஒவ்வொரு கிராமமும்
போட்டியிடுகின்றது அதனுடன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நெடுங்காலம்
என் நினைவுகள்
சுவனத்தில் அலைந்து திரிந்தன
சந்திரனின் குருட்டுக் குகைக்குள்
அவையினி
குடிபுகட்டும்.

மண்புழுதி நான் - எனினும்
அவதான அறிவும்
பரிசோதனைத் திறனும்
இயற்கையின் சீதனமாய்
அடையப் பெற்றவன்.

எனது சொந்த இடம்
சமர்கந்து அல்ல
இஸ்பஹான், டெல்லியல்ல
தெய்வ வெறிகொண்டுத்
திரியு மோர் ஃபக்கீர் நான் -
உண்மை யென்று பட்டதைத்
தீர்க்கமுடன் உரைப்பவன்.

மதகுருக்களால் நான்
ஏமாற்றப் பட்டதில்லை
நாகரீக வெளிப்பகட்டில்
மயங்கியது மில்லை.

இனசனங்களென்னை
ஏசி யிகழ்ந்தாலும்
அந்நியர்களென்னை
நேச மற்றுவெறுத்தாலும்
அமுதமும் விஷமும் நான்
பிரித்தறிய வல்லவன்
உண்மையை எடைபோட்டுப்
பார்க்கத் தெரிந்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றமெனக் குப்பை மேட்டைக்
கண்டு மயங்கிடேன்.

வாணலியில் கடுகாகப்
பொரிந்து வெடிக்காமல்
நம்றூதின் நெருப்பினுள்
சத்தியத்தின் மௌன
சாட்சியமாய் ஆனவன்
- நன்மையேற்றுத் தீதொறுத்தேன்.

விலங்குகளறு பட
விடுதலையாய்த் திரிகின்றேன்
இறைவன் முன்னிலையில்
அடங்காத இக்பாலின்
நாவை யடக்க
இவர்களால் முடிந்திடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 8

என்
பித்தம் அடங்கப்
போதாது
இயற்கையின்
இம் முழு பரப்பும்.

பாலைவனங்களில்
அவ்வலைச்சல்கள்
சிறிதும் பயனற்றுப் போயின
அகம் ஒன்றால் தான் முடியும்
புலன்களின் வசியத்தை மீற.
விழிகளைக் கசக்கு
சோம்பல் விடு -
    ஒளியே இயற்கையின் விழிகள்
    அறிவும் இறைவெளிப்பாடும் மோதுகையில்
    தவறிழைக்குது விசுவாசம் -
    சத்துருவாக நினைக்குது
    சிலுவை மீதுள்ள ஞானியே.

சிறையில் கிடந்தாலும்
சிம்மாசனத்தில மர்ந்தாலும்
பூமியை எள்ளும் துணிவுதான்
ஏகனது தூய ஆன்மாக்களின் கேடயம்
எரிவு கொள்ளாதீர் ஜிப்றீலே
என் பரவசம் கண்டு.

கிழக்கிலும் மேற்கிலும்
மதுசாலைகள் நான் பார்த்துள்ளேன் -
மதுவூற்றிக் கொடுப்போன்
இங்கில்லை,
திராட்சையின் தகதகப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கில்லை
மகுடங்களை மண்ணில்
வீழ்த்தவல்ல துறவிகள்
ஈரானில், தாத்தாரியில்
இன்றில்லை.

தூதரின் குடும்பக் கம்பளத்தைத்
திருடி விற்கின்றார்
வாரிசுகள்
அவசரப்பட்டு நான் சூர் ஊதியதாய்
இறையிடம் என்னை
இஸ்ராஃபீல் கடிந்துரைக்க -
மக்கா உறங்குகையில் சீனாவில்
வணக்க வழிபாடுகள் நிகழந்ததெனில்
உலக முடிவு வெகுதொலைவிலோவென
இடித்துக் கேட்டான் இறைவன்.

விசுவாசக் கிண்ணத்தில்
ஊற்றிக் கொடுப்பதற்கு
ஒருவரும் இலரெனினும் -
பொங்கி வழிகிறது
நவீன சிந்தனைச் சாடி
அவிசுவாச மதுவால்
பாணனின்
சாதுர்ய விரல்கள் மீட்டும்
நரம்பிசைக் கடங்கித்
தாழ்ந்த ஸ்தாயியில்
முனகுகின்றது
ஐரோப்பாவின் சோகம்

சுறாவைப் போஷித்து வளர்த்த
சமுத்திரங்களின் ஆழத்தில்
அதன் குகையைப் பெயர்த்துத் தள்ளும்
அங்கு மையம் கொண்ட புயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையின் விழிகளை நம்பாதே -
விடுதலையுடன் கைகோர்த்திருப்பதுதான்
தெளிவான பார்வை.

கால நீரோட்டத்தில்
ஆழச் சுழியோடி
நாளைய நன்முத்தைக்
கொணர்பவனிடம் தான்
இன்றின் அதிகாரத்தை ஒப்படைப்பான்
இறைவன்.

கல்லை யுருகி வடியச் செய்யும்
கண்ணாடி வார்ப்போனின் கலை -
என் ரசவாதமோ
கண்ணாடியை தீத்தட்டிக் கல்லாய்க்
கெட்டி யாக்கும்
ஃபிர் அவுன் சதிசெய்கிறான்
எனக்கெதிராய்
எனினு மென்?
மூசாவின் வெண்கரம் போல்
உயர்த்துகின்ற தென் கையை
வானம்

பூமியின் குப்பைக் கூளங்களால்
அணைக்க முடியாதது,
பாலைவனம் முழுவதும் ஒளியேற்ற
இறைவன் தூண்டிய
இக்கனற் பொறி -
அவனின் சுடர்ச் சோதி

சுய நோக்குடன்
சுய பராமரிப்புடன்
சீசரின், குஸ்றுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை வாசலில்
அச்சமின்றி நிற்கின்றது காதல்.

சந்திரனும்
கார்த்திகை நட்சத்திரமும்
என்னால் கவரப்படின்
அதிசயமென்ன?

இறைதூதரின் ஒட்டகைச் சேணத்துடன்
இறுகப் பிணிக்கப்பட்டுள்ளேன் நான் -
அவரே வழிகாட்டி
இறுதித் தூதர்
அனைவரினதும் அதிபர்
சினாயின் வெளிச்சத்தை யெம்
புழுதி மண்ணுக்கு வழங்கியவர்.

ஒளியைத் தூண்டச்
சோம்புவ துண்டோ
காதல் கொண்ட விழிகள்,
ஆதியே, அந்தமே,
வார்த்தையே, வேதமே
வாழ்த்துக அவரைச்
சோபனம் கூறி.

சினாயின் புனிதம் வேண்டி
அங்கு செல்லேன்
முத்துக் குளிப்பதற்கு -
இங்கு எழும்பித் தணியும்
அலைகளில்
இன்னும் விளைகின்றன
ஒருகோடி முத்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 9

நிலம், காற்று, நீரினால்
நெய்யப்பட்ட
நெடும் பொருளே
        வெளிச்சத்துக்குக் கொணரப்பட்ட
        இரகசியம்
        நீயா? நானா ?
மையிருளில் இன்னும்
மறைக்கப் பட்டிருப்பது
        நீயா? நானா ?

வாழ்க்கையென
மனிதர் சொல்லும்
துயரின், வேதனையின்
இன்னல்களின் நீளிரவில்
இன்பொழுதாய்ப் புலர்ந்ததும் -
மினராவி லிருந்தெழும்
அதான் ஓசையானதும்
நீயா? நானா?

காலத்தின் நெடுந்தோள்களில்
கனக்கும் சுமை
நீயா ? நானா ?
விடியலிலும் அந்தியிலும்
கால்கள் கனல் மூள
விரையும் கர்மவீரன்
நீயா ? நானா ?

குருட்டுப் புழுதி மண்
நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுள்ள புழுதிமண்
நான் -
இருளின்
வறள் நிலத்தில்
சிற்றோடையாய்ப் பாய்வது
நீயா ? நானா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 10

குன்றும் பள்ளத்தாக்குகளும்
கசகசாச் செடியின் நீபங்களால்
கனன்று பிரசாசிக்கின்றன மீண்டும்
சோதியாய் -
ஊதா ----- வெளிர்நீல ---- பொன்னிற ஆடைகளில்
வரிசை வரிசையாய்ப் பூக்கள் -
வனப்பு மிகு வனதேவதைகள்
செம்மை படர்ந்த விடியலின் மென்காற்று
விட்டுச் சென்றுள்ள தோர் பனித்துளியை
காலைச் சூர்யனின் இளங்கிரணங்கள்
ஒளிரச் செய்துள்ளன இவ் வெண்முத்தை.

பசிய வனங்கள் அழைக்கு மிடத்தைவிட
வேறிடம் விரும்பாத அழகெனும் வனிதை
வனப்பினைக் காட்டித் திரை நீக்காவிடின்
எங்குண்டு இனிமை -
நகரிலா ? நாட்டுப் புறத்திலா ?

ஆன்மாவினுள் மூழ்கி
அங்கு புதைந்துள்ள
காலடிகளைக் கண்டுபிடி.

நீ எனதாக மாட்டாயா?
பரவாயில்லை
உனதாகவே நீயிரு.

எரிகனலும்,
பரவசங்காணலும்,
ஏக்கங்களும் கொண்டதுதான்
ஆன்ம வுலகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனுலகோ -
லாபக் கணக்கு பார்ப்பது,
கபடும் சூதும் நிறைந்தது,
அசூசை யானது.

பறிபோவதில்லை யொருபோதும்
வெல்லப்பட்ட
ஆன்மாவின் புதையல்.

சேர்த்துக் குவிக்கப் படும் செல்வம்
சென்றுவிடும் -
தங்காது.

ஆன்ம வுலகில்
வெள்ளையனின் ராஜ்யத்தை
நான் கண்டதில்லை,
ஹிந்துவும் முஸ்லிமும் அங்கு
சண்டை யிடுவதில்லை.

'வெட்கம், படு வெட்கம்' என
என்மீது வர்ஷிக்கப்பட்டன
அந்த ஞானியின் வார்த்தைகள் :
அந்நியனின் அதிகாரத்தின் முன்
கூனிக் குறுகினால்
உடலையும் உன் ஆன்மாவையும் நீ
இழப்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 11

வஞ்சக் கோழை தளபதி ,
புறமுதுகுக் காட்டிப்
பின்வாங்கும் சைனியம்,
குறிவைக்க இலக்கின்றித்
துவண்டுத் தொங்கும் அம்பு !
இவர்கள் நெருங்க முடியாத
தூரத்தில் உள்ளது
வாழ்வின் முத்திரை தாங்கிய
சிப்பி.

அலைகளை யிழுத்துச் சென்று
ஆழியின் அடிப் பாதையில்
தேடல் புரிந்துள்ளேன் நான்.

சமுத்திரத்தினுள் மூழ்கு
சிலைகளில் மோகத்தை விடு -
அவற்றின் கர்ப்பக் கிருகங்களில் வர்ணந்தீட்டவுன்
இதயக் குருதியைக் கொட்டாதே.

காதலின், சாவின்
சன்னிதிகளைத்
திரைநீக்கஞ் செய்கிறேன் நான் -
அவமானம் அப்பிய வாழ்வுதான்
மரணம்
மானத்துக்காக உயிர்துறப்பது
காதல்.

ரூமியின் மஜ்லிஸில்
நான் பொறுக்கிய மணிகள்
ஒன்றிரண்டல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தப் படித்த மேதாவிகளின்
முழுக் கூட்டமும்
துணிவு கொண்டவோர்
இதயத்துக்குச் சமமாகுமா?

புதிய தொரு மூசா
முற்றுகைக்குத் தலைமை தாங்கினால்
சினாயின் விருட்சத்திலிருந்து மீண்டும்
அச்சம் தவிர் என்னும்
ஒலியெழக் கூடும்.

மதினாவின் புழுதியால்
சுர்மா தீட்டிய என் விழிகளைக்
கூசச் செய்வதில்லை
மேலை விஞ்ஞான மினுக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 12

வாழ்க்கை யென்பது பயணம்
ஓய்வுறாத இயக்கம்.

காற்றிலும், நீரிலும்
காணும் உயிர்ராசிகள்
சதாவும் இயங்குவன
சலிப்பின்றி.

வீரனே,
படைமுகத்தவனே
வாட்களேந்தி யுனக்கு
வீர வணக்கஞ் செய்வர்
வானமரர்.

ஆயினும்,
ஏன் இக்கபோதித்தனம் ?
ஏனோ இந்த
அச்சவுணர்வு ?

உன்பெருமை அறியாதவனே
இருளுக்கு அடிபணியும்
உன் அடிமைத்தனம்
எத்தனை நாளைக்கு ?

இப்போதே - உன்
தெரிவினை மேற்கொள் :

இளவரசனின் செங்கோல்
தவசியின் அரும் பணம்
எது வேண்டும் சொல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முல்லாக்களின்
ஆயாசமும், தளர்ச்சியும்
நானறிவேன் -
    சோர்வூட்டும் மருந்தை
    ஊற்றித் தருவர்
    உபந்நியாசங்களில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 13

உன்னதத்துக்காக ஏங்கும்
உயிரணுக்கள் ஒவ்வொன்றும் -
அகத்தின் வளர்ச்சிதான்
பூமியின் நியதி
மலரும் வேட்கையற்ற வாழ்வுதான்
மரணம்.
இறையின் சிருஷ்டிச் செயல்போன்றது
சுயத்தின் உருவாக்கம்
சிறுகடுகும் மலையாகிவிடும்
சுயத்தின் மூலம்
இல்லையேல் -
மாமலையும் சிறு கடுகுதான்

அலைகின்றன விண்மீன்கள்
சந்திப் பின்றி
பிரிவு எல்லா உயிர்கள் மீதும்
சாட்டப்பட்ட விதி
இரவின் கடைசி மணித்துளிகளில்
வெளிறிவிடும் வெண்மதியம்

முணுமுணுக்கும் தோழமைகள்
முடுகுவ தில்லை.
உன் இதயமே
உனது மெழுகுவர்த்தி
உன் சுயமே
உனக்குத் தேவையான ஒளி
நீயே
இவ்வுலகின் உண்மை
ஏனையவை
வெறும் மாயை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சந்தேகங்களைக்
கிளப்புகின்றன
பாலைவன முட்கள் -
உன் பாதங்களில்
உதிரம் வடியுதென
முறையிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 14

உடுக்குலத்துக் கப்பாலும்
உலகங்கள் பலவுண்டு

காதல் முகங்கொடுக்கும்
சோதனைகள் வேறுண்டு

அத்தொலைவு உயிரற்ற
அத்துவான வெளியன்று

கரவான்கள் ஓராயிரம்
பயணிக்கின்ற தங்கே

தோட்டங்கள் வேறுண்டு
கூடுகளும் வேறுண்டு

பூமியின் தழுவலில்
திருப்தி கொண்டு விடாதே

இழந்த வோர் வீட்டுக்காய்
ஏனிந்த ஒப்பாரி
விசாரம் குடியேற
வேறு மனைகளுண்டு.

புதிய வானங்களில்
சஞ்சாரம் செய்வதற்கு
இறக்கை விரிக்கப்
பிறந்த ராஜாளி நீ.

பகலிரவு எனும் பொறியில்
பாதங்கள் சிக்காமல்
பார்த்துக் கொள்கவ்னமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு காலம் உனது.
வேறு வெளி உனது.

தனிமைத் துயர் படிந்த
நாட்கள் போய்விட்டன
- பிறர் அறிவார் இப்போதென்
இதயத்தின் நிலவரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 15

இயற்கையின் சூழ்ச்சி யெனக்கு
வலை விரிப்பினும்
உயரங்களைத் தொடத்
தாவும் உந்தல்
மறைந்துள்ளது என் புழுதியில்

அறிவின் எல்லைகளைத்
தாண்டிச் செல்லும்
என் தூரப் பார்வை

இப் புழுதியின்
வெறி யாவேசத்தால்
கிழிந்தது
ஜிப்றீலின் அங்கி

கூடுகட்டத் தோட்டத்தில்
துரும்புகளைச் சேகரித்துத்
திரியாது
இப் புழுதி

வீடற்றது தான் எனினும்
திருப்தி யுற்றது.
நட்சத்திரங்கள்
நாணும்படி யொளிரும்
விழித்துளிகளை
அரும் பரிசாய்
இதற்கு
வழங்கியிருக்கிறான்
அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 16

திருஷ்டி ஞானம் கொண்டோதி
சிருஷ்டிப்பர் உலகங்கள்
புதிது புதிதாய்.

கூபா ...... பகுதாது ...... எனக்
குறுகிவிடாது என் பார்வை

நவீன கல்விப் போதையினால்
பகட்டுச் சிறகு விரித்து
மேற்கின் மதுசாலையை
நாடுகிறா ரின்னும்
நிதான மறியா இளைஞர்

தத்துவாசிரியன் மேல்
மதகுரு மேல்
அதிக அக்கறை எனக்கில்லை
முன்னவர்
இதயத்தை மறுத்திடுவார்
பின்னவரால்
மனம், பார்வை
இரண்டும் கெடும்.

சட்ட மேதைகளை அவமதித்து
மட்டம் தட்டும் நோக்கம் இல்லை

எனக்குள்ள பிரச்சினை -
மனிதனின் விடுதலை

பணக்காரரின்
ஆடம்பரப் பொருட்கள்
பரம்பியுள்ளன
உலகச் சந்தையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும்,
இறைவன் வழங்கிய வெகுமதி -
காதலின் பிரயாசம்
வேதனை யெனும் பெருநிதியம்
யாரிட முண்டு?

கல்லூரியிலும்
குருமனையிலும்
சிந்தை தளைகள் நீங்கி
விடுதலை காண

பற்றற்ற ஒருவரின் - கலந்தரின்
வேத ரகசியங்களை
நான்
வெளியிட்டுள்ளேன்

மகாத்மாக்களின்
விரத அனுஷ்டானங்கள்
பிராஹ்மணனின் ஆசைகளை
அழித்துவிட மாட்டா.

மூசாவிடம்
கைத்தடி இல்லையேல்
அவரின் வாய்மொழிகள்
வெற்று எதிரொலிகள் தான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸல் 17

விசித்திரமானது
விவேகத்தின், அறிவின்,
புத்திசாதுர்யத்தின் போக்கு -
விசுவாசத்தின்
பக்தியின்
பரம வைரிகளவை
யுக்தியும், தந்திரமும்
விரிக்கும் வலையில்
அதன் போதகர்களே
சிக்குகையில்,
என் மக்கள்
எத்தகு பாறையில்
மோதி
அழிவர் என
அறிவேன் நான்.

பாடல் பறவை யென்
வாசல் கதவில் சிறகடிப்பினும்
அப்பாடலில்
எனது ஸ்வரங்களை
எதிர்பாரேன்.

துருக்கர்கள்
கவிதையை
அலட்சியம் செய்யாரெனக்
கேள்விப்பட்டதுண்டு -
என் கவிதையைத்
துருக்கரிடம்
எடுத்துச் செல்வார் யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மித்த வானங்களின்
நட்சத்திரங்கள்
துருக்கியைப் பாதுகாக்கும் போது
அயல்வீட்டானாய்
அது
மேற்கைக் கருதுவது
ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு ருபய்யாத்கள்

(1)

உன்னுலகம் -
மீன்களின், பட்சிஜாலங்களின்
பர்ணசாலை
என்னுலகம் -
அருணோதயப் பொழுதின்
அழுகையொலி
உன்னுலகில் -
உதவியற்று நிர்க்கதியான
அடிமை நான்
என்னுலகில் -
உனது ராஜ்யம் - உன் ஆட்சிப்
பரிபாலனம்

(2)

இபுறாஹிமின் நம்பிக்கையைச்
சூழ்ந்துள்ளது ஆபத்து -
விசுவாசம் என்பது
தெய்வநெறி, சுயாபிமானம்
உலகின் அடிமையே
இவன் சொல்தைக் கேளும்
அடிமைத் தனத்தைவிடக்
கேவலம் அவிசுவாசம்

(3)

விசித்திர நிலங்களின் இசையோடு
இஸ்லாத்தின் கனல் கலப்பதில் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியுள்ளது தேசங்களின்
ஒத்து வாழும் பண்பாடு
இசைவிணக்கம் இல்லா
சூனியம் ஐரோப்பிய ஆன்மா
மக்காவுக்குச் சிரம்பணிய
மறுக்கின்ற ததன் நாகரிகம்.

(4)

உன்னிடம் சுவாசமுண்டு,
இதயத் துடிப்பில்லை
ஊக்கமுள்ள மனதின்
தூண்டலாய் அச்சுவாச மில்லை
அறிவின் வெளிச்சத்துக்கு
அப்பால் செல் - அத்தீபம்
பாதையைக் காட்டும் - அதுவே
பயண முடிவாகாது.

(5)

ஒட்டகச் சிவிகை யல்ல நான் -
கைகாட்டி மரம்.
சிறைப்படுத்தும் சேத்திரமல்ல நான் -
கழிவுக் கூளங்களை
எரித்துப்பொசுக்கு வதே
        என்விதி.
நான் மின்னல் -
        அறுவடையைக் கொணர்பவனல்ல.

(6)

குடியகன்று விட்டது
காதல் வெறி
நலிந்து விட்டது
முஸ்லிமின் நாள நரம்புகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும் குருதி
அணி பிரிந்து,
மனம் குழம்பி,
வணக்க வழிபாடுகள்
மந்தமுற்று
ஆழ உணர்வுகள்
அற்றுப் போயின
இதயங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருபையாத்

காலம்

இருப்பது நிறம் மாறலாச்சு
இருந்தது மக்கி மறைந்து போச்சு
- சிலரே
இவ்வார்த்தைகளின்
தாற்பரியம் சொல்லவல்லார்

பிரசவ வேளைக்காய்
வாய்பிளந்து
காத்திருக்குது காலம்.

இரவு பகலென்னும்
நார்களில் தொடுத்த மணிகளை
நான் உருட்டுகையில் -
புதிய புதிய சேதிகள்
சாடியுள் சலசலத்து
துளிதுளியாய்ச் சொட்டுகின்றன.
பிரதியொரு மனிதனோடும்
சினேகமுற்று
பிரதியொரு மனிதனோடும்
முரண்பட்டு
புதியதொரு பாத்திரத்தை
ஆணையிடக் காத்திருக்கிறேன் -
சவாரி விடும் பாத்திரம் ஒருவனுக்கு
சண்டிக்குதிரைப் பாத்திரம் ஒருவனுக்கு
சாட்டையை விளாசும் அதட்டல் பாத்திரம்
இன்னொருவனுக்கு -
இந்த வட்டத்தினுள் வராவிட்டால்
அது உன் தவறா?
என் தவறா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையும் குஷிப்படுத்த வேண்டி
இரவு மதுவை ருசியாமல் வைத்திருக்கும்
பழக்கம் எனக்கில்லை.
சுழன்றோடும் என்
புதிர்க்கோடுகளினூடு
நட்சத்திர நோக்கினால் எதையும்
நேர் காண முடியாது.
சுவனத்தின் ஒளியால்
விழிகள் பார்க்க முனைகையில்
அம்பு எய்வோர்
அவதானிக்கின்றனர்.

மேற்கு வானவிளிம்பில் தெரிவது
விடியலன்று -
இரத்தக் குளியல்.
நாளை எனும் நாள்
காத்திருக்கின்றது.
நேற்று இன்று என்பதெல்லாம்
பழங்கதையாச்சு.
தடுமாறும் அறிவியல்
இயற்கை சக்திகளின் ஆடைகளை
உரிந்து போட்டுவிட்டது.
வணிகக் காற்று அவர்களுடையது
வான்வழி அவர்களுடையது
கடலும் கப்பலும் அவர்களுடையது
விதியின் பிடியில் சிக்கிய அவர்களால்
கொந்தளிப்பை அடக்க முடியாது.
ஐரோப்பாவின் சூதாடிகளால்
உலகம் சூதாட்டக் குகையாச்சு.
பழைய உலகம் மக்கி மறைந்து
புதியதோர் உலகு
பூப்பது தெரியுது.
கடும் புயலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிளக்கை அணைய விடாமல்
காக்கின்றான்
அம்மனிதன்.
உச்சத்தில் மையம் கொண்டுள்ளது
அவனது ஆன்மா
அது -
இறைவனின் உன்னத வார்ப்பு.

(பாலே ஜிப்றீல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்துபா பள்ளிவாசல்

இரவைத் தொடரும் பகல் -
காலத்தின் சிருட்டிகளை
உருவாக்கும் சிற்பி
இரவைத் தொடரும் பகல் -
வாழ்வினதும் சாவினதும்
ஊற்றுக் கண்.
இரவு பகல்களின் தொடர்
இருவர்ணப் பட்டுநூல்
இந்நூலிழையாய் நெய்யப்பட்டுள்ளது
அவனது இருப்பின் அங்கி
இரவு பகல்களின் தொடர் -
நித்தியத்வ வீணையின் இசை நாதம்
இறைவன் வெளியாக்கியவற்றுள்
சாத்தியமான
அளவீடுகள்

இவற்றின் பரீட்சைக்கு
அழைத்துவரப் பட்டுள்ளோம்
நீயும் நானும்.
இரவுடன் சுழலும் பகல் -
இவ்வுலகின் உரைகல்
இவற்றின் துலாக்கோலால் நிறுக்கப்பட்டு
எம் குறைகள்
எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.
மரணம் தான்
உனது முடிவு
மரணம் தான்
எனதும் முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
இரவுகளுக்கும்
பகல்களுக்கும்
வேறென்ன அர்த்தம் -
அத்தமனமும் விடியலுமற்ற
காலவோட்டத்தின்
வெற்று நீட்சியைத் தவிர?

கலையின் அற்புதங்கள் தோன்றுகின்றன
இன்னொரு முறை மறைவதற்காக -
மண்ணில் கட்டியெழுப்பப்படுபவை
மணல் வீடு போல் சிதைந்து மண்ணாகிவிடும்.

அகத்திலும் புறத்திலும் உள்ளவை,
ஆதியும் அந்தமுமானவை,
பழையன,
புதியன
யாவினதும்
இறுதி இலக்கு
மரணமே.

ஆயினும்,
பொருள்களின் இச்சட்டகத்துள்
பளிச்சிடுகின்றது
அழிவற்ற வாழ்வு -
இறைவனின் அடியானொருவனின்
கடும் உழைப்பில் உருவான
உயர் நிர்மாணமொன்றின்
உன்னதத்தில்.

காதலின் அற்புதத்தால்
தகத்தகாயமாய் ஒளிர்கின்றது
இதன் பூரணத்துவம்.

வாழ்வின் ஊற்றுப்பெருக்கு காதல்,
மரணத்தால் உரிமை கொண்டாட முடியாதது காதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்திரையோடி
வெள்ளமெனப் பாயும் காலவோட்டத்தில்
எதிரலைகளைத் தடுக்கவல்ல
அலையெழுச்சியே காதல்.
அதன் நாட்காட்டியில்
பிற யுகங்கள்
குறிக்கப்பட்டுள்ளன.
காதல் ஜீப்றீலின் சுவாசம்
முஹம்மதின் வலிமை கொண்ட இதயம்
இறைவனின் தூதுவன்
அவனின் அருள்மொழி
அழிந்து போகக் கூடிய எம் களிமண்கூட
கனன்றொளிரும்
காதலின் பரவசத்தால்.
அது,
புதிய திராட்சை மது
அரசர்களின் கிண்ணம்
ஆலயத்தின் அதிபதி
ஆயிரம் இருப்பிடங்களைக்
கணக்கிட்டு நகரும்
தெருவின் மைந்தன்
வாழ்வின் நரம்புகளில்
இசை மீட்டும் விரலணி
வாழ்வின் கதகதப்பு
ஒளிச்சுடர்.

குர்துபா பள்ளிவாசலே!
காதலின் ஊற்றுக் கண்ணிலிருந்து
உருப்பெற்றுள்ளது
உன் இருப்பு
அன்று - இன்று என்பதற்கு
அப்பாற்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் இருப்பு -
வர்ணம், அல்லது
கல்லும் செங்கல்லும்
இசையும் பாடலும்
அல்லது பேச்சும்.
இதயத்தின் சூடான குருதியால்
ஊட்டம் பெறுவன
கலையின் உன்னதங்கள்

தீத்தட்டிக் கல்லை
துடிக்கும் இதயமாக
மாற்றவல்லது
அக்குருதியின் ஒரு துளி.

இதயத்தின் வெப்பக்குருதியிலிருந்து
பீறிடுகின்றது இசை நாதம் -
களிப்பு,
இன்ப வெள்ளம்

ஆன்மாவில் விசையேற்றுகின்றது
உன் அடுக்கு வரிசை
ஆன்மாவைத் தூண்டிவிடுகின்றது
என் பாடல்.

நீ
மனித இதயங்களைத்
தட்டுகிறாய்
அவற்றின் கதவுகளைத்
திறந்து விடுகிறேன் நான்.

உயர் சுவனத்தை விடவும்
மகிமை குறைந்ததல்ல
மனித இதயம் -
கையளவு மண்தான் எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவரம்பினுள்
வியாபித்துள்ளது அது.

முழந்தாளிடும் மனிதர்களைக்
காணும்போது
ஒளியால் படைக்கப்பட்டவருக்கு
என்ன புரியப் போகிறது?
தொழுகையில்
எம் கைகால்கள்
தழலாய் உருகுவதை
அவர் அறிவாரா?

விசுவாசமற்ற கிழக்கிலிருந்து
வந்துள்ள நான் - என்னுள்
கனலும் வேட்கையை
உணர்கின்றேன்
இறைவன் மீதும்
இறைத் தூதர் மீதும்
சொரியும் சோபனங்கள்
வாழ்த்துக்கள்
பொங்கித் ததும்புகின்றன - என்
ஆன்மாவினுள்.

கனலும் வேட்கையுடன்
ஒலிக்கின்றது என் குரல்
கனலும் வேட்கையுடன்
ஒலிக்கின்றது எனது யாழ்
இறைவன் ஒருவனே
எனும் நாதம்
ஒரு பாடலைப் போன்று
நாளங்களினூடு பாய்ந்து
நரம்புகளை அதிரச் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளும் புறமும் உன்
அருளொழுகும் தோற்றம்
உன்னை வடிவமைத்த
அந்தச் சிற்பியின்
உருவச் சிறப்பின்
ஆன்மப் பேரழகின்
அத்தாட்சி.

சிரியாவின் மணல்வெளியில் நிற்கும்
பேரீத்த மரங்களின் நிரை போன்று
உயர்ந்தோங்கிய உன் தூண்களின் வரிசை
மூசா கண்ணுற்ற சோதியைப்போன்று
ஒளியுமிழும் சுவர்கள், அக்கூரை.
உன் மினராவின் உச்சியில்
சிம்மாசனத் தமர்ந்துள்ளார் ஜிப்றீல்
முஸ்லிம் ஒருபோதும்
நிராசையுற மாட்டான்
மூசாவும் இப்றாகிமும்
முன்னர் நின்ற தலத்தில்
இறைவன் முன்னிலையில்
கொள்கைப் பிரகடனஞ் செய்கிறான் அவன்.

அவனது உலகம் எல்லையறியாதது
முடிவற்ற தொடுவானங்கள் அவனுடையவை.
தைகிரீசும், டான்யூபும், நைல்நதியும்
அலைமோதிச் சங்கமிக்கின்றன
அவனது சமுத்திரத்தில்.

விசித்திரமானவை
அவன் சொல்லும் கதைகள்
காலாவதியான பழைய சகாப்தங்கள்
விடைபெறுமாறு
ஆணை கொணர்ந்தவன் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புற்றோரை உற்சாகப்படுத்துவோன்,
காதல் போர்க்களத்தில் சவாரி செய்வோன் அவன்.
சுத்தமானது, கலப்படமற்றது
அவனருந்தும் பானம்.
சுத்தமாகத் துவைக்கப்பட்ட உருக்கு
அவன் ஏந்தும் வாள்.
அல்லாஹ்வைத் தவிர
வேறு நாயனில்லை என்னும்
கவசம் பூண்ட
படைவீரன் அவன்
வாட்களின் நிழலில்
அல்லாஹ்வைத் தவிர
வேறு நாயனில்லை என்னும்
தாரக மந்திரம்
அவனின் அடைக்கலம்.

அவனது ஆன்மா,
உக்கிரமான நாட்களின்
உள்ளக் கனல்,
உருகும் இரவுகளின்
பரவசம்,
அவனது உயர்நிலை,
உன்னத சிந்தனைகள்,
உவகை,
தன்னடக்கம்,
பெருமிதம்
- யாவும்
உன் கற்களில் கலையாகி
நின்றொளிர்கின்றன
நிதர்சனமாய்.
வல்ல இறைவனின் கரம்போன்று
வலிமை மிக்கது
விசுவாசியின் கரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது,
கலைநுட்பத்துடன் சிருட்டிக்கவும்
கட்டியெழுப்பி
கோலோச்சவும் வல்லது

இரு உலகங்கள் மீதும்
சிரத்தையற்ற
அவனுள் துடிப்பது
சாதாரண ஆன்மாவன்று -
மண்ணாலும் ஒளியாலும் உருப்பெற்ற
அவனுள் உறைவது
தெய்வீக ஆன்மா.
அவன்,
உலக இச்சைகளை
அடக்கியாள்பவன்
இனிய இயல்பினன்
இரையும் ஓசைகளைப்
பார்வையால் வெல்பவன்
சமூக உறவாடலில்
சாந்த சொரூபி
செயலாற்றும் வேளையில்
துரிதமும், தீவிரமும் காட்டுபவன்
விருந்தின்போதும்
கலகத்தின் போதும்
மனதாலும்
செயலாலும்
மாசின்றி ஒழுகுபவன்.

தன் அடியானின்
உறுதியான இறைநம்பிக்கையைச் சுற்றி
வலம் வருவன
இறைவனின் வட்டாரிகள்
இன்றேல் -
இப்பிரபஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் நிழல்தான்,
மாயைதான்,
சூனியம் தான்.

அவனே அறிவின் இறுதி இலக்கு
காதலின் அறுவடை
படைப்பு மண்டலத்தில்
ஆன்மாக்களை
கனன்றெழச் செய்பவன்

கலைப்பிரியர்களின் சேத்திரமே
இறை நம்பிக்கையின்,
பேராற்றலின்
உண்மைச் சொரூபமே
அந்த லூசியாவின் மண்ணை
ஒரு காலத்தில்
மக்காவைப் போல் புனிதமாக்கினாய்
வானங்களின் கீழ்
உன்பேரழகுக்கு ஈடாக
இன்னொரு மகோன்னதத்தை
வேறெங்கு காண முடியும் -
முஸ்லிமின் இதயத்திலன்றி?

உண்மையை மண்ணில் நிறுவ
உறுதி பூண்ட அறப்போர் வீரர்
அரேபியாவின் குதிரைப் படையினர்.
அவர்களின் பேரரசு மூலம்
அகிலத்துக்கு தெரிய வந்தது.
ஓர் இரகசியம்:
மனித நேயம் கொண்டோர்
ஆட்சிப்பொறுப்பை ஏற்பது
மக்கள் மீது சவாரி செய்வதற்கன்று
சேவை புரிவதற்கு
அன்பர் பணி செய்வதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் பாடம் கற்றுக் கொண்டது
ஆசியாவும் ஐரோப்பாவும்.

ஐரோப்பா இருளில் மூழ்கித் திண்டாடுகையில்
வழியைக் கண்டுபிடித்தது
அரபிகளின் அறிவு ஞானம்.

அவர்களின் இரத்தத்தால்
செழுமையுற்ற இம் மண்ணில் -
கவலையற்ற
முறுவல்பூத்த முகமும்,
திறந்த மனமும்,
எளிமையும் கொண்ட இனமொன்று
இன்றும் வாழ்கின்றது.
இதயத்தில் வேல் பாய்ச்சும்
அராபிய மான்விழிகள்
இன்றும், இம்மண்ணில்
காணப்படுகின்றன.
இங்கு வீசும் தென்றலில்
இன்னும் கமழ்கின்றது
யெமன் தேசத்தின் சுகந்தம்
இதன் பாடல்களில்
இன்றும் எதிரொலிக்கின்றது
ஹிஜாஸின் உயிர்த்துடிப்பு.
நட்சத்திரவானின் கீழ்
உன் ராச்சியம்
சொர்க்கபுரிதான்.

உன் மன்றங்களில்
அதான் ஒலி முழங்கிய
அந்த நாட்கள் பறந்தோடிவிட்டன.
புயல் மூளும் பாதையில்
பயணிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலின் காரவான்
- அப்பயணிகள் கூட்டம் -
எங்கு முகாமிட்டுள்ளது?
தொலைவில்,
எந்தப் பள்ளத்தாக்கில்,
இப்போது,
அதன் தரிப்பிடம்?

மூடப் பழைமையின்
தடயங்களைத் துடைத்தெறிந்த
சீர்திருத்தம்
ஜெர்மனியில் நிகழ்ந்து நெடுங்காலம்.
கிறீஸ்தவப் பாதிரிகள்
ஆடம்பரத்தில், பொய்மைகளில் மூழ்கிச்
சீரழிகையில்,
அறிவின் நொய்மையான கப்பல்
அதன் பயணத்தைத் தொடர
பிரான்சில் வெடித்த புரட்சி
மேல்நாட்டார் அறிந்திராத
புதிய உலகமொன்றைத் தோற்றுவித்ததும்
பழங்கதைதான்.
ரோமின் சிரேட்டப்புதல்வி
புராதனச் சின்னங்களை வணங்கி
மறுபிறவியெடுத்தும் - தன்
இரண்டாவது இளமையை இழந்து
மறுபடியும் கிழவியாகிவிட்டாள்.
இப்போது -
இஸ்லாத்தின் ஆன்மாவினுள்
மீண்டும்
குமுறல்
கொந்தளிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவான இறைவனின் நாட்டம்
செயல்படத் தொடங்கியுள்ளது.
கவனியுங்கள் அதோ சமுத்திரத்திலிருந்து
அலைமலையாய்த் திரண்டெழுவது என்னவென்று
அந்த நீலவிதானத்தில் நிறங்கள் மாறுவதை
அந்திவானில்
பதாக்ஸானின் இரத்தினக்குவியலாய்
குன்றிலும், பள்ளத்தாக்கிலும்
கவிந்துள்ளது
சிவந்த மேகத்திரளொன்று.
உள்ளமுருக்கும்
எளிய உழவுப் பாடலொன்றை
இசைக்கின்றாள்
ஓர் இளம் பெண்

இதயப்படகை இலகுவாய் மிதக்கச் செய்வது
இளமையின் நீரோட்டமன்றோ?

பாய்ந்தோடும் குவாதல் குயிவிர் நதியே*
பழைய நிகழ்வுகளை நினைந்தேங்கி
இன்னொரு நாளைக்
கனவு காண்கின்றான்
உன் நதிக்கரையில் ஒருவன்

வரப் போகும் நாட்களை
மூடி வைத்துள்ளது
விதியின் திரை.
எனினும்
அவற்றின் விடியல்
ஏலவே திரையகன்று விட்டது
என் கண் முன்னால்.

* *குவாதல் குயிவிர்- குர்துபாப் பள்ளிக்கு அருகில் ஓடும் நதி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
என் எண்ணங்களை மறைக்கும்
முகமூடியைக் கழற்றினால் -
என்னுள் கனன்றெழும் பாடல்களைத்
தாங்காது ஐரோப்பா
புரட்சியைத் தூண்டாத வாழ்வு
மரணமே.
மாற்றமும் கலகமும் தான்
தேசங்களின் சுவாசம்.

சகாப்தங்கள் தோறும்
நிகழ்வுகளைக்
கவனித்துக் கணித்து,
கணக்கு தீர்க்கும் மனிதன்
விதியின்
கைவாள் போன்றவன்.

இதயக்குருதியால்
சூடேற்றப்படாத படைப்புகள்
பாழ்!
இதயக்குருதியால்
சூடேற்றப்படாத
வீறற்ற
பரவசமூட்டாத
கவிதையும் பதர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் சந்நிதானத்தில் லெனின்

எல்லையற்ற வானவெளியில்
பூமியின் ஆன்மாவில்
சுவாசிக்கும் உயிர் ராசிகளில்
எழுதப்பட்டுள்ளது - உன்
சாஷ்வத இருப்பு.
நீயிருத்தல்
நிசமென்றோ
பொய்யென்றோ
எவ்வாறு அறிவேன்?
சிருஷ்டியின்
முடிவில்லா இசையை
அங்கு
செவிமடுப்பது யார்?
- மலர்களில் மயங்குவோரா
- விண்மீன்களை எண்ணுவோரா?
மத பீடங்களின்
கபட நாடகமென
முன்பு நான் நிராகரித்தவற்றை
இன்று
நேரில் காண்கிறேன்

இரவுபகல் எனும் தளைகளால்
கட்டுண்டவர் நாம்
நீயோ -
காலத்தின் அணுத்திரளை
உருவாக்கு பவன்
சகாப்தங்களை
சிருஷ்டிப்பவவன்
அனுமதி தா இறைவா
உன்னிடம் கேட்பதற்கு
ஒரு கேள்வி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற மேதாவிகளின்
தர்க்க நுட்பங்களால்
மௌனிக்கப்படாத
கேள்வி யிது

வானத்தின் கீழ் நான்
வதியும் போது
இதயத்தில் முள்ளாய்
உறுத்திய கேள்வி யிது.
எண்ண அலைகள்
குமுறியெழுகையில்
இதயத்தின் குரலுக்கு
அணை இடல் இயலுமோ?

இறைவா சொல்
உண்மையில்
யாருக்கு நீ கடவுள்?
உன்னைக் கடவுளெனும்
அம்மனிதன் யார்?
வானின் கீழ்
புழுதியால் உருப்பெற்ற
அப்பிறவியா?
வெள்ளைப் பறங்கிதான்
கீழ் நாட்டானின் கடவுள்
மின்னும் உலோகம் தான்
மேல் நாட்டானின் கடவுள்
கொல்லன் உலை அங்கு
தீயுமிழ்ந்துக் கனல்கின்றது -
அறிவின் தீபம்
சுடரொளி பரப்புகின்றது -

வாழ்வின் ஊற்றுக் கண்ணிலோ
வரண்ட இருட்படலம்.

நெறிபிறழச் செய்யும்
மாயக் கவர்ச்சியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் மாளிகையைவிட
உயர்ந்தோங்கி நிற்கின்றது
வங்கி
வர்த்தக சூதாட்டத்தில்
தாயக்கட்டை உருட்டுகின்றனர் -
தனியொருவனுக்கு லாபம்
ஆயிரமாயிரம் பேர்க்கு
அகால மரணம்
அறிவியல்,
மெய்யியல்,
அரசு
நிறுவனங்கள் -
        - யாவுமங்கு பறைசாற்றும்
        மனித சமத்துவத்தை,
        பின் உறிஞ்சிப் பசி தீர்க்கும்
        மனித இரத்தத்தை
        நிர்வாண வெறியாட்டம்
        வேலையின்மை
        வறுமை
        -மேலை மனிதனின்
        வெற்றிவாகை இவை
நீராவி,
மின்சக்தி
இயக்கும் ஆலைகளை
- இயந்திரத்தின் ஆதிக்கம்
        இருதயத்தின் மரணம்

காலடியில் இரக்கத்தை
கருணையை,
அருளுணர்வை
மிதித்து துவம்சம் செய்யும்
கருவிகள்.

ஆயினும்
அங்குமிங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகுறிகள் தோன்றிவிட்டன
சதுரங்க ஆட்டக்காரன்
அவர்களின் தந்திரத்தை
வஞ்சகச் சூதை
தடுத்து நிறுத்தியுள்ளான்.
மதுசாலை ஆட்டங்கண்டுவிட்டது
அதன் அடித்தளத்தில்
வெடிப்புகள் தோன்றிவிட்டன.
கிண்ணமேந்திய
ஐரோப்பிய கிழடுகளின்
கைவிரல்கள் நடுங்குகின்றன
ஐரோப்பிய முகங்கள்
களையிழக்கத் தொடங்கிவிட்டன.
இறைவா,
உனது உலகில்
துயர் மூண்ட தருணம் இது.

தொழிலாளி விலங்குகளில்
கட்டுண்டு கிடக்கும்
அவலம் பெருந்துயர்
அடிமைகளால்
ஓட்டி செல்லப்படும்
தங்கத்தின்
ஆதிக்கக் கப்பல்
உடைந்து நொறுங்கும் நாள்
எந்நாள்?

சர்வ சக்தனே,
நேர்மையாளனே,
உன் கோபாக்கினி
குமுறி வெடிக்கும் நாளை
எதிர்பார்த்திருக்கின்றது
உலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதூதர்களுக்கு இறைவன் கட்டளை

என்னுலகில் துயிலும்
ஏழைகளைத்
துயிலெழுப்புங்கள்
செல்வப் பிரபுக்களின்
மாளிகைகள், மதிலரண்கள்
ஆட்டம் காணட்டும்!
அடிமைகளின் குருதியில்
உணர்ச்சித் தீ
மூண்டெழட்டும்!
எளிய ஊர்க்குருவி
வல்லூறை எதிர்த்து நிற்க
வலிமை பெறட்டும்!
பஞ்சைப் பராரிகளின் ஆட்சி
பூமியில் மலரும் நாள்
நெருங்கி விட்டது!
உளுவனின் அன்றாட உணவுக்கு
உதவாத தானியக் களஞ்சியங்களைத்
தீயிட்டுப் பொசுக்குங்கள்!
உலுத்துப் போன பழமையின்
சின்னங்கள் யாவும்
உதிர்ந்து விழட்டும்.

கோவில்கள் மஸ்ஜிதுகளின்
தீபாலங்காரங்கள்
எனக்குத் தேவையில்லை;
சலவைக் கற்கள் எனக்கு
சலிப்பூட்டுகின்றன
என்னை வணங்குவதற்கு
மண்குடிசைகள் எழட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன நாகரிகம் என்பது
வெறும் கண்ணாடித் தொழிற்சாலை.
கிழக்கின் கவிஞனுக்கு
வெறியூட்டுங்கள்
அவன் அதனை
நொறுக்கித் தள்ளட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைப்புத்தி

புலவர்கள், அறிஞர்கள்
புத்திமான்கள்
புற்றீசலாய்க் கிளம்பியுள்ளனர்
அடிமைத்தனம் நிலவும்போது
அவர்களுக்குப் பஞ்சமேது?
பாடுவதற்கு ஒவ்வொருவரிடமும்
வெவ்வேறு பல்லவிகள்
உள்ளன.
ஆனாலும்,
அனைவரும்
கபட நாடகத்தில்
சமபங்காளர்.
வீர காதைகள்
வீறிழந்து போகும்வரை -
மான்களைப் போல்
மருண்டு கிடக்கும்படி
சிங்கங்களுக்குப்
பாடம் நடத்துவர்

அறிவால் தெளிவுபடுத்துவதாய்
ஆறுதல் கூறி
அடிமைகளை அடிமைத்தனத்துடன்
இணங்க வைத்து விடுவர்.

- ஸர்பே கலிம்
(மூசாவின் கைத்தடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷாகி!

இம் மேட்டுநிலங்களில்
கூடாரமிட்டுத்
தங்கியுள்ளது
வசந்தத்தின் பயணக்குழு.

மொட்டவிழ்ந்த மலர்களின்
மாவசியம்.

இரத்த சாட்சியமாய்ச் சிவந்த
செம்மலர்ப் போர்வையில்
மறைந்துளது
பூமியின் லாவண்யம்.

பாறையினூடு பாய்ந்தோடும்
சூடேறிய நாளங்கள்
நீலமய நிர்மல வானம்
மென்காற்று

சிறகு முளைத்த தெதுவும்
சோம்பிப் போய்
அதன் கூட்டினுள் இல்லை.

நழுவி,
தெறித்துத் தடுமாறி
விரையும் மலையருவி
ஒரு நூறு திருப்பங்களில்
திசைகண்டு
அடைத்து நிற்கும் கற்பாறைகளை
அரித்துக் கொண்டு பாய்கிறது
- மலையின் இதயங்களூடு.
வாழ்வின் செய்தியை அது
பாடி வருதல் பார்
நாள்தோறும் வருவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் கொய்யும் காலம்
ஸாகி -
மதுவார்ப்போனே,
வெறியூட்டும் மதுவை
ஊற்றித் தா.

திரைகளைக் களைந்தெறிய
உலக இன்பங்களில்
மூழ்கித் திளைக்க
வாழ்வின் உணர்வுகட்கு
மதுவால் வர்ணந் தீட்ட
கிண்ணத்தை நிரப்பு.
நித்தியத்வ ரகசியத்தை வெளிப்படுத்தும்
திவ்ய மதுவை
ஊற்றித் தா.

ஸாகி!
இரகசியத் திரையை
நீக்கு.
வல்லூறுகளின் சொண்டுகளுக்கு
இச்சிறுகுருவி
சவால் விடட்டும்.

காலத்தின் விநோதங்கள்
மாறத் தொடங்கிவிட்டன.
புதிய சுருதி சேர்ந்த
நரம்புகளிலிருந்து
புதிய பாடல்கள் தொடங்கி விட்டன.
ஃபிராங்குகளின் மாய்மாலங்கள்
கபடங்கள் கசியத் தொடங்கி
ஐயத்தைத் தோற்றுவித்துள்ளன.
நரைத்துப் போன அரசியல்
நாறத் தொடங்கி விட்டது
முதலாளித்துவத்தின் சுற்று
முற்றுப்பெற்று விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தைக்காரனின்
கண்கட்டி வித்தைகள்
கலாவதியாய் விட்டன.
பூமியின் நாசித்துவாரங்களில்
அரசனின், சுல்தானின்
துர்நாற்றம்.
திடுக்குற்றெழுகின்றது சீனா.
ஆவியெழக் கொதித்துக்
குமுறுகின்றன
இமாலய நீரூற்றுகள்.
சுவனத்தின் சுடரொளிக்காக
சினாய் குன்றில்
மீண்டும் காத்திருக்கின்றார் மூசா.
ஏகத்துவத்தை முழங்கும்
முஸ்லிமோ - இன்னும்
பூணுலுடன்
அவனின் -
மெய்யியல், இறையியல்,
சட்டவியலில்
இன்னும் குப்றின் கறை.
குப்பைக் கூளத்தினுள்
புதையுண்டது சத்தியம் -
சடங்கு சம்பிரதாயச் சகதியுள்
கோட்பாடு,
தர்க்கவியல் மயிர்ப்பிடுங்கல்.
செவிகள் - போதகரின்
சொற்சிலம்பங்களில்
சொக்கிக் கிடப்பினும்
காதலின் வேட்கை
கனன்றெழக் காணோம்.

இறைவனின்
துணிகர வீரனான சூபிவாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி நியாயங்களை
நிறுவக்கற்று
அவனது உள்ளரங்கில்
கற்பனைப் புரவியில்
சவாரி பயில்கின்றான்.
பக்திக் கனல் அவிந்து
சாம்பல் குவியலில்
மறைந்துள்ளது இஸ்லாம்.

ஸாகி!
பழைய மதுவை
மீண்டும் ஊற்றித் தா.
மது ஜாடி ஒரு முறை
மீண்டும் வலம் வரட்டும்.

உயர எம்பிப் பறப்பதற்கு
காதலின் இறக்கையைத் தா.
என் புழுதியிலிருந்து
வட்டமிடும் மின்மினிகள்
உருவாகட்டும்.
அடிமைத்தனம் அண்ட முடியாதபடி
சிந்தைகள் சுதந்திரமுறட்டும்
வாலிபம் கற்றுக் கொடுக்கட்டும்
வயோதிபம் கற்றுக் கொள்ளட்டும்

பசுமை மாறாமல்
இனக்கிளையைக் காப்பது
உனது உள்ளீடு
உனது ஆன்ம மூச்சு
அதனின் உயிர்த்துடிப்பு

அலியின் வேட்கையுடன்
சித்தீக்கின் வைராக்கியத்துடன்
ஆன்மாக்களைத் துடிக்கச் செய்!
அவை உணர்வுபெறச் செய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கூரம்புகள்
இதயங்களை ஊடுருவட்டும்
பழைய ஏக்கங்கள் மீண்டும்
உயிர்த்தெழட்டும்
உன் நட்சத்திரங்களுடன்
விதி உறவு கொள்ளட்டும்.

இமை மூடா இரவுகளை
வணக்கங்களில் கழிப்போரின்
இரத்த நாளங்களில்
எனது போன்ற கனவுகளும்
ஆசைகளும்! கனல் மூட்டட்டும்.

நுரைதிரையாய் சுழித்தெழும்
நீரினூடு பாதுகாப்பாய்
என் படகை மிதக்க விடு

இப்பிரபஞ்சத்தை உன்
பார்வையுள் ஈர்த்துள்ள நீ
மரணத்தின்
வாழ்வின்
மர்மங்களைச் சொல்லித் தா
இவ்விழிப்புனலில் கவலைகள்
வீணே துயில்கின்றன

கனலாய் மூளையுள்
கொதிக்கும் ஜுரத்தினால்
என் தலை கவிழ்ந்துள்ளது

தனிமையிலும்
கூட்டத்திலும்
வழிந்தோடும் இக்
கண்ணீர்த் தாரைகள்,
துடிப்புகள்

தணியாத தாகமுடன்
தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேடல்,
என் இயற்கை,
அராபிய மான்களாய்!
சிந்தனைகள் உலவும்
என் காவனம் -
ஐயத்தின் சைனியங்கள்
விசுவாசத்தின் மீது சாடும்
வாழ்வின் போர்க்களமான
இவ்விதயம்
- இவைதான்
உலகைத் தூசென
மதிப்போனின்
உன்னத பொக்கிஷங்கள்.
- உலகை எள்ளி நகைக்கும் நான்
பெருஞ் சீமான்!
என் யாத்ரையின் போது
பொருள் குவையைக் கொணர்ந்து
கொட்டுகின்றார் மக்கள்
இதுவே என் சீதனம்

இரந்துண்ணும் அடிமையுணவு
காவல்புரியும் ஆன்மாவுக்கு
நஞ்சாகும்.

மனிதர் மத்தியில்
தலைநிமிர்ந்து நிற்கச் செய்யும் உணர்வே
மேலான உணவு.
அகத்தைப் பேணு
மஹ்மூதின் அரச போகங்களை
எள்ளி நகை
பரிபூரணனுக்கே நீயடிமை
- வேறெவர்க்கும் அல்ல.

பகட்டான இப்பூமி
அழிவின் நியமத்துக்குட்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பள்ளத்தாக்கு
விழிகளும் செவிகளும் சேவிக்கும்
இவ் விக்கிரகக் கூடம்
அற்பாயுள் கொண்டது
- அகத்தின்
முதல் தரிப்பிடம்
தங்குமிடம் இது.
வழிப்போக்கனே
இதுவுன் வீடல்ல.
உன் எரிதழலின்
மூலாதாரம்
இவ் வற்பத் தணல் குவியல் அல்ல.

பூமியில் தங்கியுள்ளதல்ல
உன் இருப்பு
உன் வலிமையில் தங்கியுள்ளது
பூமியின் இருப்பு.
அதன் பெரும்பாறைகளைக்
குடைந்திடு.
உயர ஏறு

காலத்தின்
வெளியின்
இருட் சூனியங்களைத்
தகர்த்தெறி.
இறைவனின் அரிமா நீ,

உலகின் வளங்களும்
இம் முழுப் பிரபஞ்சமும்
புதையற் சுரங்கமாய்
வழங்கப்பட்டுள்ளது
உனக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணா புதிய உலகங்கள்
காத்திருக்கின்றன
உனக்காக.

இன்னும் துடித்துக் கொண்டிருக்கின்றது
சிருஷ்டியின் இதயம் -
இருப்புக் கொள்ளாமல் தவிக்கும்
உன் மூளையினதும்
துருதுருக்கும்
உன் கரங்களினதும்
மேவுதலுக்காகக் காத்திருக்கின்றன
எல்லாப் பொருள்களும்.

உன் ஆன்மாவை
உனக்குக் காட்டுதலே
காலம் செய்யும் புரட்சிகளின்
குறிக்கோள்.

இறுக்கமான ஆடையுள்
திணிபட்டுத் திணறுகின்றது
சத்தியம்.
சத்தியம் ஒரு பளிங்குக்கண்ணாடி
பேச்சு அதில் படிந்துள்ள கறை.
ஆன்மாவின் தீப்பந்தம்
ஒளிர்கின்றது இதயத்துள்:
பேச்சு எனும் விளக்கு
தோற்றுப் போகின்றது இப் பரீட்சையில்.

என் இறக்கைகளே,
இன்னுமொரு மயிரிழை மூச்சு
உயர எழுந்தால்
உருக்கிப் போடும் என்னை
ஒளிப்பிழம்பு

- ஜிப்றீலின் இறக்கை
(பாலே ஜிப்றீல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழவெள்ளி

சூரிய சந்திரரோடு
நேசம் பாராட்டும்
பீத்தல் பெருமையெல்லாம்
இனி போதும்.
அருணோதயத்தின்
வரவை அறிவிக்கும்
அலுவல் கூட
அலுப்பூட்டுகின்றது.

கோள்களின் குடியிருப்புகள்
சலித்துவிட்டன.
இவ்வுயரங்களை விடப்
பூமியின்
தாழ்ந்த குடிசைகள் மேல்.

நான் உலவும் விண்ணுலகம்
தேவலோகமன்று -
அழிவு அரசோச்சுமிடம்.
ஆயிரம் கிழிசல் கொண்ட
விடியலின்
கந்தல் ஆடையே
என் 'கபன்' துணி.

தினம் மரணம்
தினம் ஜனனம்
- இதுவே என்
ஜன்ம விதி.
சாவெனும் பானபாலன்
காலையின் முதல்பானத்தை
தினமும் ஊற்றிக் கொடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்
நன்றியில்லா இப்பணியில்
ஒரு மணி நேரம் ஒளிவீசுவதை விட
இருள் நன்று.

முடியுமெனில் இனியும் நான்
நட்சத்திரமாக இரேன் -
ஆழ்கடலின் அடியில்
ஆணிமுத்தாக ஒளிர்வேன்.

ஆழியலை வந்து
அச்சுறுத்தினால்
ஏதேனுமோர்
அட்டிகையில்
அபயம் புகுவேன்.

அழகு வனிதையின் கழுத்தில்
ஆரமாய் மிளிர்ந்திடுவேன்
அரச மகுடத்தில் ஓர்
மணியாக வீற்றிருப்பேன்.

விதி புன்னகைத்தால்
எந்தவொரு கல்தான்
சுலைமானின் கணையாழியில்
கண்சிமிட்டாதிருக்கும்?

ஆயினும்
பூமியில்
சௌந்தர்யம் எதுவுமே
சாஷ்வதமாய் நிலைப்பதில்லை
விலையில்லா மாணிக்கமும்
ஈற்றில் விழல்தான்
என்பதால் -
மலரில் விழும் பனித்துளியாக
மாறேனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது,
ஒரு போர்வீரனின் மனைவி
அவனை வழியனுப்புகையில்
அவள் விழிகள் உதிர்க்கும்
கண்ணிர்த்துளியாக
ஆகேனோ -

புழுதியில் கலந்து
அமரத்வம் காண்பதற்கு?
காதல் நெருப்பின்
ஜுவாலையைப்
பூமிக்கு எடுத்துரைப்பதற்கு?

- பாலைவன மணியோசை
(பாங்கே தாரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று ருபய்யாத்கள்

என் ஏழ்மை கண்டு
கர்வங் கொண்ட மனிதர்
கவராடத் துணிகின்றார்

எனது போன்ற ஏழ்மைதான்
எமக்கு மேன்மை.

முஸ்லிமைக் கோழையாக்கும்
வேறு கந்தல் ஆடைகள் உள
முஸ்லிமைக் கோழையாக்கும்
வேறு பிச்சைப் பாத்திரங்கள் உள.
- அவை பற்றி
எச்சரிக்கை

காதல் பற்றியும்
இழப்பு பற்றியும்
- என்ன வார்த்தைகள் சொல்ல?
சுயம் இதழ்விரிதல்
வாழ்வின் ஊற்றுக்கண்.
கடலின் அடியிலிருந்து
முத்தின் பிரிவு
கடலுக்கோ
முத்துக்கோ
இழப்பல்ல.

உன் கடலில் ஏன்
சூறாவளி சூல் கொள்வதில்லை
இறைவனின் ஆணைக்கு
எதிராகப் புலம்புகிறாய் -
ஏன் நீ
இறைவனின்
ஆணையாக இல்லை?

(அர்முகானே ஹிஜாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை

இவ்வுலகை விட்டுப்
போவதற்கு
நான்
பொதியைக் கட்டும் போது
ஒவ்வொருவரும் வந்து
இவனை நான்
நன்கறிவேன் என
உரிமை பாராட்டத்
தொடங்கினான்
- ஆயினும்,
இவன்
என்ன சொன்னான்
எவரோடு
சொல்லாடல்
புரிந்தான்
எங்கிருந்து வந்தான்
- என்றெல்லாம்
இவ்வழிப்போக்கனை
அறிந்திலர்
எவருமே.

(பயாமே மஷ்ரிக்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன்

உன் இருப்பிடத்திலிருந்து
நெடுந் தொலைவில்
என் பாலைவனம்
எனினும் -
உன் கவர்ச்சியினால்
என் இதய ஆழியில்
அலைகளின் கொந்தளிப்பு.

எந்தச் சபை நோக்கித்
தொடர்கின்றது
உன் நெடும்பயணம்?
எந்தச் சபையிலிருந்து
வருகின்றாய் நீ?
பயணங்களால் களைப்புற்று
வெளிறிப் போயுள்ளது
உன் முகம்?

இப்பிரபஞ்சத்தில்
நிராசையின் பள்ளத்தாக்கில்
நீ ஒளியாக
நான் இருளாக
இருவரும்
ஒரே விதியால் கட்டுண்டோம்.
குவிந்த
சிருஷ்டித்த திரள்களிடை
உன் தகத்தகாயம்.
நானோ -
என் சுவாலையால் எரிபவன்
என் இதயத்துள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்டுள்ளது
உன் விண்வெளியின் மோனம்.

எம் இயல்புகள்
ஒரேவிதமானவை.

தேடியலைய விதிக்கப்பட்டுள்ளோம் இருவரும்.
ஒளிக்கரணங்கள் உனக்கு வழிகாட்டுகின்றன
என் கால்களை வழிநடத்துவதோ காதல்.
பிறர் மத்தியில் வாழும் நான்
வானவீதியில்
நீ துணையின்றிச் செல்கையில்
உன் தனிமையை உணர்கின்றேன்.
விடியல்
உன் முடிவை அறிவிக்கும்போது
நித்தியத்துவத்தின் உன்னதத்தில்
நானும் மூழ்குண்டு போகிறேன்.

சந்திரனே,
நாம்
ஒரே இனத்தவரல்லோம் -
இதய தாபத்தை
மனத்துயரை
என்னைப்போல் நீயும்
சொல்ல வல்லாயோ?

நீ ஒளியாலும்
நான் இருளாலும்
படைக்கப்பட்டு
உணர்வுத் தாகத்திலிருந்து
ஓராயிரம் பயணங்கள்
தூரப்பட்டுள்ளோம்.
என் ஆன்மாவின் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்துள்ளது
நான் கடக்க வேண்டிய தூரம்.

எனது போன்ற
பேரறிவின் சுடர்
ஒருபோதும் ஒளியேற்றாது
உன் வதனத்தில்.

(பாங்கே தாரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபிக்கப்பட்டோரின் பிரார்த்தனை

அகங்கைச் சொரிய
பூமியின் புராதன ஆலயத்தில்
முழந்தாளிடுவோர் -
விக்கிரகங்கள் செவிடானபோது
இறைவனை நினைக்கும் மனிதர் -
ஹிந்துக்களின் சடங்குகளும்
முஸ்லிம்களின் வழிபாடுகளும்
வீணாச்சு
புலம்புதல்,
பல் நெரித்தல் -
பஞ்சபை பராரிகளின் பரிதாபம்.

பூமியின் பெருநகர்கள்
சனநெரிசலான
பாழ்நிலமாச்சு

பாருங்கள் விதியின் முரணை -
விண்ணை முட்டும் மாளிகைகள்,
தின்று கொழுத்த திருப்தியில் பர்வேஸ்
உழைத்து உருக்குலையும் ஃபர்ஹாத்.

உலகில் காணப்படுபவை யாவும்
ஆட்சியாளரின் அசகாயமூளையில்
உதித்தவை தான் -

அறிவியலும், கல்வியும்
அவர்களுடையதே
வணிகமும்,
ஆட்சிப் பரிபாலனமும்
அவர்களுடையதே
அல்லாஹ்வின் கிருபையால்
வேண்டுவதோ -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய அங்காடியின்
அடிமைப்பிடியிலிருந்து
விடுதலை
நரக நெருப்புலையில் வேகும்
நாட்டுக்கு
விடுதலை

(அர்முகானே ஹிஜாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தானின் பாராளுமன்றம்

சாத்தான் : அரங்கேறுகின்றது
பஞ்ச பூதங்களின் புராதனக் கூத்து:
கண்ணியமான சொர்க்கவாசிகளின்
நம்பிக்கைகள் நாசமுற்று
மண்ணாவதைப் பாருங்கள்
ஆகுக (குன்) எனும் சொல்லால்
அனைத்தையும் படைத்தவன்
அழிப்பதற்குத் தயாராகிவிட்டான்

பள்ளிவாசல், தேவாலயம்,
கோவில்களுடன்
தொடர்புகளைத் துண்டித்தவன் நான்.
ஐரோப்பாவின் இதயத்தில்
ஏகாதிபத்தியக் கனவுகளை
விதைத்தவன் நான்.
வீடற்ற ஏழை எளியவர்களை
யாவும் விதிச் செயல் என
நம்ப வைத்தவன் நான்
அவர்களின் பாதுகாவலர்க்கு
முதலாளித்துவ வெறியை
ஊட்டியவன் நான்.
என்னுள் அனலும் நெருப்பால்
ஊட்டம் பெற்று
அனைத்தையும் விழுங்கத் துடிக்கும்
அவர்களின் குண்டோதரப் பசியை
அடக்க
யாரால் முடியும்?
நான் நீரூற்றி வளர்த்து
நெடுங்கிளை பரப்பி
காலத்தால் முதிர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிரச் செய்த பெருவிருட்சத்தை
தலைகுனியச் செய்ய
யாரால் முடியும்?

முதலமைச்சன் : சந்தேகமின்றி உறுதியாச்சு
நரகத்தின் சுயாதிபத்தியம்
அதன் ஆதிக்கத்தில்
தேசங்கள்
அடிமைத்தனத்தில் மூழ்கி
அழுகிப் புழுத்துப் போயுள்ளன.
காலத்துக்குக் காலம்
மண்டியிட்டுக் கிடப்பதே
அற்பர்களின் இயல்பு
- தொழுகையில்
கம்பீரமாய் நிமிர்வதல்ல.

இவ்வற்புதம் நிகழ்ந்துள்ளது
எம் ஓயாத நடவடிக்கைகளால்.
அடிமைப்புத்தியுடன்
அந்நிய மேலாதிக்கத்துக்கு
முண்டு கொடுத்து நிற்கின்றன
மதபீடங்கள்.
அவர்கள் ஊட்டும் அபினிதான்
ஆசியாவின் வியாதிக்கு மருந்து
தேவைப்படின்
தயாராயுள்ளது
பொய்புரட்டர்களின்
ஜாலவித்தை;
சோம்பலூட்டும் தோத்திரங்களை விட
அது சக்தி குறைந்ததன்று.

கூர் மழுங்கி விட்டது
உறையிடப்படாத
இஸ்லாத்தின் வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைச் சோர்வு
நடுநடுங்குகின்றது
புதிய பீரங்கியைப் பார்த்து.
முஸ்லிம் - இன்று
புனிதப் போருக்கு வாளேந்துவது
கால வழுவாகும்.

இரண்டாம் அமைச்சன்: ஆயிரம் தலை கொண்ட கொடிய
விலங்கு அதிகார வெறிகொண்டு
ஓலமிடுகின்றது -

இது நாசத்தின் அறிகுறியா?
இன்றேல் நன்மையா?
பூமியில்
புதிதாக முளைத்துள்ள
விஷமத்தனங்களை
நீங்கள் அறிய மாட்டீர்கள்

முதலமைச்சன் : இது நான் அறியாததல்ல.
எனினும் -
மேலாதிக்க வெறி அதன் வெட்கத்தை
இலை கொண்டு மறைக்கும் எத்தனம்
இது.
இதனால் அபாயமொன்றுமில்லை
என்பதனை,
உலகத்தைப் பற்றி நானறிந்த
உண்மைகள்
உறுதிப்படுத்தப்படுகின்றன.
மனிதர்கள் சுதாகரித்துக் கொண்டு
கவனிக்கவும் சிந்திக்கவும்
தொடங்கியபோது
தனிநபர் ஆட்சிக்கு
சனநாயக ஆடைபோர்த்தி
மறைத்தவர்கள் நாமன்றோ?
மேலாதிக்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான வலிமையும்
உள்நோக்கும்
வேறிடத்தில் உள்ளது;
அது நிலைத்து நிற்பதும்
சரிந்து விழுவதும்
இளவரசர்களின், அரசர்களின்
இருத்தலின் காரணத்தால் அல்ல.
நாடாளுமன்றங்கள் கூடினாலும்
அத்தாணி மண்டபத்தில்
அரசன் கொலுவீற்றிருந்தாலும்
இன்னொருவன் நிலத்தின் மீது
கண் வைப்பவன்
பிறவிக் கொடுங்கோலன் ஆவான்.
வெளித் தோற்றத்தில்
வசீகரமுகம் காட்டினாலும்
உள்ளே
ஜெங்கிஸ்கானின் மனம்போல் இருண்ட
ஜனநாயக அரசுகளை
நீங்கள் பார்க்கவில்லையா?

மூன்றாம் அமைச்சன் : கொடுங்கோன்மை கோலோச்சும்
தேசங்கள் பற்றி
கவலைப்படத் தேவையில்லை
ஆயினும் - அந்த
நாசமாய்ப் போன யுதனுக்கு
என்ன பதில் சொல்வது?
அவன் -
சினாயில் தோன்றாத
தீர்க்கதரிசி
சிலுவை சுமக்காத யேசு
இறைதூதன் அல்லன் - எனினும்
அவன் கையில்
ஒரு வேதநூல் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத்தேய மேலைத்தேய
நாடுகளுக்கு
இறுதித் தீர்ப்பு நாளை அறிவிக்கும்
இறையுணர்வின்றிக் கனலும்
அவ்விழிகள் முன்
எத்தனைத் திரைகள் பொசுங்கிச்
சாம்பலாயின?
எந்தக் கொள்ளை நோய்தான்
இதைவிட
நாசம் விளைவிக்க முடியும்?
எசமான்களின்
மண்டபத்தூண்களிலிருந்து
கயிறுகளை அறுத்துவிட்டனர்
அடிமைகள்.

நாலாம் அமைச்சன் : மாபெரும் ரோமாபுரியின்
மண்டபங்களில்
மாற்று மருந்தின் தாக்கத்தைப்
பாருங்கள்
சீசரின் சந்ததிகளுக்கு
சீசரின் கனவுகளை
வெளிப்படுத்தியுள்ளோம்.
அவர்களது வலிய கரங்களின்
அரவணைப்பில்
இத்தாலியக் கடலலைகள்
இப்போது
தேவதாருபோல் உயர
எம்பிக் குதிக்கின்றன
இபோது - அவை
தேம்பிப் பொருமுகின்றன.

மூன்றாம் அமைச்சன் : அவன்
அவன் வருங்காலத்தை
வடிவமைக்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை - நான்
நம்ப மாட்டேன்
ஐரோப்பாவின் ஆட்சியியலை
அவன்
அம்மணமாய் உரித்துக் காட்டிவிட்டான்

ஐந்தாம் அமைச்சன்
(சாத்தானை நோக்கி) : உம் சுவாசத்தின் அக்கினி மூச்சால்
உலகின் கப்பல்களை
அலைகடலில் மிதக்கவிட்டுள்ள
மகாபிரபுவே
மகிழ்ச்சி வரும்போது
மர்மங்களை வெளியிடுபவரே
உமது உலைக்களத்தில்
மண்ணும் நீரும் கலந்து
கோளாக உயிர்பெற்று
உஷ்ணப் பெருமூச்சு விடுகின்றன.
சுவனத்தில் பேதைகளாயிருந்த நாம்
உம்மை ஆசானாகப் பெற்றதால்
அறிவாளிகளாய் மாறினோம்.
பாவம் கபடற்ற மனிதர்கள்
தம் பாதுகாவலன் என
அவர்கள் போற்றும் அவன்
உம் திறமைகளை
ஆதத்துக்கு வழங்கவில்லை
பிரார்த்தனையும் தஸ்பீகு மாலையும் தான்
அவர்கள் சிந்தையை
ஆக்கிரமித்துள்ளன.
நும் முன்னால் அவர்கள்
நாணித் தலை கவிழ்ந்து
கிடக்கக் கடவர்.

மேற்கின் மோசக்கார்கள்
உமக்கு விசுவாசப்பிரமாணம் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடர்களாய் மாறிவிட்டனர்
அவர்களின் மதியூகத்தை - நான்
அதிகம் மதிப்பதில்லை
அக்கலகக்காரயூதன்
மஸ்டாக்கின் மறுபிறப்பாய்
மீண்டும் தோன்றியுள்ளான்
அதிக நாட்களாகு முன்
அவனது சினம்
அவர்களின் அங்கிகளைக்
கிழித்துக் கந்தலாக்கிவிடும்

கழுகுகள், ராஜாளிகள் மத்தியில்
இறகு கோதத் தொடங்கிவிட்டது.
பாலைவனக் காக்கை
தலைகிறங்கி
மாறத்தொடங்கிவிட்டது.
உலகின் முகம்
குருட்டாம் போக்கில்
கைப்பிடியளவு குருட்டுப் புழுதியென
நாம் நினைத்தது
வானங்கள் மீது, விசுவ வெளிமீது
வாரிச் சுழன்றடிக்கின்றது.
நடுங்கச் செய்கிறதெம்மை
நாளைய புரட்சியின் பயங்கரம்
அராஜகத்தின் விளிம்புக்குத்
தள்ளப்பட்டுள்ளது பூமி
மகா பிரபு
தங்களின் செங்கோல்தான்
எமக்குள்ள
ஒரே பாதுகாப்பு

சாத்தான் : பூமி,
சூரிய சந்திரன்,
வான மண்டலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பொருள்களிலும் இராச்சியம்
என் உள்ளங்கையில்
ஐரோப்பிய இனங்களின் குருதியில்
புதியதொரு ஜுரத்தை
உண்டு பண்ணப் போகிறேன்
திரை நீங்கப் போகின்றது
கிழக்கினதும் மேற்கினதும்
புத்தம்புதிய நாடகம்

புதியதொரு
மந்திர உச்சாடனத்தால்
அரசத் தூண்களுக்கும்
மத பீடங்களுக்கும்
வெறியூட்ட எனக்குத் தெரியும்.
எமது நாகரிகத்தைக்
கண்ணாடி செய்வோனின்
பட்டறையாய் நினைக்கும்
புத்திசாலி மூடர்களிடம்
முடியுமானால் அதன்
மதுப்புட்டியையும், கிண்ணத்தையும்
உடைத்து நொறுக்கச் சொல்லுங்கள்
இயற்கையின் கரம்
தையலைக் கிழித்த பின்
கம்யூனிஸ ஊசி நூலால்
ஒட்டுப் போட
ஒரு போதும் முடியாது.
நானா சோசலிசத்துக்கு அஞ்சுபவன்?
வீதிக் கூச்சல்காரர்கள்
கந்தைக் கிழிசல்கள்
இம்சையுற்ற மூளைகள்
வதைபட்ட ஆன்மாக்கள்

இல்லை.
எனது பாதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராட்சஷ மிருகமொன்று
குறுக்கிடுகின்றதெனில்
இன்னும் நம்பிக்கைத் தீக்கங்குகள்
நீறு பூத்த நெருப்பாகவுள்ள
அம் மக்கள் கூட்டத்தின்
இதயத்தில் கரந்துறையும்
பிராணிதான் அது.

சிதறுண்ட அவர்கள் மத்தியில்
நேர்மைத் துணிவு கொண்டோர்
இன்னும்
தோன்றத்தான் செய்கின்றனர்.
விடியலின் களங்கமற்ற பொழுதில்
துயரக் கண்ணீரால்
இதய ஒளியைச்
சுடரச் செய்வோர் அவர்கள்.

காலத்தின் உடற்கூறு கற்றறிந்தோர்
நாளைய கொடும் வியாதி
கம்யூனிஸமன்று
இஸ்லாம் என்பதை
நன்கறிவர்.
இப்போதெல்லாம்
அவர்களின் சபைகூடல்
சட்டத்தை மதிப்பதில்லை
என்பதனை நன்கறிவேன்.
முதலாளித்துவக் கொள்கையைச்
சிக்கெனப் பிடிக்கப்
பிறருடன் சேர்ந்து
ஓடுகிறான் முஸ்லிம்.
கிழக்கில்
இருள் சூழ்ந்த இவ்விரவில்
ஒளி வீசுவதற்கு
பிர்அவுனை நோக்கி நீண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூசாவின் வெண்கரம்
இன்றில்லை.
மதகுருவின் அங்கியுள்
அது மறைந்துள்ளது
இது எவ்வாறிருப்பினும்
காலத்தின் நெருக்குதல்களில்
ஒளிந்துள்ளது ஓர் அபாயம்

மாநபியின் மங்கிய அடிச்சுவடுகள்
மீண்டும் எங்காவது
கண்டுபிடிக்கப்படலாம்.
அந்த நபியின்
சட்டதிட்டங்கள் பற்றி
ஆயிரம் முறை எச்சரிக்கின்றேன்.
அவை -

பெண்களின் கௌரவத்தைப்
பேணுபவை
மனிதனை உருவாக்கி
கடிய சோதனைகளால்
புடம் போட்டெடுப்பவை
அடிமைத்தனத்துக்கு
மரண சாசனம் வழங்குபவை
முடிமன்னர் அரசிருக்கைகளை
அங்கீகரிக்காதவை
தெரு ஓர ஏழையென்றும்
பாராளும் அரசனென்றும்
பஞ்சைப் பராரியென்றும்
பாரபட்சம் காட்டாதவை
சகல மாசுகளிலிருந்தும்
செல்வத்தைப் பாதுகாப்பவை
செல்வந்தர்கள்
செல்வத்தின் பாதுகாவலரேயன்றி
வேறல்லர் எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறை சாற்றுபவை.

பூமி
புவியாளும் மன்னர்களுக்குச்
சொந்தமானதல்ல
இறைவனுக்குச் சொந்தமானது - எனப்
பிரகடனிக்கும்
மாபெரும் புரட்சியை விட
மகத்தான புரட்சி வேறேது?

இச் சட்டதிட்டங்கள்
எவர் கண்ணிலும் படாமல்
எவர் சிந்தையையும் தூண்டாமல்
முடங்கிப் புதையுண்டு கிடப்பதே
சாலச் சிறந்தது.
நம்பிக்கைகள் யாவையும்
விசுவாசியே
நழுவவிட்டமை
பரவசமூட்டுகின்றது.
இறைவனைப் பற்றிய புதிரில்
புனித வார்த்தையின்
இனிமையூட்டும் வியாக்கியானத்தில்
நீண்ட காலம் அவன்
செயல் மறந்து கிடக்கட்டும்.

அநித்தியமான உலகின்
மாயவசியப் பிணைப்புகள்
தெறித்து விழச் செய்யும் கொள்கை
படைத்த
இறை தியானியின் இரவை
விடியல் முற்றுகையிடாதிருக்கட்டும்
- மரியாளின் புத்திரர்
மரித்தவரா, மரணத்தை அறியாதவரா?
- இறை பண்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடமிருந்து
வேறானவையா அல்லது
இறைவனின் சாரமாய் அமைவனவா?
- 'வரவிருப்பவர்' எனும் வாசகத்தால்
குறிக்கப்படுபவர்
நஸாரத்தின் மீட்பரா அல்லது
யேசுவின் போர்வை அணிந்த
புதியதொரு சீர்திருத்தவாதியா?
- வேத வசனங்கள்
பின்னர் பிறந்தவையா அல்லது
நித்தியத்திலிருந்து
வெளியானவையா?
தேர்ந்தெடுக்கப்பட மக்களுக்கு
விமோசனம் தரும் விடைகள் எவை?
வேத வித்தகர்களின் விம்பங்கள்
இந்த நூற்றாண்டின் முஸ்லிமுக்கு
திருப்தி தரட்டும்.
செயல் களத்திலிருந்து அவனை
அந்நியமாக்குங்கள்
இருத்தலின் சதுரங்கப்
பலகையிலிருந்து
அவனது காய்களைப்
பறிமுதல் செய்யுங்கள்
உலக முடிவு நாள்வரை அவன்
அடிமைத்தனத்தில் உழல்வதே மேல்.
உலகம் நிலையற்றது என்ற
நம்பிக்கையை
உறுதியாய்ப் பற்றிப் பிடித்துக் கொண்டு
உலகைப் பிறருக்காகத் துறந்து விட்டு
வாழ்க்கை அரங்கின்
காட்சிகளைக் கண்ணுறாமல்
- கண்களைத் துணியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியவனாய் -
பரதேசிகளின் பாடலில் அவன்
பூரித்துக் கிடக்கட்டும்

அச்சமூகம் ஒருநாள்
விழித்தெழக் கூடும் - என
ஒவ்வொரு மூச்சிலும் இன்னும் நான்
அஞ்சி நடுங்குகிறேன்
இம் முழு பிரபஞ்சத்தின்
காவலராய் இருங்கள் - என
அச்சமூகத்துக்குக்
கட்டளையிட்டுள்ளது
அவர்களின் சன்மார்க்கம்.
தியானத்தின் சக்கையாலான
காலையின் பானத்தால்
கலக்கமூட்டி
அச்சமூகத்தின் ஆன்மாவை
நெரித்து இறுக்குங்கள்
நிராசை என்னும்
அடிமைச் சங்கிலியால்

(அர்கானே ஹிஜாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பதாண்டு நினைவுக் கட்டுரை
மகாகவி இக்பாலும் இஸ்லாமும்

அபூதாலிப் அப்துல் லதீஃப்

தமிழாக்கம்: பண்ணாமத்துக்கவிராயர்

பஞ்சாப் வேதாந்தக் கவி புல்லேஹ் ஷாஷவுடைய பாடல்கள் திவான் அலி பாட, அவற்றைக் கேட்ட வண்ணம், 1938 ஏப்ரில் 21 ஆந் திகதி அதிகாலைப் பொழுதில், இறுதி மூச்சை விட்டு இவ்வுலகு நீத்த டாக்டர் முஹம்மத் இக்பால் 19 ஆம் நூற்றாண்டின் ஸய்யத் அஹமத் கான் போன்று எமது நூற்றாண்டின் செல்வாக் கோச்சும் மாபெரும் இஸ்லாமி சிந்தனையாளராகத் திகழ்கிறார்.

இது அகஸ்மாத்தாய் நேர்ந்ததல்ல. 1857 இல் ஏற்பட்ட படுவீழ்ச்சியிலிருந்து முஸ்லிம்களை மீட்பதற்கு உயிர்ப்புமிகு பாய்ச்சுதல் வழங்க முயன்ற அலிகார் இயக்கம், இக்பாலில் உச்சநிலை காண்கிறதெனச் சொல்லப்படுவது மெத்தச் சரி.

பிரபல இஸ்லாமியவியலறிஞர் பேராசிரியர் காண்ட்வெல் ஸ்மித் கூறுகிறார். ''சமயம் பற்றிப் பேசும் எந்த நவீன முஸ்லிமும் இக்பால் விட்ட இடத்திலிருந்து தொடங்க வேண்டும், அல்லாவிட்டால் அவருக்குச் செவிசாய்த்துப் பயனில்லை.''

நினைவாஞ்சலி

இக்பாலின் ஐம்பதாவது மறைவுதின நினைவாஞ்சலியின் போது, நம் கால நடைமுறையின் நிச்சயமற்ற தன்மைகளை, சவால்களைச் சந்திப்பதில் இஸ்லாத்துக்கு இக்பால் வழங்கிய பங்களிப்பை மதிப்பிடுவது பொருத்தமானதே.

உலக சிந்தனையின் வரலாற்றுக் கட்டத்தில் இஸ்லாமிய சிந்தனையினதும், கலாசாரத்தினதும் அத்தியாவசிய அம்சங்கள் பற்றி இக்பாலின் உறுதியான ஒழுங்கு முறையான விளக்கம் ''இஸ்லாத்தில் சமய சிந்தனையின் புனர் நிர்மாணம்'' என்ற அவரது நூலில் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1928 இல் மெட்ராஸ் சென்னை ஹைதராபாத், மைசூர் பல்கலைக்கழகங்களில் அவர் ஆற்றிய ஆறு சொற்பொழிவுகளின் தொகுப்பு இந்நூல்.

''நான் புரிந்துகொண்ட இஸ்லாம்'' எனத் தாம் இந்நூலுக்குப் பெயரிட விரும்பியதாய் ஒப்புக் கொண்டு, மேலும் ''இஸ்லாம் ஆன்மீக ரீதியாய் அதிதுரித வேகத்தில் மேற்கு நோக்கி நகர்வது நவீன வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க புலக் காட்சியாகும். இவ்வியக்கத்தில் ஏதும் பிழையில்லை..... ஐரோப்பியக் கலாசாரத்தின் கண்ணைப் பறிக்கும் புறத் தோற்றம் எமது இயக்கத்தை ஸ்தம்பிக்கச் செய்து விடும். இதனால் அக்கலாசாரத்தின் உண்மையான உட்புறத்தை அடைய முடியாது போகலாம் என்பதே நமக்குள்ள ஒரே பயம்'' எனக் கூறினார் இக்பால்.

இந் நவிற்சியின் நோக்கில் ''புனர் நிர்மாணம்'' எமது ஆழ்ந்த கவனத்தையும், ஆய்வையும் வேண்டி நிற்கின்றனது. குறிப்பாகத் தற்போதைய மத வைதீகவாத அடிப்படைவாத வெடிப்பின் கிலிக் கூச்சலின் தொடர்பாய் இக்கவனமும் ஆய்வும் அத்தியாவசியம்.

நவீன அறிவு

மீண்டும் இக்பால் கூறுகிறார் ''நவீன அறிவை மரியாதையுடன் ஆனால், சுதந்திர நோக்குடன் அணுகுவதும், நம்முன்னோருடன் நாம் முரண்பட நேரினும் அவ்வறிவின் வெளிச்சத்தில் இஸ்லாமிய போதனைகளை நயப்பதும் தான் நமக்குத் திறபட்டுள்ள ஒரே வழி.''

இக்பாலுக்கு முன் ஜமாலுத்தீன் ஆப்கானியும், ஷெய்க் முஹம்மத் அப்துஹ்வும், முஸ்லிம் சமூகங்களின் வீழ்ச்சிக்கு புற அச்சுறுத்தலும் உள் நலிவும் காரணிகளாகப் புரிந்துகொண்டு உள்ளிலிருந்தே ஏகாதிபத்திய எதிர்ப்பின், சீர்திருத்தத்தின் உபாயங்களை முறையே வகுத்தெடுத்தனர்.

''ஷிக்வா'' (முறையீடு) ''ஜவாபே ஷீக்வா''வில் (முறையீட்டுக்குப் பதில்) விசுவாசிகளை அவர்களது விசுவாசமின்மைக்காகக் குறை கூறிய இக்பால், காலப்போக்கில் குத்இ; ''அஸ்ராரே குத்இ'', ''ஜாவித்நாமா'' முதலியவற்றில் செயல்மூலம் சீர்படுத்தல் என்ற கோட்பாட்டை வளர்த்தெடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலை ஏகாதிபத்தியம்

மேலை ஏகாதிபத்தியவாதத்தின் உடனிகழ்வாய் முஸ்லிம்களின் வீழ்ச்சியை ஒரு பொதுப் புலக்காட்சியாகச் சரியாகக் கண்டறிந்த இக்பால் பேராசிரியர் அஹமத் அலியின் வார்த்தைகளில் சொல்வதானால், ''அதனை அது நிகழ்ந்த வரலாற்று அர்த்தத்துடன் தொடர்புபடுத்தத் தவறிவிட்டார்.'' ''சநாதன நம்பிக்கைகள் இல்லாது போனமையை அவர் காரணங் காட்டினார்''

''வருங்காலம் நோக்கி அறிவு பூர்வமாகப் பார்க்கும் படியும், பக்தாதின் பெருமையில் கண்கள் பதிந்து'' நின்று விடாமலிருக்கும்படியும் அவர் முஸ்லிம் உலகை வலியுறுத்தினார்.

புனர் நிர்மாணம்

''புனர் நிர்மாணத்தில்'' அவர் துணிந்துரைக்கிறார். இஸ்லாம் கூறுகிறபடி எல்லா உயிரினதும் இறுதி ஆன்மீக அடிப்படை நித்தியமானது. வேறுபட்ட தன்மைகளாலும், மாற்றத்தினாலும் அது தன்னை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய யதார்த்த கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகம், அதன் வாழ்வில் நித்தியத்தினதும், மாற்றத்தினதும் வகைப்பாடுகளை இணைக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அது தனது கூட்டு வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான சாசுவதமான கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். சதாவும் மாறிக் கொண்டிருக்கும் உலகில் சாசுவதத்தன்மை நம்மைக் காலூன்ற வைக்கின்றது. ஆனால், குர்ஆன் கூறும் இறைவனின் மாபெரும் ''அடையாளங்க''ளில் ஒன்றான மாற்றத்தின் சகல சாத்தியப்பாடுகளையும் புறத்தொகுக்குவதாய் நித்தியக் கொள்கைகள் புரிந்து கொள்ளப்படும் போது, அத்தியாவசியமாய் அசையும் தன்மை கொண்டது அசைவற்றுப்போக நேர்கிறது.....''

''அப்படியாயின் இஸ்லாத்தின் அமைப்பில் அசைவின் அடிப்படையாது?'' எனக் கேட்டு விட்டு அவரே பதில் கூறுகிறார். ''இதுவே இஜ்திஹாத் என அறியப்படுகின்றது.''

சமூக அமைப்பு

அவரின் கவனத்தை ஈர்த்த இது வித்தியார்த்தம் சம்பந்தமான ஒன்றல்ல. ஏனெனில் நவீன அர்த்தங்களில் இஸ்லாம் பற்றி மறுசிந்தனை செய்யத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறியமை ''இஸ்லாத்தின் இருதயத்தில் ஓர் ஓட்டை''யாக இருந்து வந்துள்ளது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் பக்தாதின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட முஸ்லிம் சமூகங்களின் சீர்குலைவு மேலும் தொடராமல் தவிர்ப்பதற்கு இஸ்லாத்தின் பழைமை சமூக அமைப்பைப் பாதுகாப்பதில் முழுப் பிரயத்தனங்களையும் மேற்கொண்டனர்.

''சகல புதுமையையும் புறத்தொதுக்கினர். ஒன்று ஆரம்பகால முஸ்லிம் அறிஞர்கள் வியாக்கியானம் செய்தது போன்று ஷரீஅத் சட்டம்'' பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இஸ்லாமிய மத வியலாளர்கள் காட்டிய இப் ''போலியான பழைமை பாராட்டல் இஸ்லாத்தின் உள்ளுணர்வுக்கு முரணானதென'' இக்பால் வலியுறுத்தினார். பாரம்பரிய இஸ்லாத்தின் ஒரு புறம் மட்டுமே திறந்தடைத்த பாதையையுடைத்துக் கொண்டு புதிய வழிகளை நோக்கிப் புறப்படுவதற்காக அவர் அலைந்தார். (அப்பாஸியாக்களின் எழுச்சி வரை குர்ஆன் தவிர வேறெந்த இஸ்லாமிய சட்டமும் எழுத்தில் இருக்கவில்லை)

இக்பாலுக்கு முன் இப்னுதைமியா, அப்துஹ், வஹாப், ஷா வலியுல்லாஹ் போன்றோர் பாப்-அல்-இஜ்தி ஹாத் (தனிமனிதத் தீர்ப்பின் வாசல்) மூடப்பட்டு விட்டது என்று கொள்கைப் பிரகடனஞ் செய்த முஸ்லிம் பழைமை வாத மத சிந்தனையை எதிர்த்து நின்றனர். துருக்கியிலும் எகிப்திலும் நவீனவியலாளர்கள் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றினர் அந்நாடுகளில் ஸ்தாபனங்களது படிமுறை வளர்ச்சியையும், சரிக்கட்டு தலையும் இக்பால் வரவேற்றார். சமூகவியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஹலீம் ஸாபியின் கொள்கையை வியந்தார். ''துருக்கியரைப் போல் நாமும் ஒருநாள் நமது அறிவு ஜீவபிதிரார் ஜிதத்தைப் புனர் மதிப்பிடு செய்ய வேண்டியிருக்கும்'' என்று எழுதிய இக்பால் இவ்வாறு முடிக்கிறார். ''அடிப்படைச் சட்டக் கொள்கைகளைத் தமது சொந்த அனுபவங்களினதும், நவீன வாழ்க்கையின் மாற்றப்பட்ட நிலைமைகளினதும் வெளிச்சத்தில் மறு வியாக்கியானம் செய்வதற்காக தற்போதையத் தலைமுறை உரிமை பாத்தியதை கொண்டாடுவது முற்றிலும் நியாயம் என்பதே எனது அபிப்பிராயம். வாழ்க்கையென்பது தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கும் சிருஷ்டியின் போக்கு என்ற குர்ஆனின் போதனை ஒவ்வொரு தலைமுறையும் அதன் முன்னோர்களின் செயலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டுக் கட்டையின்றி வழிநடாத்தப்பட்டு, அதன் சொந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனுமதிக்கப்படுவதை அத்தியாவசிய மாக்குகின்றது.''

விஞ்ஞான அங்கீகாரம்

இஸ்லாத்துக்கு விஞ்ஞான அங்கீகாரம் காண்பதற்கான இயக்கம் வலுவூட்டப்பட்டது. ராம்மோஹன்ராய்; தாகூர் போன்ற சீர்திருத்த வாதிகள் இதனை ஹிந்து மதத்திற்காக ஏலவே செய்திருந்தனர்.

இக்பாலின் தாக்குதலுக்கு இலக்கான இன்னொரு பழைமைவாதக் கோட்டை இஸ்லாத்தில் 'இஜ்மா' (சமூகத்தின் அபிப்பிராயம்) பற்றிய கோட்பாடாகும். உலமாக்களின் கருத்தில் இது உலமாக்களின் பிரத்தியேக உரிமையாகவிருப்பதை ஸய்யத் அஹ்மத்கானும், ஷிராக் அலியும் ஏலவே எதிர்த்திருந்தனர். இக்பாலைப் பொறுத்தவரை இஜ்மா ''இஸ்லாத்தில் மிகவும் முக்கியமான சட்டக் கருத்தாகும்'' இஸ்லாமிய அரசொன்றில் பாரளுமன்ற முறையில் பெறப்படும் பொது அபிப்பிராயத்தை உள்ளடக்கக் கூடிய வீச்சுள்ளதாய் அதனைப் புரட்சிகரமான வகையில் விஸ்தரித்தார் இக்பால், இன்று அது பொதுஜன அபிப்பிராயத்துக்கும், பாராளுமன்ற அமைப்புகளுக்கும் இறுதிப் பகுப்பாய்வில் ஜனநாயகத்துக்கும் சமானமாய்க் கருதப்படுகின்றது.

காலத்தின் ஒளி

நமது காலத்தின் தேவைகளுக்கேற்ப நமது காலத்தின் ஒளியில் குர்ஆன் கற்கப்படவும், வியாக்கியானஞ் செய்யப்படவும் வேண்டுமென உறுதியாகச் சொல்லி வந்தார் இக்பால்

குர்ஆன் மீது இக்பாலின் அவதானம் பற்றி நடப்புக்கால இஸ்லாமிய அரங்கில் மீட்பர்கள் உயிர்ப்பிப்பவர்கள் என்ற பிரமை கொண்டோரின் பணியாளாக அது மாறியுள்ள வேளையில், சிந்தித்தல் பயனுடைத்தாகும். ''குர்ஆனில் சட்டக் கோட்பாடுகளின் அஸ்திவாரத்தின் பக்கம் திரும்பின் மனித சிந்தனைக்கும், சட்டவாக்கத் துக்கும் இடமளிக்காமல் விடுவதிலிருந்து வெகுதொலைவில் அக்கோட்பாடுகளின் ஆழ அகலமும் உண்மையில் இஸ்லாமிய சிந்தனையைத் தூண்டுவதாய்ச் செயற்படுவது தெட்டத் தெளிவாகின்றது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாலுத்தீன் ஆப்கானி போன்று, அப்துஹ் போன்று ஸய்யத் அஹ்மத்கான் போன்று இக்பால் ஒரு நவீனத்துவ வாதியாவார் எனவே இன்று அவர் எமக்கு மிக இணக்கமானவராய்க் காணப்படுகின்றார்.

இக்பால் சரிதையை ''வேட்கைமிகு யாத்திரை'' என்ற நூலாய் விமர்சனப் பாங்கில் எழுதிய இக்பால் சிங், ''முஸ்லிம் சிந்தனை நிலப் பிரபுத்துவ சட்டகத்திலிருந்து நவீன சட்டகத்துக்கு மாற்றமுறுவதை துரித கதியுறச் செய்தார்'' இக்பால் எனக்கூறுவது இதனைத் தொகுத்துரைப்பதாய் அமையும்.

நன்றி; தினகரன்

ஜூன், 12,1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாமா இக்பாலின் கவிதைகள் கவிதை வடிவில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் நிறைவே இந்நூல். இக்பாலின் அர்முகானே ஹிஜாஸ், குர்துபா பள்ளிவசல், பாலே ஜிப்ரீல், ருபய்யர்த்கள், கஸல்கள் எனப் பல படைப்புக்கள் இந்நூலை அலங்கரிக்கின்றன.

இக்பாலின் கவிதை உள்ளடக்கத்தையும் அழகியலையும் அனஸின் இந்நூலுக்கான அறிமுக உரை முன்வைக்கின்றது. இக்பாலின் கவிதைகளில் முஸ்லிம் இலக்கிய உலகுக்கான பாரம்பரியங்களும் சமயப் புனருத்தாரண சிந்தனைகளும் தனியான இடத்தை வகிக்கின்றன. இந்த எண்ணங்களை மீளநோக்குவதும் இந்நூலின் இலட்சியமாகும்.

மொழிபெயர்ப்பிலும் கவிதை மொழிபெயர்ப்பிலும் இலக்கிய உலகில் எஸ்.எம். பாரூக் (பண்ணாமத்துக் கவிராயர்) இற்கு எனத் தனியான இடமுண்டு. இக்பால் சிந்தனைகளில் நெருங்கிய ஈடுபாடுள்ள ஒரு கவிஞனின் மொழிபெயர்ப்பு இது. தமிழ் பேசும் இலக்கிய உலகில் இக்பால் கவிதைகளும் சிந்தனைகளும் மீண்டும் பேசப்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் இந்நூல் வெளிவருகிறது. இக்பால் கவிதைகளைப் பயில்வோருக்கு இது சிறந்த துணை நூலாக அமையும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகும்.

மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்ணாமத்துக் கவிராயர் (எஸ்.எம். பாரூக்) 1960 களில் எழுத்துலகிற்கு அறிமுகமானார். இவர் மாத்தளை ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணவர். இன்ஸான் பண்ணையின் முன்னோடி இலக்கியவாதிகளில் ஒருவர். அந்த இதழின் துணை ஆசிரியராகவும் பணியாற்றினார். பாரூக் பல பலஸ்தீனக் கவிதைகளையும் மற்றும் பல மொழிபெயர்ப்புக்களையும் வழங்கியுள்ளார். கவிஞர் எனப் புகழ்பெற்றுள்ள இவரது மொழிபெயர்ப்புக் கவிதைகள் பல 'காற்றின் மௌனம்' என்ற தொகுதியாக 1990 ஆம் ஆண்டு வெளிவந்தது.

Printed by Kumaran Press (Pvt) Ltd.0112 364550

விடயம்: மொழிபெயர்ப்பு இலக்கியம்

விலை ரூபா 450.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org